



# வருடாந்த அறிக்கை - 2014

## தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. கூட்டுரிமைத் தத்துவம் | 01 |
| 2. இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் | 05 |
| 3. தே.கா.ந.பொ. நிதிய சபை உறுப்பினர்கள் - 2014 | 07 |
| 4. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய முகாமைத்துவக் குழு - 2014 | 11 |
| 5. தவிசாளரின் மீளாய்வு | 16 |
| 6. முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும் | 19 |
| 7. நிலைத்து நிற்கும் தன்மையினை அறிக்கையிடல் | 49 |
| 8. தொழில்முயற்சி ஆட்சி | 54 |
| 9. தொழில் முயற்சி இடர் முகாமைத்துவம் | 60 |
| 10. கணக்காய்வுக் குழு அறிக்கை | 65 |
| 11. பணிப்பாளர்களின் அறிக்கை | 68 |
| 12. நிதிக் கூற்றுக்கள் - 2014 | 73 |
| 13. கணக்காய்வாளர் அறிக்கை | 119 |
| 14. ஒரே பார்வையில் ஒன்பது ஆண்டுகள் | 132 |
| 15. கூட்டுரிமைத் தகவல்கள் | 135 |



# 1. கூட்டுரிமைத் தத்துவம்



## தொலைநோக்கு

# தேவையுள்ள சகல துறைகளுக்கும் காப்பு வலையமைப்பையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தல்



# செயற்பணி

பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல்:

- சமூகத்தில் தேவையுள்ள சகல பிரிவினருக்கும் தாங்கிக்கொள்ளக்கூடியதும் வினைத்திறனானதும் முற்போக்கானதுமான காப்புறுதித் திட்டங்களை ஏற்படுத்தல்;
- மாற்றமுறும் தேவைகளிலிருந்து எழும் உயர் இடர்களிலிருந்து காப்புப் பெறுவதற்கு வளங்களைத் திரட்டுதல் மற்றும் வேறு ஒழுங்குகளுக்கு ஊடாக உள்நாட்டுச் சந்தைக்குத் தீர்வுகளை வழங்குதல்; மற்றும்
- உள்நாட்டுக் காப்புறுதிச் சந்தைக்கு மேலதிக ஆற்றலினை அளிப்பதற்கென இலங்கையில் மீள் காப்புறுதிச் சந்தை ஒன்றை ஏற்படுத்தல்.

# கூட்டுரிமைப் பெறுமானங்கள்




- நம்பகத்தன்மை
- நேர்மை
- பொறுப்புக்கூறல்
- நிதி ரீதியான காத்திரத் தன்மை
- தொழில்வாண்மை மிக்க முகாமைத்துவம்



# 2. இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்

- சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி உத்தேச இலக்குக் குழுக்களின் நன்மைக்காக காப்புறுதித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- மீள் காப்புறுதிச் சந்தையில் குறைந்தபட்சம் 50% இனைக் கைப்பற்றுவதற்கு மீள் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தினை வடிவமைத்து முகாமை செய்தல்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல காப்புறுதித் திட்டங்களினதும் முகாமைத்துவத்தைத் தன்னியக்கப்படுத்துதல்.

- சகல பயனாளிகளுக்கும் கூடிய விளைதிறன் வாய்ந்த சேவையினை வழங்குவதற்கு மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.

- அடுத்துவரும் 5 ஆண்டு காலப்பகுதியில் பங்குதாரர்களுக்கான உச்சபட்ச வருவாயை அடைந்துகொள்வதற்கென முதலீடுகளை வினைத்திறனாக முகாமை செய்தல்.

- கல்வி விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக உரிய காப்புறுதித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கென அக்கறை கொண்ட தரப்பினரை தூண்டுதலும் ஊக்குவித்தலும்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எதிர்கால நடவடிக்கைகளை சமாளிப்பதற்கென போதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

- இடர் முகாமைத்துவ அலகொன்றை நிறுவி சந்தை ஆய்வுகளை நடாத்துதல் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தியத்திற்கு அதன் எதிர்கால காப்புறுதித் தொழில் தொடர்பில் வழிகாட்டலினை வழங்குதல்.



# 3. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபை உறுப்பினர்கள் -2014



**திரு. டி. விதானகமாச்சி**

தவிசாளர் -2014





**திரு. ஜே. தடல்லகேதிரு. ஏ.கே. செனவிரத்னதிரு. டபிள்யூ. எச். பியதாச**

(சபை உறுப்பினர்-2014) (சபை உறுப்பினர்-2014) (சபை உறுப்பினர்-2014)




**திரு. என். குலசேகரகலாநிதி. லோகித்த சமரவிக்ரம**

(சபை உறுப்பினர்-2014) (சபை உறுப்பினர்-2014)

**திரு. டி. விதானகமாச்சி -** தவிசாளர் -2014

திரு. டி. விதானகமாச்சி அவர்கள் 2012.10.09 ஆம் திகதியன்று தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் (தே.கா.ந.பொ.நி.) தவிசாளராக நியமிக்கப்பட்டார். அவர் சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பீஎஸ்சி (தொழில் நிர்வாகம்) பட்டம் ஒன்றினையும், கொழும்பு பட்டப்பின் முகாமைத்துவக் கற்கைகள் நிறுவகத்திலிருந்து அரச நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினையும் அதேபோல இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திலிருந்து நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா ஒன்றினையும் பெற்றுள்ளார்.

திரு. டி. விதானகமாச்சி அவர்கள் அரசாங்க சேவையில் சில பதவிகளில் முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் பிரதித் திறைசேரிச் செயலாளராக இருந்தார். திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியவாறான நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் சிரேஸ்ட பதவிகளை அவர் முன்னர் வகித்துள்ளார். விமான மற்றும் விமான சேவைகள் நிறுவனம், இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, சிடபிள்யூஈ (CWE) மற்றும் லக் சதொச லிமிட்டெட் நிறுவனம் போன்ற பல அரச நிறுவனங்களின் சபைகளில் அவர் சேவையாற்றியுள்ளார்.

**திரு. ஜே. தடல்லகே –சபை உறுப்பினர்**

திரு. ஜே. தடல்லகே அவர்கள் 2010.06.23 ஆம் திகதியன்று சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 2014 ஆம் ஆண்டு அவர் அரசாங்க நிர்வாக அமைச்சின் மேலதிக செயலாளராக சேவையாற்றி வந்ததுடன் இலங்கை நிர்வாக சேவையின் சிரேஸ்ட அலுவலரும் ஆவார்.

**திரு. ஏ.கே. செனவிரத்ன – சபை உறுப்பினர்**

திரு. ஏ.கே. செனவிரத்ன அவர்கள் 2010.07.08 ஆம் திகதியன்று சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 2014 ஆம் ஆண்டு அவர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அரசிறைக் கொள்கைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றி வந்துள்ளதுடன் இலங்கை நிர்வாக சேவையின் சிரேஸ்ட அலுவலரும் ஆவார்.

**திரு. என். குலசேகர – சபை உறுப்பினர்**

திரு. என். குலசேகர அவர்கள் 2011.07.18 ஆம் திகதியன்று சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 2014 ஆம் ஆண்டு அவர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் பிரதம கணக்காளராக சேவையாற்றி வந்துள்ளார் அத்துடன் அவர் இலங்கை கணக்காளர் சேவையின் சிரேஸ்ட அலுவலரும் ஆவார்.

**கலாநிதி. லோகித்த சமரவிக்ரம – சபை உறுப்பினர்**

கலாநிதி. லோகித்த சமரவிக்ரம அவர்கள் 2010.06.11 ஆம் திகதியன்று சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

**திரு. டபிள்யூ. எச். பியதாச – சபை உறுப்பினர்**

திரு. டபிள்யூ. எச். பியதாச அவர்கள் 2010.07.10 ஆம் திகதியன்று தொழிற்படு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.



# 4. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய முகாமைத்துவக் குழு -2014

## நிதித் திணைக்களம்



நிதித் திணைக்களத் தலைவர் (M)

அம்மணி. தம்மிக்க வீரக்கோன்

1.கணக்கியலில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் - சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

2.இணை உறுப்பினர் – இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம்



செலவின மற்றும் முதலீட்டுப் பிரிவுத் தலைவர் (AM)

அம்மணி. ரந்திமா டீ.எம். மானகே

1.களனிப் பல்கலைக் கழகத்திலிருந்தான வர்த்தகமாணி (பீகொம்) (விசேட) பட்டம்



கணக்கீடு மற்றும் நிதி அறிக்கையிடல் பிரிவுத் தலைவர் (AM)

அம்மணி. காயத்திரி சொய்சா

.1 கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்தான தொழில் பட்டம் (விசேட) நிர்வாக மாணி

2. சீமா )CIMAஇறுதிப் பரீட்சையினைச் ( சித்தியெய்தியவர்

## ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுத் திணைக்களம்



ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுத் திணைக்களத் தலைவர் (AM)

திரு. ராஜித் குணசேகர

1.சி.ஐ.எம்.ஏ. (யு.கே) இனுடைய பட்டய முகாமைக் கணக்காளர் – ஏசிஎம்ஏ (யு.கே), சிஜிஎம்ஏ

2. கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்தான நிதியில் தொழில் நிர்வாக முதுமாணிப் பட்டம்

3. எம்.சி.ஐ.எம். (பட்டய சந்தைப்படுத்தல் நிறுவக உறுப்பினர் - யு.கே)

4.சி.ஐ.எம். - (யு.கே) இலிருந்தான சந்தைப்படுத்தலில் தொழில்சார் பட்டப்பின் டிப்ளோமா

5. பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்தான விவசாய விஞ்ஞானமாணி (விசேட) பட்டம் (பொருளியலைப் பிரதான பாடமாகக் கொண்ட பாட சிற்றலகுடன்)

6.இந்தியக்காப்புறுதி நிறுவகத்தின் உரிமைச் சான்றாளர் மட்டப் பரீட்சைகள்

## சட்டத் திணைக்களம்



சட்டத் திணைக்களத் தலைவர் (AM)

அம்மணிருகேமஞ்சுளா கு .
எல்எல்பீ (LLB) கௌரவப் பட்டம் (கொழும்பு)

## பொது உரிமைக் கோரிக்கைத் திணைக்களம்



பொது உரிமைக் கோரிக்கைத் திணைக்களத் தலைவர் (AM)

திரு. ரீ.ஜீ. லக்ஷ்மன்

1.வர்த்தகமாணி (விசேட) பட்டம்

2.உரிமைச் சான்றாளர் சான்றிதழ் – இந்தியக் காப்புறுதி நிறுவகம்

## அக்ரஹார திணைக்களம்



அக்ரஹார திணைக்களத் தலைவர் (AM)

திரு. அனுர சமரகோன்

1.சிறீ ஜெயவர்த்தனபுரபல்கலைக்கழகத்திலிருந்தான தொழில் நிர்வாகம், வியாபாரப் பொருளியலில் விஞ்ஞானமாணி (விசேட) பட்டம்

2. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்திலிருந்தான பொதுக் காப்புறுதியில் உயர்தர சான்றிதழ்

3. இந்தியக்காப்புறுதி நிறுவகத்தின் உரிமைச் சான்றாளர் மட்டப் பரீட்சைகள்

## பயிர்க் காப்புறுதித் திணைக்களம்



பயிர்க் காப்புறுதித் திணைக்களத் தலைவர் (AM)

அம்மணி. நிமேஷா சஹபண்டு

1.கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்தான வியாபாரக் கற்கைகள் முதுமாணி (MBS)

2. தொழில் நிர்வாக மாணி – கொழும்பு பல்கலைக்கழகம்

**3.** இந்தியக்காப்புறுதி நிறுவகத்தின் உரிமைச் சான்றாளர் மட்டப் பரீட்சை

## வருமானத் திணைக்களம்



வருமானத் திணைக்களத் தலைவர் (M)

அம்மணி.நிமாலி பெரேரா

1. விவசாய விஞ்ஞானமாணி - பேராதனைப் பல்கலைக்கழகம்
2. இந்தியக்காப்புறுதி நிறுவகத்தின் உரிமைச் சான்றாளர் மட்டப் பரீட்சைகள்



பொருள் கையாள்கை மற்றும் சொத்து முகாமைத்துவப் பிரிவுத் தலைவர் (AM)

சித்தர அசங்க ஜயலத்

1.பீஎஸ்சி (Bsc.) (முகாமைத்துவம்) பட்டம் - சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

2.வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா - கொழும்பு பல்கலைக்கழகம்

## மனிதவள மற்றும் நிர்வாகத் திணைக்களம்



மனிதவள மற்றும் நிர்வாகப் பிரிவுத் தலைவர் (AM)

அம்மணி. உபேக்ஷா ஏக்கநாயக்க

1.பிரயோக நிதியில் விஞ்ஞான முதுமாணி -சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
1. பீஎஸ்சி (Bsc.) முகாமைத்துவ (அரச நிர்வாகம்) விசேட பட்டம் - சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
2. இந்தியக்காப்புறுதி நிறுவகத்தின் உரிமைச் சான்றாளர் மட்டப் பரீட்சைகள்

## தகவல் தொழில்நுட்ப (IT) திணைக்களம்



தகவல் தொழில்நுட்ப (IT) திணைக்கள தலைவர் (AM)

திரு. கவிந்திரா ஜயசிங்க

1.தகவல் முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி (M.Sc.) பட்டம் – இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம்
2. தகவல் தொழில்நுட்பத்தில் பீ.எஸ்சி (B.Sc.) (விசேட) கௌரவப் பட்டம் – இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம்
3. இந்தியக்காப்புறுதி நிறுவகத்தின் உரிமைச் சான்றாளர் மட்டப் பரீட்சை
4.இலங்கை கணனிச் சங்க உறுப்பினர் - இலங்கை கணனிச் சங்கம்
5. பிரித்தானிய கணனிச் சங்கத்தின் தொழில்சார் உறுப்பினர் – யு.கே

## மீள்காப்புறுதி திணைக்களம்



மீள்காப்புறுதிதிணைக்களத் தலைவர் (AM)

அம்மணி. தெஷானி நாணயக்கார

1. பொருளியலில் கலைமாணி (விசேட) பட்டம் - சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

2. இந்தியக்காப்புறுதி நிறுவகத்தின் உரிமைச் சான்றாளர் மட்டப் பரீட்சை

3. AAT - AAT - இலங்கை

## வே.க.சி.கு. & ப.(SRCC & Tr) திணைக்களம்



வே.க.சி.கு. & ப (SRCC & Tr)திணைக்களத் தலைவர் (AM)

அம்மணி. தரங்கி அமரசிங்க

1.உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா – உயர் தொழில்நுட்ப நிறுவகம்

2. இந்தியக்காப்புறுதி நிறுவகத்தின் உரிமைச் சான்றாளர் மட்டப் பரீட்சை

## பொது காப்பீட்டுப் பொறுப்பேற்றல் திணைக்களம் மற்றும் அனுராதபுரக் கிளை



பொது காப்பீட்டுப் பொறுப்பேற்றல் திணைக்களம் மற்றும் அனுராதபுரக் கிளை தலைவர் (AM)

அம்மணி. உபேக்கா சூரியமுதலி

1. கலைமாணி பொதுப் பட்டம் – களனிப் பல்கலைக்கழகம்

## அம்பாந்தோட்டைக் கிளை



அம்பாந்தோட்டைக்கிளைத் தலைவர்

அம்மணிசித்ரா ராஜபக்ச .



# 5. தவிசாளரின் மீளாய்வு

## ஆண்டறிக்கை – 2014 இனைச் சமர்ப்பித்தல்

2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எட்டாவது தொழிற்பாட்டு வருடமாக உள்ள அதன் ஆண்டறிக்கை – 2014 இனை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

## பேரினப் பொருளாதார சுற்றாடல்

தேசிய பொருளாதாரமானது 2013 ஆம் ஆண்டிலுள்ள 7.2% இற்கு எதிராக 7.4% வீதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. சேவைத் துறையானது 6.5% இனால் வளர்ச்சியடைந்த அதேவேளை 2013 ஆம் ஆண்டிலுள்ள 5.9% உடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் மெய் ஆதன உப துறை என்பவை 6.6% ஆன உயர் வளர்ச்சி வீதத்தினை அடைந்துள்ளன. எனினும், காப்புறுதித் தொழிலானது 5% இற்குக் குறைவடையும் அதன் வளர்ச்சி வீதத்துடனான வீழ்ச்சி ஒன்றினை அனுபவித்தது. நீண்டகாலக் காப்புறுதித் தொழில் 7% இனால் வளர்ச்சியுற்ற போது பொதுக் காப்புறுதித் தொழிலினால் அடையப்பெற்ற வளர்ச்சி வீதமானது ஓர் அதிகரித்துச் செல்லும் இணைப்பு விகிதத்தின் மூலம் இணைக்கப்பட்ட 3.6% ஆக மாத்திரமே இருந்தது.

## செயற்றிறனும் பங்களிப்பும்

குறைந்த வளர்ச்சி ஒன்றை அனுபவித்து வந்த காப்புறுதிச் சந்தை ஒன்றுக்குள் தொழிற்பட்ட போதிலும், தே.கா.ந.பொ. நிதியத்தினால் விற்பனைப் புறள்வினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதன் மொத்த ஈட்டிய தவணைக் கட்டணத்தில் (GWP) 40% ஆன குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஒன்றினை அடையக்கூடியதாக இருந்தது. இவ் வளர்ச்சியானது அநேகமாக முதலீட்டுப் பட்டியலை இரட்டிப்பாக்கி 96% ஆக பதிவுசெய்யப்பட்ட மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு முதன்மைக் காரணியாக அமைந்தது. வே.க.சி.ப. (SRCC & T) நிதியமும் 11% ஆன வளர்ச்சி ஒன்றினைப் பதிவுசெய்ததன் மூலம் இவ் வளர்ச்சிக்குப் பங்களித்தது.

தே.கா.ந.பொ. நிதியத்தினால் பிறப்பிக்கப்பட்ட இலாபமும் திரட்டு நிதியத்திற்கு ரூபா. 4 பில்லியனை அது மாற்றுவதற்கு ஏதுவாக ரூபா. 4.58 பில்லியனாக 8% இனால் அதிகரித்தது.

## பாராட்டு

இந் நிறுவனம் எவரின் கீழ் தொழிற்பட்டு வருகின்றதோ அத்தகைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரான கௌரவ. பிரதமருக்கும், இராஜாங்க அமைச்சருக்கும், செயலாளருக்கும் மற்றும் மேலதிக செயலாளர்களுக்கும் அவர்களின்

வழிகாட்டல் மற்றும் ஆதரவுக்காக எனது நன்றியினை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.
தே.கா.ந.பொ. நிதியமானது அதன் தொழிற்பாடுகள் பலவற்றில் நெருக்கமான இணைப்பினைக் கொண்டுள்ள திறைசேரிச் செயலாளர் மற்றும் திறைசேரியின் ஏனைய சகல அதிகாரிகளிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற ஆதரவிற்கும் நான் நன்றி கூறுகின்றேன். காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் இலங்கைக் காப்புறுதிச் சபையின் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கும் எனது பாராட்டினைத் தெரிவிக்கவும் விரும்புகின்றேன்.

இறுதியாக சபையின் எனது சக உறுப்பினர்கள், எமது பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் அலுவலர் குழாத்தின் ஏனைய சகல உறுப்பினர்களிற்கும் அவர்களின் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பான சேவைகளுக்காக நான் நன்றி கூறுகின்றேன்.

ஒப்பம்,

மஞ்சுள டீ சில்வா
தவிசாளர்
2016 ஜனவரி 12 ஆம் திகதி



# 6. முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

# 5.1 பொதுச் சுற்றாடல் மீளாய்வு

## காப்புறுதி தொழில் மீளாய்வு

இலங்கைக் காப்புறுதித் தொழிலின் வளர்ச்சி வீதமானது 8.97% ஆன 2013 ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டளவில் குறைவாக 2014 ஆம் ஆண்டில் 5.14% ஆக இருந்தது. இது 2013 ஆம் ஆண்டிலுள்ள 7.28% இற்கு எதிராக 2014 ஆம் ஆண்டில் 3.66% ஆன பொதுக் காப்புறுதியில் கணிசமாக குறைந்த வளர்ச்சி வீதத்தின் காரணமாகவும் 2013 ஆம் ஆண்டிலுள்ள 11.20% உடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் நீண்டகால காப்புறுதித் தொழிலின் 7.04% ஆன குறைந்த வளர்ச்சி வீதத்தின் காரணமாகவும் உள்ளது. மொ.உ.உ (GDP) இன் சதவீதம் ஒன்றாக மொத்தக் காப்புறுதித் தவணைக் கட்டணத்தினைப் பிரதிபலிக்கும் இலங்கை காப்புறுதி ஊடுருவலானது 2014 ஆம் ஆண்டில் 1.02% ஆக பதிவுசெய்யப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 1.10% உடன் ஒப்பிடுகையில் ஒரு வீழ்ச்சியினைக் காட்டியது. பொதுக் காப்புறுதியின் ஊடுருவல் மட்டமானது 2013 ஆம் ஆண்டிலுள்ள 0.61% இற்கு எதிராக 2014 ஆம் ஆண்டில் 0.56% ஆக இருந்தது. நீண்டகால காப்புறுதியின் ஊடுருவல் மட்டமானது 2013 ஆம் ஆண்டிலுள்ள 0.48% இற்கு எதிராக 2014 ஆம் ஆண்டில் 0.46% ஆக இருந்தது. மேற்போந்த சகல குறிகாட்டிகளும் காப்புறுதித் தொழிலில் ஒரு வீழ்ச்சியினைப் பிரதிபலித்தன.

## தே.கா.ந.பொ.நி. இன் வகிபாகம்

மீள்காப்புறுதி, கலவரம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான காப்புறுதி, சுகாதாரக் காப்புறுதிகள், பொதுக் காப்புறுதி மற்றும் பயிர்க் காப்புறுதி போன்ற பல்வேறுபட்ட காப்புறுதி பாதுகாப்புக்களை வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை நோக்கி தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பங்களிப்புச் செய்தது.

இலங்கையில் பிரதான அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான அரசதுறை தொழிற்படைக்கென வடிவமைக்கப்பட்ட அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவம் தொடர்பான பெருமளவு கோரிக்கைத் தொகையினை தே.கா.ந.பொ.நி. செலுத்தியுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மீள்காப்புறுதி நிகழ்ச்சித் திட்டம் காரணமாக வெளிநாட்டு மீள்காப்புறுதி செய்பவர்களை நோக்கிய அந்நிய செலாவணி வெளிப்பாய்ச்சலை தே.கா.ந.பொ. நிதியமானது குறைத்ததுடன் ஆரம்பக் காப்புறுதிக்

கம்பனிகளின் பெருமளவு கோரிக்கைத் தொகையின் கணிசமான பங்கினையும் செலுத்தியது. வே.க.சி.ப. (SRCC & T) நிதியமும் உறுதியான வளர்ச்சியினை பதிவுசெய்ததுடன் கொடுக்கபட்ட காப்பீடுகள் தொடர்பான சகல சட்டபூர்வமான கோரிக்கைத் தொகைகளைச் செலுத்தியது. 2014 ஆம் ஆண்டில் பயிர்க் காப்புறதியின் கீழ் தே.கா.ந.பொ. நிதியமானது வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் காட்டு யானைகளின் தாக்குதல்கள் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட கோரிக்கைத் தொகைகளைத் தொடர்ந்து செலுத்தியது.

## 5.2.1 ஒன்பது ஆண்டுகளுக்கான நிதி மீளாய்வு

**வரைபடம் - 5.01: தேறிய இலாபத்தின் கடந்தகாலப் போக்கு**




தேறிய இலாபத்தின் பாங்கானது 2009 ஆம் ஆண்டு வரை 4 வருடங்களுக்கு அதிகரித்துச் செல்லும் போக்கு ஒன்றினைக் காட்டியதுடன் அதன் பின்னர் பயங்கரவாதக் காப்பீட்டுப் பாதுகாப்பிற்கான கேள்வியின் வீழ்ச்சி காரணமாக 2010 – 2012 வரையான காலப்பகுதியில் கணிசமானளவு குறைவடைந்தது. ஆனால் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அது துரித அதிகரிப்பொன்றை அடைந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது சற்றுக் குறைவாகவே அதிகரித்தது.

**வரைபடம் - 5.02: திரட்டிய நிதியத்தின் கடந்தகாலப் போக்கு**




திரட்டிய நிதியமானது 2010 ஆம் ஆண்டு வரை ரூபா. 9,695 மில்லியனாக உச்ச அளவில்

அதிகரித்துள்ளது ஆனால் 2011 – 2012 வரையில் துரிதமாக வீழ்ச்சியடைந்தது. எனினும், 2012 ஆம் ஆண்டிலிருந்து அது மீண்டும் ஆரோக்கியமான வளர்ச்சியினைக் காட்டியுள்ளதுடன் இப் போக்கானது அதேபோன்று 2014 ஆம் ஆண்டிலும் பேணப்பட்டுள்ள

## அட்டவணை -5.01அ: வகுதி ரீதியான தவணைக் கட்டண வருமான வகைப்பாடு

| வகுதி | 2014 ரூபா. | 2013 ரூபா. | 2012 ரூபா. | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|---|---|
| **01. தேறிய உழைத்த தவணைக் கட்டண வருமானம்** | | | | | |
| தவணைக் கட்டண வருமானம் – அரசாங்க மோட்டார் வாகனம் | 142,690,974 | 174,785,654 | 206,595,378 | 215,199,457 | 237,386,267 |
| தவணைக் கட்டண வருமானம் – மீள்காப்புறுதி | 2,041,207,710 | 1,042,220,495 | 463,610,216 | 198,551,912 | 296,078,296 |
| தவணைக் கட்டண வருமானம் – பாராளுமன்ற உறுப்பினர்கள் | 13,000,000 | 10,000,000 | 10,000,000 | 10,000,000 | 10,000,000 |
| தவணைக் கட்டண வருமானம் – வெளிநாட்டுத் தொழில் | – | – | 54,577,250 | 208,799,952 | 231,968,216 |
| தவணைக் கட்டண வருமானம் – மோட்டார் வாகனம் சாராதவை | 22,595,787 | 17,915,562 | 104,047,985 | 170,876,837 | 149,796,387 |
| தவணைக் கட்டண வருமானம் - வே.க.சி.ப. (SRCC & T) நிதியம் | 2,835,199,980 | 2,543,782,803 | 2,281,210,351 | 2,006,556,886 | 1,874,425,103 |
| பயிர்க் காப்புறுதி | 787,372,981 | 379,328,695 | | | |
| தவணைக் கட்டண மீளளிப்பு | | | (34,291) | (26,080) | (4,194,863) |
| **மொத்த ஈட்டிய தவணைக் கட்டணம்** | **5,842,067,431** | **4,168,033,208** | **3,120,006,892** | **2,809,958,964** | **2,795,459,406** |
| | | | | | |

**அட்டவணை -5.01ஆ: அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்தினை நோக்கிய பங்களிப்பு**

| மூலம் | 2014 ரூபா. | 2013 ரூபா. | 2012 ரூபா. | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|---|---|
| உறுப்பினர்களிடமிருந்தான பங்களிப்பு | 1,094,899,976 | 996,706,841 | 588,435,521 | 623,424,037 | 595,140,400 |
| திறைசேரியிடமிருந்தான பங்களிப்பு | 400,000,000 | 410,000,000 | 275,000,000 | 494,299,000 | 442,790,000 |
| மொத்தம் | **1,494,899,976** | **1,406,706,841** | **863,435,521** | **1,117,723,037** | **1,037,930,400** |

# காப்புறுதித் திட்ட மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்து பின்வரும் நலனோம்பல் நோக்கிய காப்புறுதித் திட்டங்களானவை இலங்கையர் சமுதாயத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளைப் பாதுகாப்பதற்கு 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.கா.ந.பொ. நிதியத்தின் மூலம் உருவாக்கப்பட்டு அமுலாக்கப்பட்டன.

i. **அரசாங்க அலுவலர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹாரா)**

அரசாங்க அலுவலர்களின் நன்மைக்காக 1997 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மருத்துவக் காப்புறுதித் திட்டமே அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டம் என அறியப்படுகின்றது. மாதம் ஒன்றுக்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூபா. 11 என்ற ஆரம்பக் கொடுப்பனவு ஒன்றுடன் இது இதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது.

அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய மாதம் ஒன்றுக்கு ரூபா. 75 கொண்ட தவணைக் கட்டணமானது இத் திட்டம் குறித்து ஓய்வூதியத்துக்குரித்துடைய சகல அரசாங்க அலுவலர்களிடமிருந்தும் மாதாந்தச் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது தனியார்மயப்படுத்தப்பட்டதான அக் காலம் வரையில் இத்திட்டமானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் அதன் தனியார்மயமாக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் இத் திட்டத்தினை அரசாங்கமானது பொறுப்பேற்றுக்கொண்டதுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் ஒரு தனியான அரசாங்கத் திட்டமாக அதனை அமுல்படுத்துகின்றது.

**ii. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியம் (SRCC&TF)**

இலங்கையின் புவியியல் எல்லைக்குள் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக நிகழும் ஆதனத்துக்கான இழப்பு/ சேதம் அத்துடன் அல்லது தனிப்பட்ட சுகாதாரம், விபத்து, உடல் ரீதியான காயங்கள் என்பவற்றினை எதிர்பார்த்து பாதுகாப்பதற்கென விரிவாக்கப்பட்ட, இலங்கையில் உரிமம் பெற்ற பொதுக் காப்புறுதி நிறுவனங்களான இந் நிதியத்தின் சகல உறுப்பினர்கள் மூலமும் வழங்கப்பட்ட காப்புறுதி ஆவணங்கள் தொடர்பில் மேலதிக காப்புறுதிப் பாதுகாப்பினை வழங்கும் நோக்கத்துடன் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு ஏற்ப 1987 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. 1987 ஆம்

ஆண்டிலிருந்து முன்னோக்கியதாக இந் நிதியமானது தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டுள்ளது.

2005.08.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம், தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அடுத்து பதவி வகிப்போரான வரையறுக்கப்பட்ட ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பொறுப்பேற்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் இந் நிதியம் நிர்வகிக்கப்பட்டது. அதன் பின்னர், தே.கா.ந.பொ. நிதியத்தின் கூட்டிணைப்புடன் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் வரவிலிருக்கும் சகல பணங்களும் தே.கா.ந.பொ. நிதியத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது. இறுதியாக, தே.கா.ந.பொ. நிதியத்தினால் பேணப்படும் ஒரு விசேட கணக்கிற்கு இப் பணம் மாற்றப்பட்டது.

### iii. பாராளுமன்ற உறுப்பினர் காப்புறுதித் திட்டம்

தே.கா.ந.பொ. நிதியமானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன் பெறுகின்றனர். இத் திட்டமானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்வரும் நன்மைகளை வழங்குகின்றது.

1. ரூபா. 5 மில்லியன் வரையிலான விபத்துக் காப்புறுதிப் பாதுகாப்பு

| | |
|---|---|
| எதிர்பாராத இறப்பு | ரூபா. 5,000,000.00 |
| விபத்துக் காரணமாக முழுமையான அங்கவீனம் | ரூபா. 5,000,000.00 |

2. வருடம் ஒன்றுக்கான மருத்துவக்

காப்புறுதிப் பாதுகாப்பு ரூபா. 200,000.00

**iv. இலங்கையில் காப்புறுதித் தொழிலுக்கான மீள்-காப்புறுதிப் பாதுகாப்பு**

2006 ஆம் ஆண்டு இலங்கையில் மீள் காப்புறுதி ஆபத்தினை தே.கா.ந.பொ. நிதியமானது ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தது. தே.கா.ந.பொ. நிதியச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க, தே.கா.ந.பொ. நிதியத்திடமிருந்து மீள் காப்புறுதி தொழிலின் மொத்தத் தொகையில் 30% இனைப் பெற்றுக்கொள்வது இலங்கையிலுள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்குக் கட்டாயமாகும்.

**v. மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம் (அரசாங்கத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்காக)**

அரசாங்க நிறுவனங்களுக்கு மற்றும் பகுதியளவு அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கு ஏதேனும் இழப்பு அல்லது சேத ஆபத்திற்கு எதிராக காப்புறுதி செய்யப்படும். தே.கா.ந.பொ. நிதியமானது ஆரம்பத்தில் அரசாங்கத் துறைக்கு மோட்டார் வாகனக் காப்புறுதியினை வழங்க ஆரம்பித்திருந்தது என்பதுடன் அதன் பின்னர் அதனை தனியார் துறைக்கு ஒரு தாங்கக்கூடிய தவணைக் கட்டணம் ஒன்றில் விரிவாக்கியது. இதன் முழுமொத்த மோட்டார் காப்புறுதியானது தீ மற்றும் களவு, மூன்றாம் தரப்புச் சேதங்கள் (மரணம் மற்றும் காயம்) அத்துடன் வெள்ளப் பெருக்கு, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் போன்ற மேலதிக காப்பீடுகளையும் உள்ளடக்கும். தற்போது, அரசாங்கத் துறையின் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்திசெய்வது தொடர்பில் தே.கா.ந.பொ. நிதியமானது பிரதானமாக கவனத்தினைக் குவிக்கின்றது.

### vi "விதேச ரெக்கியா" வெளிநாட்டுத் தொழில் காப்புறுதித் திட்டம்

2008 ஆம் ஆண்டு யூன் மாதத்திலிருந்து முன்னோக்கியதாக இலங்கை வெளிநாட்டுப் புலம்பெயர் வேலையாட்களுக்கான "விதேச ரெக்கியா" வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி ஆவணமானது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இலங்கையினை விட்டுச் சென்ற 18 இலிருந்து 65 வரையான வயதிலுள்ள இலங்கையர்களை உள்ளடக்கியது. எனினும், 2012 ஆம் ஆண்டிலிருந்து இது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

### vii பொதுக் காப்புறுதித் திட்டம்

2009.08.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 1615/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க, பொதுக் காப்புறுதித் தொழிலின் கீழ் தீயபாயக் காப்புறுதி ஆவணங்கள், கடலபாயக் காப்புறுதி ஆவணங்கள், வேலையாட்கள் நட்டஈட்டு காப்புறுதி ஆவணங்கள் மற்றும் நானாவித காப்புறுதி ஆவணங்கள் என்பவற்றை வழங்குவதற்கு தே.கா.ந.பொ. நிதியத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இக்காப்பீடுகள் தேவைப்படும் அரசாங்க நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதை தே.கா.ந.பொ. நிதியம் இலக்காகக் கொண்டுள்ளது.

### viii பயிர்க் காப்புறுதித் திட்டம்

"கெதட அருன பொஹர திரிய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மானியமாக அளிக்கப்பட்ட உரத்தினைப் பெற்றுக்கொள்கின்ற விவசாயிகளுக்காக 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு இணங்க 2013 ஆம் ஆண்டில் பயிர்க் காப்புறுதித் திட்டம் உருவாக்கப்பட்டது. வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகள் என்பவற்றின் காரணமாக பயிர்ச்செய்கைக்கு ஏற்படுத்தப்படும் சேதங்களைத் தணிப்பதற்கான தீர்வு நடவடிக்கை ஒன்றாக கட்டாயக் காப்புறுதித் திட்டம் ஒன்றாக இது உள்ளதுடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2013/06/21 ஆம் திகதிய BD/EE/118/01/BP/2013 ஆம் இலக்க

சுற்றறிக்கைக்கமைய செயற்படுத்தப்படுகின்றது. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட DFD/ circular/2014-03 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய 2014 ஆம் ஆண்டின் இறுதியில் கமநல மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபைக்கு (AAIB) இத் திட்டம் மாற்றப்பட்டது.

# அக்ரஹார மருத்துவக் காப்புறுதி



12/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் மூலம் அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது என்பதுடன் திருமணமான ஊழியர் உறுப்பினர்கள், வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகள் (அவர்கள் திருமணம் செய்யாமல், வேலையற்றோர்களாக மற்றும் 21 வயதுக்குக் குறைவாக இருந்தால் மாத்திரமே) மற்றும் திருமணமாகாத ஊழியர்கள் - உறுப்பினர், பெற்றோர்கள் (பெற்றோர்கள் 70 வயதிற்குக் குறைவாக இருந்தால் மாத்திரமே) போன்றோரின் நன்மைக்காகவே இத் திட்டம் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைமைத்துவத்தின் கீழ் வந்தது.

"அக்ரஹார" மருத்துவக் காப்புறுதித் திட்டமானது அரச சேவகர்கள், மாகாண அரச சேவகர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கென உருவாக்கப்பட்டுள்ளது. ஆதலினால் நாம் பெற்றுக்கொள்ளும் சகல உரிமைக் கோரிக்கைகளையும் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக எடுத்துள்ளோம்.

சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக கோரிக்கைத் தொகைக் கொடுப்பனவுச் செய்முறையினைத் துரிதப்படுத்துவதற்கென இலத்திரனியல் அட்டை முறைமையினை அமுலாக்கியதன் பின்னர் ஒரு புதிய கோரிக்கைத் தொகைச் செய்முறைப்படுத்தல் முறைமையினை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது அமுல்படுத்தியிருந்தது. சகல அவசியமான தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்த பிரகடனப்படுத்தப்பட்ட அக்ரஹார கோரிக்கைத் தொகைகளானவை இலத்திரனியல் அட்டை முறைமையினை அறிமுகப்படுத்தியதன் பின்னர் 3 வேலை நாட்களிற்குள் செலுத்தப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினை நோக்கி அரசாங்க அலுவலர்களிடமிருந்தான மாதாந்தச் சம்பளத்திலிருந்து சுற்றறிக்கை எச்சரிக்கைத் தெரிவிப்புப் பங்களிப்பிற்கேற்ப தகுதியான ஊழியர் ஒருவருக்கு ரூபா. 125 கழிக்கப்படுகின்றது. இக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் பின்வரும் நன்மை வகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

1. வைத்தியசாலை கட்டணங்களை எதிர்பார்த்து மருத்துவ நன்மைகள்:

   இந்நன்மைகளின் கீழ், வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையக் கட்டணங்கள், மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சைச் செலவுகள், மருத்துவ ஆலோசனைச் சேவைகள் அல்லது மருத்துவ நிபுணரின் மற்றும் நிபுணரின் சேவைகள், நிலையத்திற்கு உள்ளேயான சிகிச்சை போன்றவற்றுக்கான கட்டணங்கள் வழங்கப்படும்.

2. மூக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்தல்:

   இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு 3 வருடத்திற்கும் ஒருமுறை மூக்குக் கண்ணாடியினைக் கொள்வனவு செய்வதன் பேரிலான செலவினைப் பூர்த்திசெய்வதற்கு ரூபா. 3,500/- கொண்ட தொகை ஒன்றினைக் கோருவதற்கு அங்கத்தவர்களுக்குத் தகுதியுள்ளது.

3. இதய சத்திரசிகிச்சைச் செலவுகள் (இதயம் சார்ந்த):

   இத்திட்டத்தின் கீழ் இதயச் சத்திரசிகிச்சைக்கான கொடுப்பனவின் பேரிலான செலவினத்தைப் பூர்த்திசெய்வதற்கு ரூபா. 400,000/- கொண்ட தொகை ஒன்றினைக் கோருவதற்கு அங்கத்தவர்களுக்குத் தகுதியுள்ளது.

4. திடீர் மரண மற்றும் இயற்கை மரணக் காப்பீடு :

   இத்திட்டத்தின் கீழ், திடீர் மரண மற்றும் இயற்கை மரணக் காப்பீட்டின் கீழ் ரூபா. 600,000/- மற்றும் ரூபா. 100,000/- கொண்ட தொகை ஒன்றினைக் கோருவதற்கு அங்கத்தவர்களுக்குத் தகுதியுள்ளது.

அக்ரஹார என அழைக்கப்படும் மருத்துவத் திட்டத்தினூடாக சுகாதாரம், தனிப்பட்ட விபத்து ஆகியவற்றுடன் தொடர்புபட்ட எதிர்வுகூற முடியாத ஆபத்துக்களுக்கு எதிராக அரச சேவையிலுள்ள அலுவலர்களைப் பாதுகாப்பதற்கான நன்மைகளை அரசாங்கம் வழங்கியுள்ளது.

2005.05.18 ஆம் திகதிய 12/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க மேற்போந்த மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க அலுவலர்கள் உரித்துடையவராவர். சம்பளத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபா. 125/- கொண்ட தவணைக் கட்டணத்தினைக் கழித்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பது கட்டாயமாகும்.

இத்திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 675,000 காப்புறுதி செய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ளதுடன் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்காக கிட்டத்தட்ட 2.2 மில்லியன் காப்பீடுகளும் உள்ளன.

இம்மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹார) தொடர்பில் நாடளாவிய ரீதியில் அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் காசோலைகளைச் சேகரித்து வைப்புச் செய்வதே வருமானப் பிரிவின் முதன்மையான தொழிற்பாடாகும்.

மேலும், முறையான வருமான முறைமையினைப் பேணி இலக்கினை அடைந்துகொள்வதற்கான சில தொழிற்பாடுகளை இப்பிரிவு நிறைவேற்றுகின்றது.

- பதிவுகளைப் பேணி இற்றைப்படுத்துதல்
- நிலுவையாகவுள்ள கொடுப்பனவுகளைச் சேகரித்தல்

2014 ஆம் ஆண்டிற்கான மொத்த உறுப்பினர் பங்களிப்பு ரூபா 1,094,899,676 ஆகும். அரசாங்க அலுவலர்களிடமிருந்தான மாதாந்தக் கழிப்பனவு இவ்வாண்டு முழுவதும் ரூபா. 125/- ஆகப் பேணப்பட்டது.

**அட்டவணை -5.02: பௌதீகச் செயற்றிறன் – 2014 ஆம் ஆண்டு**

**அக்ரஹார உரிமைக்கோரல் வகைப்பாடு – 2014 ஆம் ஆண்டு (இலக்கங்களில்)**

| உரிமைக்கோரல் வகை | பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கோரிக்கைத் தொகைகள் | செலுத்தப்பட்ட கோரிக்கைத் தொகைகள் | நிலுவையாகவுள்ள கோரிக்கைத் தொகைகள் | நிராகரிக்கப்பட்ட கோரிக்கைத் தொகைகள் |
|---|---:|---:|---:|---:|
| இறப்பு | 1,137 | 840 | 278 | 19 |
| அங்கவீனம் | 359 | 310 | 36 | 13 |
| குழந்தைப் பேறு | 10,427 | 9,167 | 964 | 296 |
| புற்றுநோய் | 352 | 310 | 29 | 13 |
| இருதய நோய் | 664 | 653 | 7 | 4 |
| மூக்குக் கண்ணாடிகள் | 60,205 | 52,760 | 3,019 | 4,426 |
| ஏனைய நோய்களுக்கான ஏனைய அரசாங்க | 29,565 | 26,624 | 1,927 | 1,014 |

| | | | | |
|---|---|---|---|---|
| வைத்தியசாலைக் கட்டணங்கள் | | | | |
| ஏனைய நோய்களுக்கான ஏனைய தனியார் வைத்தியசாலைக் கட்டணங்கள் | 15,215 | 12,296 | 1,497 | 1,422 |
| சிறுநீரக நோய் | 16 | 14 | - | 2 |
| பக்கவாதம் | 1 | 1 | - | - |
| **மொத்தம்** | **117,941** | **102,975** | **7,757** | **7,209** |

**அட்டவணை -5.03: 2010 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை அக்ரஹார மருத்துவக் காப்புறுதிப் பற்றாக்குறை / மிகை**

| மூலம் | 2014 ரூபா. | 2013 ரூபா. | 2012 ரூபா. | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|---|---|
| உறுப்பினர்களிடமிருந்தான பங்களிப்பு | 1,094,899,976 | 996,706,841 | 588,435,521 | 623,424,037 | 595,140,400 |
| திறைசேரியிடமிருந்தான பங்களிப்பு | 400,000,000 | 410,000,000 | 275,000,000 | 494,299,000 | 442,790,000 |
| மொத்தப் பங்களிப்பு | 1,494,899,976 | 1,406,706,841 | 863,435,521 | 1,117,723,037 | 1,037,930,400 |
| உரிமைக் கோரிக்கைச் செலவுகள் | (1,228,123,716) | (1,130,123,070) | (1,055,301,827) | (1,338,048,606) | (1,076,706,660) |
| பற்றாக்குறை/ மிகை | 266,776,260 | 276,583,770 | (191,866,306) | (220,325,569) | (38,776,260) |

# இலத்திரன் அட்டை (E-Card) கருத்திட்டம்

அக்ரஹார என அழைக்கப்படும் மருத்துவத் திட்டத்திற்கு ஊடாக மருத்துவம், தனிப்பட்ட விபத்து ஆகியவற்றுடன் தொடர்புபட்ட எதிர்பார்க்க முடியாத ஆபத்துக்களுக்கு எதிராக அரச சேவையிலுள்ள அலுவலர்களைப் பாதுகாப்பதற்கான நன்மைகளை அரசாங்கம் வழங்கியுள்ளது.

2005.05.18 ஆம் திகதிய 12/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கிணங்க, மேற்போந்த மருத்துவக் காப்புறுதித் திட்ட நன்மையினைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க அலுவலர்களுக்கு உரித்துள்ளது. தற்போது உரிமைக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கான மீளளிப்பு முறையினை நாம் பின்பற்றுகின்றோம்.

சேவையின் வினைத்திறனை அதிகரித்து அக்ரஹார பயனாளிகளுக்கு வழங்குவதற்கு உரிமைக்கோரிக்கைத் தீர்ப்பனவுச் செய்முறையினை காசல்லாத கொடுப்பனவுகளாக இலகுபடுத்துவதற்கென இலத்திரன் அட்டை முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அமுல்படுத்தும் பொருட்டு இத்திட்டத்தின் உறுப்பினர்களின் மேற்போந்த கருத்திட்ட விபரங்களை சேகரித்துக்கொள்ள வேண்டியுள்ளது. இக் கருத்திட்டமானது 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் நாடளாவிய ரீதியில் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதுவரை கிட்டத்தட்ட 428000 விண்ணப்பங்கள் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. கிடைக்கக்கூடிய தரவுகளுக்கிணங்க, 700000 இற்கும் கூடுதலான அரசாங்க சேவகர்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாக இருப்பதற்கு தகுதியுடையவர்களாவர். விண்ணப்பங்கள் இதுவரையில் உறுப்பினர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் 170310 அச்சிடப்பட்ட அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் தனியார் வைத்தியசாலைகளில் அட்டை வாசிப்புக் கருவிகளை நிறுவுதல்

அட்டை முறைமையினைத் தொழிற்படுத்துவதற்கு, இலத்திரன் அட்டை முறைமையின் அமுலாக்கத்திற்கு துணைபுரிபவராக இருப்பதற்கென தனியார் சுகாதார ஒழுங்காற்றுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட சகல வைத்தியசாலைகளிடமிருந்தும் அக்கறை வெளிப்பாட்டினை தே.கா.ந.பொ. நிதியம் கோரியிருந்தது அத்துடன் இதுவரை நாடளாவிய ரீதியில் பின்வரும் தனியார் வைத்தியசாலைகளில் அட்டை வாசிப்புக் கருவிகளை நிறுவியுள்ளது.

லங்கா வைத்தியசாலை – கொழும்பு

நவலோகா வைத்தியசாலை – கொழும்பு

சிறீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை – கொழும்பு

பன்னிப்பிட்டிய வைத்தியசாலை – கொழும்பு

நியூ பிலிப் வைத்தியசாலை – களுத்துறை

நொதேன் சென்ரல் வைத்தியசாலை – யாழ்ப்பாணம்

சிங்ஹ வைத்தியசாலை – இரத்தினபுரி

பாலசூரிய வைத்தியசாலை – புத்தளம்

குருநாகல் கூட்டுறவு வைத்தியசாலை – குருநாகல்

அத்துடன் ஏனைய மாவட்டங்களில் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் வாசிப்புக் கருவிகளை நிறுவுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத விரிவாக்கம்



1987 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கேற்ப, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் காரணமாக ஏற்படும் ஆதனங்களுக்கான இழப்பு/சேதம் அத்துடன் அல்லது தனியாள் இறப்பு/ உடற் காயங்களுக்கு எதிரான காப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு விரிவாக்கப்பட்ட, இலங்கையில் உரிமம்பெற்ற காப்புறுதி நிறுவனங்களாக உள்ள நிதியத்தின் சகல உறுப்பினர்களினாலும் வெளியிடப்பட்ட காப்புறுதி ஆவணங்கள் தொடர்பிலான மேலதிக காப்புறுதிக் காப்பீட்டினை வழங்கும் நோக்குடன் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியமானது (SRCCj&jT) உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியமானது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்குள் எடுக்கப்பட்டதுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் முகாமை செய்யப்பட்டது.

இறுதியாக, 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குள் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியமானது உள்ளீர்ப்புச் செய்யப்பட்டது.

வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் உள்ளீர்ப்பின் பின்னர் அச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (c) ஆவது பந்திக்கேற்ப நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட சகல பணங்களும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் பேணப்படும் விசேட கணக்கு ஒன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதன் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பிலான வழிகாட்டல்களானவை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும்.

புதிய வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்படும் வரையில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குள் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் உள்ளீர்ப்பிற்கு முன்னர் முன்னதாகப் பின்பற்றப்பட்ட நடைமுறைகளை தே.கா.ந.பொ. நிதியமானது தொடர்ந்து பின்பற்றியது.

## வே.க.சி.ப. (SRCC & T) நிதியத்தின் பிரதான செயற்பாடுகள்

- காப்புறுதிக் கம்பனிகளுக்கூடாக தவணைக் கட்டணத்தைச் சேகரித்து இந் நிதியத்திற்கு அனுப்புதல் மற்றும் உயர் வீதத்தில் முதலீடு செய்தல்.
- தே.கா.ந.பொ. நிதியச் சபையின் அனுமதியின் பேரில் கோரிக்கைத் தொகைகள் காப்புறுதிக் கம்பனிகளால் செலுத்தப்பட்டு SRCC & T நிதியத்தினால் மீளளிக்கப்படுகின்றது.
- பயங்கரவாத தாக்குதல்களின் காரணமாக சேதமுற்ற, இலங்கை வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மென் (soft) கடன்களை முகாமை செய்தல்.

## வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய (SRCC & T) நிதியத்தின் நோக்கங்கள்

❖ இந் நிதியத்தினால் காப்பீடு செய்யப்படும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத ஆபத்துக்களை உள்ளடக்குவதற்கு விரிவாக்கப்பட்ட காப்புறுதி ஆவணங்களில் விவரிக்கப்பட்டவாறு இந்நிதியத்தின் சகல உறுப்பினர்களினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களின் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத கூறு தொடர்பில் இந் நிதியத்தினை உருவாக்குதல்.

❖ வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் ஆதனத்துக்கான இழப்பு/ சேதம்/ அல்லது தனிப்பட்ட காயத்தினை எதிர்பார்த்து, காப்புறுதி செய்யப்பட்டும் மற்றும் புவியியல் எல்லை விரிவாக்கம் ஒன்றினை ஏற்பாடு செய்யும் அவ் வகையான

பொதுக் காப்புறுதி ஆபத்தினை உள்ளடக்கி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் புவியியல் எல்லைக்குள் அமைந்தும் உள்ள அத்தகைய ஆபத்துக்களுக்கான காப்புறுதி ஆவணங்களில் விவரிக்கப்பட்டவாறு பாதுகாப்பினை வழங்குதல்.

- கூடிய சொந்தமான இலங்கை நிதியத்திடமிருந்து காப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பெறுமதி வாய்ந்த தவணைக் கட்டணத்தினை வெளிநாடுகளுக்குச் செல்லாமல் தடுக்க முடியும்.

## வே.க.சி.ப (SRCC & TR) அலகின் நிதி மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வே.க.சி.ப (SRCC & TR) அலகானது ரூபா. 2,544 மில்லியனிலிருந்து ரூபா. 2,835 மில்லியன் வரையான 11% கொண்ட மொத்த ஈட்டிய தவணைக் கட்டண (GWP) வளர்ச்சி ஒன்றினைப் பதிவுசெய்து 2014 ஆம் ஆண்டில் மேம்பட்ட செயற்றிறன் ஒன்றைப் பதிவுசெய்ததுடன் மொத்த வருமானம் ரூபா. 3,098 மில்லியனிலிருந்து ரூபா. 3,369 மில்லியன் வரை அதிகரித்தது.

சந்தை வட்டி வீதங்கள் 2014 ஆம் ஆண்டில் சடுதியாக வீழ்ச்சியடைந்தன. ஆதலினால் முதலீட்டு வருமானமும் ஒரு வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. எனினும் 2014.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு வே.க.சி.ப (SRCC & TR) அலகின் மொத்த முதலீடானது ரூபா. 5.1 பில்லியனிலிருந்து ரூபா. 6.1 பில்லியன் வரை அதிகரித்ததுடன் 2014 ஆம் ஆண்டில் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்ட தொகை ரூபா. 2.2 பில்லியன் ஆகும்.

2013 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா. 2.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் தேறிய உரிமைக் கோரிக்கைகள் ரூபா. 56.9 மில்லியனாக அதிகரித்துள்ளன. அளுத்கம பிரதேசத்தில் நிகழ்ந்த வன்முறை சூழ்நிலையின் காரணமாகவே இது அமைந்தது.
வே.க.சி.ப (SRCC & TR) அலகின் 2014 ஆம் ஆண்டிற்கான மாதாந்த உரிமைக் கோரிக்கைகள், தவணைக் கட்டணம் மற்றும் இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு.

# மீள்காப்புறுதி



2006 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி, 1528/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலுக்கிணங்க 2008 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பொது மீள்காப்புறுதி தொழிலிருந்தும் எழுகின்ற மொத்தப் பொறுப்பில் காப்புறுதி வழங்குனரால் செலுத்தப்படற்பாலதாக இருக்கும் வீதமான கட்டாய 20% இனை பொறுப்பேற்றுக்கொள்வதற்கென தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மீள் காப்புறுதித் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. மேலுள்ளதற்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி, 1791/4 ஆம் இலக்க திருத்தப்பட்ட வர்த்தமானிக்கு இணங்க இவ் ஆண்டில் 20% இலிருந்து 30% வரையில் கட்டாய ஒப்பளிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அந்நியச் செலாவணியை தக்கவைத்துக் கொள்வதே இத் திணைக்களத்தினை உருவாக்கியதன் பின்னணியிலுள்ள பிரதான நோக்கமாகும். மீள்காப்புறுதி விடயம் குறித்து இலங்கையிலுள்ள சகல ஆரம்பக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் வழிகாட்டலினையும் உரிய உதவியினையும் இத் திணைக்களம் வழங்குகின்றது. ஆதலினால், இலங்கையில் “தேசிய மீள்காப்புறுதி வழங்குநராக” இது பிரதானமானதும் தீர்க்கமானதுமான வகிபாகத்தினை வகிக்கின்றது.

உரிய விடய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடபட்ட நிபந்தனைகளுக்கிணங்க சகல ஆரம்ப காப்புறுதிக் கம்பனிகளும் தே.கா.ந.பொ. நிதியத்துடன் மீள்காப்புறுதி செய்யப்பட்ட தொகையின் 20% இனை கட்டாயமாக ஒப்பளிக்க வேண்டியுள்ளதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறுப்பிற்குச் சமனான தொகைக்கு ஏதேனும் ஆரம்ப காப்புறுதிக் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கோரிக்கைத் தொகையினைத் தீர்ப்பதற்கான பொறுப்பும் உள்ளது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வழங்கப்படும் வழிகாட்டல்களுக்கிணங்க தே.கா.ந.பொ. நிதியமானது 2013 ஆம் ஆண்டில் “தேசிய மீள்காப்புறுதி நிதியம்”

ஒன்றினை உருவாக்கியுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டு முடிவில் 2000 இற்கும் அதிகமான மில்லியன் ரூபாவினைக் கொண்ட நிதியம் ஒன்றாக அது மாறியது. அதேவேளை, நிதியம் கட்டியெழுப்பப்படும் வரை தே.கா.ந.பொ. நிதியத்தினால் தாங்கிக்கொள்ள முடியாத ஆபத்துக்களுக்கான மீள்காப்புறுதி ஒன்றினைத் தெரிவுசெய்யுமாறும் திறைசேரி அறிவுரை வழங்கியுள்ளது. ஆதலினால், தே.கா.ந.பொ. நிதியத்தின் முகாமையானது மேற்போந்த தேவைப்பாட்டினை அடைந்துகொள்வதற்கு அவசியமான நடவடிக்கையினை எடுத்து வருகின்றது.

மீள்காப்புறுதித் திணைக்களத்திற்கான 2008 ஆம் ஆண்டிலிருந்தான தவணைக் கட்டணச் சேகரிப்பு மற்றும் உரிமைக்கோரிக்கை கொடுப்பனவுகள் பின்வருமாறு.

மொத்த வருடாந்த மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானமானது 2013 ஆம் ஆண்டில் ரூபா. 1042 மில்லியனிலிருந்து 2014 ஆம் ஆண்டில் ரூபா. 2041 மில்லியன் வரை அதிகரித்துள்ளது.

# பொதுக் காப்புறுதி



தே.கா.ந.பொ. நிதியத்தின் பொதுக் காப்புறுதித் தொழிலானது பிரதானமாக தீயபாயக் காப்புறுதி, கடலபாயக் காப்புறுதி, நானாவித காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதி என உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 2009.08.20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1615/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பொதுக் காப்புறுதித் தொழிலானது ஆரம்பிக்கப்பட்டதுடன் அது பல ஆண்டுகளாக படிப்படியாக வளர்ச்சியடைந்தது. பொதுக் காப்புறுதியின் கீழ் தே.கா.ந.பொ. நிதியமானது தீயபாயக் காப்புறுதி ஆவணங்கள், கடலபாயக் காப்புறுதி ஆவணங்கள், வேலையாட்கள் நட்டஈட்டு காப்புறுதி ஆவணங்கள், தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி ஆவணங்கள் மற்றும் கொள்ளை அபாயக் காப்புறுதி ஆவணங்கள் போன்றவற்றை வழங்குகின்றது.

**அட்டவணை -5.04: பொதுக் காப்புறுதி ஆவணங்களின் வகைப்பாடு**

| | 2014 |
|---|---|
| **ஆவண வகுதி** | **ஆவணங்களின் எண்ணிக்கை** |
| தீயபாயக் காப்புறுதி | 3 |
| கடலபாயக் காப்புறுதி | 38 |
| தனிப்பட்ட விபத்து | 1 |
| வேலையாட்கள் நட்டஈட்டு காப்புறுதி | 1 |
| கொள்ளை | ஏற்புடையதன்று |
| காசு இடமாற்றம் | 5 |
| மின்சார உபகரணங்கள் | 6 |
| ஒப்பந்தக்காரர் - சகல ஆபத்துக்களும் | 1 |
| பொறித்தொகுதியும் இயந்திர சாதனமும் | 6 |
| மருத்துவம் | 3 |
| பிரயாணம் | 23 |
| **மொத்தம்** | **87** |

அட்டவணை -5.05: செலுத்தப்பட்ட மருத்துவக் காப்புறுதி உரிமைக் கோரிக்கையின் வகைப்பாடு – 2013 & 2014 ஆம் ஆண்டு

| வகுதி | 2013 (மில்லியன்) | 2014 (மில்லியன்) |
|---|---|---|
| குழந்தைப் பேறு | 0.51 | 0.35 |
| பாரதூரமான நோய் | 11.89 | 10.93 |
| இறப்பு | 0.05 | |
| ஏனைய நோய்களுக்கான ஏனைய அரசாங்க வைத்தியசாலைக் கட்டணங்கள் | 0.22 | 0.67 |
| வெளியிடம் (OUT DOOR) | 0.53 | 0.56 |
| ஏனைய நோய்களுக்கான ஏனைய தனியார் வைத்தியசாலைக் கட்டணங்கள் | 5.06 | 5.01 |
| மூக்குக் கண்ணாடிகள் | 0.22 | 0.15 |
| இருதய நோய் | 0.35 | 0.40 |
| **மொத்தம்** | **18.84** | **18.07** |

தே.கா.ந.பொ. நிதியமானது மருத்துவ உரிமைக் கோரிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா. 18.07 மில்லியனைச் செலுத்தியுள்ளது. இது 2013 ஆம் ஆண்டிலிருந்து ஒரு சிறிதளவு வீழ்ச்சியினைக் காட்டுகின்றது. மருத்துவ உரிமைக் கோரிக்கை வகைப்பாடுகள் மேற்போந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. உரிமைக் கோரிக்கைகள் ஒரு வாரத்திற்குள் தீர்க்கப்பட்டுள்ளன என்பதை தே.கா.ந.பொ. நிதியமானது உறுதிப்படுத்துகின்றது.

# மோட்டார் வாகனக் காப்புறுதி



2008 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க நிறுவனங்களுக்கும் பகுதியளவு அரசாங்க நிறுவனங்களுக்கும் சொந்தமான வாகனங்களுக்காக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. PF 427 ஆம் இலக்க அரசாங்கச் சுற்றறிக்கை மற்றும் அதற்குப் பின்னரான PF 437 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றுக்கிணங்க அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்களிலான மோட்டார் வாகன மற்றும் மோட்டார் வாகனம் சாராத காப்புறுதியினை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் செய்துகொள்ள முடியும்.

ஒரு முழுமையான அரசாங்கத்துக்குச் சொந்தமான காப்புறுதி நிறுவனமாக தே.கா.ந.பொ. நிதியமானது ஒரு தாங்கிக்கொள்ளக்கூடிய தவணைக் கட்டணத்தில் அரசாங்க நிறுவனங்களுக்கு ஒரு முழுமொத்தக் காப்புறுதி மற்றும் மூன்றாம் தரப்புக் காப்புறுதியினை வழங்குகின்றது.

வெள்ளப் பெருக்குக் காப்பீடு, மூன்றாம் தரப்பு ஆதனச் சேதக் காப்பீடு, காற்றுப் பைகள் (Air Bags) காப்பீடு, விசேட காற்றுக் காப்பு (Windscreen) காப்பீடு, பயிற்றுநர் சாரதி காப்பீடு, WCI காப்பீடு, PAB காப்பீடு போன்றவற்றுக்காக மேலதிக தவணைக் கட்டணம் ஒன்றினைச் செலுத்துவதன் மூலம் காப்புறுதி செய்பவர் மேலதிக காப்பீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2014 ஆம் ஆண்டில் தே.கா.ந.பொ. நிதியமானது 892 வாகனங்களுக்காக ரூபா. 71.93 மில்லியனைச் செலுத்தியுள்ளது. இது வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் பெறுமதி இரண்டிற்கும் ஏற்ப ஒரு சிறிதளவு குறைவினைக் காட்டுகின்றது. கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் வாகனங்களின் வகைப்பாடு காட்டப்பட்டுள்ளது. அத்துடன் தே.கா.ந.பொ. நிதியமானது பதிவுசெய்யப்பட்ட வாகனத் திருத்தகங்களையும் (garage) மோட்டார் வாகன மதிப்பீட்டாளர்களையும் நாடளாவிய ரீதியில் அதிகரித்துள்ளது.

**அட்டவணை -5.06: செலுத்திய மோட்டார் வாகன உரிமைக் கோரல்களின் வகைப்படுத்தல்**

| | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | | மொத்தம் | |
| வகுதி | உரிமைக் கோரல் எண்ணிக்கை | தொகை (மில்லியன்) 2013 | உரிமைக் கோரல் எண்ணிக்கை | தொகை (மில்லியன்) 2014 |
| டிரெக்டர் | 2 | 0.06 | 1 | 0.06 |
| தனிப்பட்ட கார் | 497 | 43.05 | 392 | 32.77 |
| மோட்டார் சைக்கிள் | 37 | 0.54 | 42 | 0.52 |
| மோட்டார் கோச் | 101 | 8.13 | 117 | 12.28 |
| லொறி/ காணி வாகனம் | 78 | 3.20 | 68 | 6.46 |
| இரட்டைப் பயன்பாட்டு | 372 | 23.98 | 272 | 19.85 |

| | | | | |
|---|---|---|---|---|
| வாகனம் | | | | |
| டிரேலர் | 1 | 0.01 | | |
| **மொத்தம்** | **1,088** | **78.97** | **892** | **71.93** |

# பயிர்க் காப்புறுதி



2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு இணங்க வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளின் தாக்குதல் என்பவற்றின் காரணமாக பயிர்ச்செய்கைக்கு ஏற்படுத்தப்படும் சேதங்களைத் தணிப்பதற்கான தீர்வு நடவடிக்கை ஒன்றாக கட்டாயக் காப்புறுதித் திட்டத்திற்கான விவசாயிகளின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, மானிய உரத்தினைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு விவசாயியையும் 2013 ஆம் ஆண்டு பெரும்போகத்திலிருந்து (யல) முன்நோக்கி ஒவ்வொரு 50 கி.கி (kg) கொண்ட இரசாயன உரப் பையினதும் கொள்வனவில் ரூபா. 150/= இனை கட்டாய காப்புறுதி பங்களிப்பின் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் காப்புறுதித் திட்டம் ஒன்றின் உறுப்பினர் ஒருவராக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

01. பயிர்ச் செய்கை காப்புறுதி பயனாளிகள்

    இப் பொறுப்பேற்றலின் ஆரம்ப நடவடிக்கையாக மானிய உரத்தினைப் பெற்றுக்கொள்ளும் விவசாயிகளுக்காக இக் காப்புறுதிக் காப்பீடு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

02. இக் காப்புறுதி ஆவணத்தின் கீழ் நெல் வயல்களில் காப்பிடக்கூடிய இழப்புக்கள்

i. வெள்ளப்பெருக்கு
ii. வறட்சி
iii. காட்டு யானைகளின் தாக்குதல்

இச் சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கமைய 2014 ஆம் ஆண்டு இறுதி வரையில் பயிர்க் காப்புறுதித் திட்டமானது சீராக வளர்ச்சியடைந்தது. எனினும், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட DFD/ circular/2014-03 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய இத் திட்டமானது கமநல மற்றும் விவசாய காப்புறுதிச் சபைக்கு மாற்றப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் வறட்சி அதேபோல வெள்ளப்பெருக்கு என்பன நெல் வயல்களைப் பாதித்தன. எனவே விவசாயிகள் தமதுசெலவுகளை மீளப்பெற கூடுதலான உரிமைக்கோரிக்கைகளுக்காக விண்ணப்பித்தனர். உரிமைக்கோரிக்கை கொடுப்பனவுகளை துரிதப்படுத்துவதற்கான நடைமுறைகளை தே.கா.ந.பொ. நிதியமும் பின்பற்றியது.

2014 ஆம் ஆண்டில் உரிமைக்கோரிக்கை கொடுப்பனவு விபரங்கள் பின்வருமாறு.

பயிர்க் காப்புறுதி தொடர்பில் 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் பெறுமதி ரூபா. 364 மில்லியனைத் தொகையிட்டது.



# 7. நிலைத்து நிற்கும் தன்மையினை அறிக்கையிடல்

**அறிமுகம்**

அண்மைய தசாப்தங்களில், மனித செயற்பாடு உலகில் கொண்டுள்ள தாக்கத்திலிருந்து விளையும் பிரச்சினைகளில் அதிகரித்துவரும் அக்கறை காணப்பட்டுள்ளது. உயிர்ப் பல்வகைமை, நீர் பற்றாக்குறை, வளம் குறைவடைதல், காலநிலை மாற்றம், மிகையான பொதியிடல் மற்றும் கழிவு, அதிகரித்த சனத்தொகை மற்றும் வறுமை போன்ற பிரச்சினைகளை இது உள்ளடக்குகின்றது. இவ் அக்கறைப்பாடுகள் ‘நிலைத்துநிற்கும் தன்மை’ என்ற பதத்துடன் தொடர்புபடுத்தப்படுகின்றன.

நிலைத்துநிற்கும் தன்மையினை ‘எதிர்கால சந்ததியினர் தமது தேவைகளைப் பூர்த்திசெய்தற்கான ஆற்றலினைப் பாதிக்காமல் தற்கால சந்ததியினரின் தேவைகளை பூர்த்திசெய்தல்’ என வரையறுக்க முடியும்.

நிறுவனங்கள் எச்செய்முறையினூடாக நிலைத்துநிற்கும் தன்மையினை அடைந்துகொள்வதனை இலக்காகக் கொண்டுள்ளனவோ அச்செய்முறையே நிலைத்துநிற்கும் அபிவிருத்தி ஆகும். நிலைத்துநிற்கும் அபிவிருத்தியானது நிலையான சமூக நிலை ஒன்றல்ல ஆனால் ஒப்பீட்டில் எம் மாற்றச் செய்முறையில் வளப் பயன்பாடு, முதலீட்டு வழிப்படுத்தல், தொழில்நுட்ப அபிவிருத்தியின் ஆரம்பம் மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்கள் என்பன எதிர்கால அதேபோல தற்காலத் தேவைகளுடன் இசைவாக்கப்படுகின்றதோ அச்செய்முறையே ஆகும்.

கூட்டு சமூகப் பொறுப்பு (CSR) என்னும் பதமானது அநேகமாக நிலைத்துநிற்கும் தன்மையுடன் இடைமாற்றாக பயன்படுத்தப்படுகின்றது. எனினும், நிறுவனங்கள் தமது பொறுப்புக்களை வரையறுப்பதற்கும் எவ்வாறு நிலைத்துநிற்கும் தன்மைப் பிரச்சினைகளானவை தந்திரோபாயமாகவும் தொழிற்பாடுகளாகவும் இணைக்கப்பட முடியும் என்பதை விளங்கிக்கொள்வதற்கும் பாவிக்கப்படும் இணைப்புப் பதம் ஒன்றாக இதைப் பார்க்க வேண்டும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக தேவைப்பாடுகள் என்பவற்றில் சமநிலை அல்லது இணைப்பு ஒன்றினை அடைவதற்கூடாக நிலைத்துநிற்கும் அபிவிருத்தியினைப் பின்பற்றுவதன் மூலம் அதன் கூட்டாண்மை மதிப்பினை “சிறந்த பொறுப்புவாய்ந்த கூட்டாண்மை பிரசை” ஆக இருக்குமாறு உயர்த்துவதற்கு பிரயத்தனம் செய்வதுடன் அக்கறைதாரர் மற்றும் அக்கறைதாரர் எதிர்பார்க்கைகள் என்பவற்றையும் எடுத்துரைக்கின்ற

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 1 – அரசாங்கம்**

அட்டவணை– 6.01:
திரட்டு நிதியத்துக்கான பங்களிப்பு

| பாதீட்டு வருடம் | ரூபா. மில்லியன் |
|---|---|
| 2006 | 4,000 |
| 2007 | - |
| 2008 | 1,000 |
| 2009 | 2,250 |
| 2010 | 2,000 |
| 2011 | 3,495 |
| 2012 | 4,200 |
| 2013 | 3,200 |
| 2014 | 4,000 |

வரைபடம் 6.01: திரட்டு நிதியத்துக்கான பங்களிப்பு




தே.கா.ந.பொ. நிதியமானது 2013 ஆம் ஆண்டில் ரூபா. 3200 மில்லியன் கொண்ட அதன் பங்களிப்புடன் ஒப்பிடுகையில் ரூபா. 4000 மில்லியனாக அதன் வருடாந்தப் பங்களிப்பினை திரட்டு நிதியத்திற்கு அதிகரித்தது. 2012 ஆம் ஆண்டில் ரூபா. 4,200 மில்லியன் கொண்ட எப்போதுமேயில்லாத உயர்வான தொகையினைப் பங்களித்தது.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 2 – வாடிக்கையாளர்**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது நலனோம்புகையினை வழங்கும் குறிக்கோளுடன் பல காப்புறுதித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. தே.கா.ந.பொ. நிதியத்தின் பயிர்க் காப்புறுதித் திட்டமானது குறிப்பிடத்தக்க குறைவான தவணைக் கட்டணத்தில் இயற்கைப் பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பினை வழங்குகின்றது. அக்ரஹார காப்புறுதித் திட்டமானது உயர்வான சலுகைத் தவணைக் கட்டண வீதங்களில் மருத்துவத்துடன் தொடர்புபட்ட பேரிடர்களுக்கான பாதுகாப்பினை வழங்குகின்றது.

அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் சேவையினை மேம்படுத்தி

விரிவாக்குவதற்கென தே.கா.ந.பொ. நிதியமானது புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் (MOUs) கைச்சாத்திட்டதன் மூலம் பல தனியார் வைத்தியசாலைகளுடன் பங்காளராகியுள்ளது. இதன் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது அக்ரஹார உரிமைக்கோரிக்கைத் தீர்ப்பனவுச் செய்முறையினைத் துரிதப்படுத்துவதற்கென இவ் வைத்தியசாலைகளில் கருமபீடங்களை உருவாக்கியுள்ளது.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 3 – சமூகம்**

தே.கா.ந.பொ. நிதியமானது குளியாப்பிட்டியில் நடாத்தப்பட்ட தயட்ட கிருல– 2014 இல் பங்குபற்றியதுடன் இதன் செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கென நிலையகம் (stall) ஒன்றினை செயற்படுத்தியது. தே.கா.ந.பொ. நிதியமானது தயட்ட கிருல கண்காட்சி – 2014 இற்காக தனிப்பட்ட விபத்துக் காப்பீட்டுப் பாதுகாப்பினை வழங்கியுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய நலனோம்பல் சங்கமானது கிராமியப் பாடசாலை ஒன்றான திக்கெல்லகந்த கனிஸ்ட வித்தியாலயத்திற்குப் பொருட்களை அன்பளிப்புச் செய்தது.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 4 – ஊழியர்கள்**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வெற்றியானது எமது ஊழியர்களின் செயற்றிறனில் தங்கியுள்ளது. குறைவான செயற்றிறனானது தே.கா.ந.பொ. நிதியத்தின் வெற்றிக்குப் பாதகமாகும். உங்களின் தொழிற்படையினை முகாமைசெய்து பயிற்றுவிப்பதற்கான முழுமையாக விருத்தியடைந்த (well-rounded) அணுகுமுறை ஒன்றினை உருவாக்குதலுக்கு சிறந்த தலைமைத்துவம் ஒன்றின் நிபுணத்துவம் மற்றும் நடைமுறைச் சாத்தியம் என்பனவும் மனித வள திணைக்களத்தின் அளப்பரிய உதவியும் தேவைப்படுகின்றது. சந்தையில் மேம்பாடு காண்பதற்கென போட்டி நன்மையாக ஊழியர்களைக் கற்பிக்கும் சாத்தியப்பாட்டினை மனித வள மற்றும் நிர்வாகத் திணைக்களங்கள் இனங்கண்டுள்ளன. ஆதலினால், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், நலனோம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றுக்கூடாக அலுவலர் குழாத்தின் மீது நாம் முதலீட்டினை ஈடுபடுத்தினோம்.

அட்டவணை 6.02: 2010 – 2014 ஆம் ஆண்டு வரையான அலுவலர் குழாத்தின் நலனோம்பல் செலவினம் (ரூபா.)

| 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| 935,912 | 1,438,399 | 1,944,808 | 957,411 | 1,399,871 |

தே.கா.ந.பொ. நிதியமானது 2014 ஆம் ஆண்டிலும் வருடாந்த வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை ஒழுங்குபடுத்தியது. குழு உணர்வு மற்றும் மனோநிலை அபிவிருத்தி என்பன தொடர்பில் அதிகளவானவற்றை ஊழியர்கள் கற்றுக்கொண்ட 03 நாள் வெளியிணைந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாக இது இருந்தது. அத்துடன் தொழிற்படையின் குழு உணர்வு மற்றும் ஒற்றுமை என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் 2014 ஆம் ஆண்டில் "வருடாந்த பக் மஹ உலெல" நடாத்தப்பட்டது. அத்துடன், வழமை போல ஜனவரி 01 ஆம் திகதி அலுவலர் குழாத்தின் மீதும் அதேபோல இந் நிறுவனத்தின் மீதும் ஆசீர்வாதத்தினை வேண்டி புத்த பிக்கு ஒருவர் மேற்கொண்ட சொற்பொழிவுடன் தே.கா.ந.பொ. நிதியமானது இப் புது வருடத்தினை ஆரம்பித்தது.



# 8. தொழில்முயற்சி ஆட்சி

## அறிமுகம்

தொழில்முயற்சி ஆட்சியானது நிறுவனத்தின் அனைத்து பொறுப்புக்கூறல் சட்டகத்தினையும் உள்ளடக்குகின்றது. சமநிலையில் இருக்க வேண்டிய, ஒத்திசைவு மற்றும் செயற்றிறன் என்பதான இரு தொழில்முயற்சி ஆட்சி பரிமாணங்கள் உள்ளன.

ஒத்திசைவானது "கூட்டுரிமை ஆட்சி" எனவும் அழைக்கப்படுகின்றது. இது சபைக் கட்டமைப்புக்கள் மற்றும் வகிபாகங்கள், மற்றும் நிறைவேற்று ஊதியம் போன்றவாறான பிரச்சினைகளை உள்ளடக்குகின்றது. பல்வேறுபட்ட கூட்டுரிமை ஆட்சி அவதூறு வதந்திகளைத் தொடர்ந்து அண்மைய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க விபர உள்ளடக்கத்தினை இது கொண்டுள்ளது என்பதுடன் இப்பிரிவில் தொடர்ச்சியான அபிவிருத்திகள் காணப்படும். விதிக்கோவைகள் அத்துடன்/ அல்லது நியமங்கள் என்பவற்றினால் கணக்காய்வுக்கு உட்பட்டிருக்கும் ஒத்திசைவுடனான இப் பரிமாணத்தினை பொதுவாக எடுத்துரைக்க முடியும். நற்கூட்டுரிமை ஆட்சி செய்முறைகளானவை விளைதிறன் வாய்ந்தவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சிறப்புற உருவாக்கப்பட்ட மேற்பார்வைப் பொறிமுறைகளும் சபைக்கென உள்ளன. உதாரணம், கணக்காய்வுக் குழுக்கள். இச் சபைக்கு, தந்திரோபாயத் தீர்மானங்களை வழங்குவதற்கும்; ஆபத்துக்கான அதன் நாட்டம் மற்றும் செயற்றிறனிற்கான அதன் அடிப்படைச் செலுத்திகள் என்பவற்றைப் புரிந்துகொள்வதற்கும் மற்றும் தீர்மானம் எடுத்தலுக்கான அதன் அடிப்படைத் தத்துவங்களை இனங்காண்பதற்கும் உதவிபுரிந்து தந்திரோபாயம் மற்றும் மதிப்பு உருவாக்கம் என்பவற்றின் மீது இச்செயற்றிறன் பரிமாணம் கவனத்தினைக் குவிக்கின்றது.

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உருவாக்கப்பட்டதிலிருந்து இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூலம் வெளியிடப்படும் கூட்டுரிமை ஆட்சி நன் நடைமுறைக் கோவை மற்றும் நல்லாட்சி மற்றும் கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகளுக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்கள் என்பவற்றின் உரிய துறைகளின் மீது உரிய கவனத்தினை

செலுத்தி அதன் கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன

### தே.கா.ந.பொ. நிதிய சபை

பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களையும், நிதி அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலர், நிதி அமைச்சின் பிரதம கணக்காளர், அரசாங்க நிர்வாக அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலர், நிதி, வங்கியில், காப்புறுதி, முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஆகிய துறைகளில் நிபுணத்துவத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஏனைய மூன்று ஆட்கள் ஆகியோரை உள்ளடக்கிய சபை ஒன்றின் மூலம் தே.கா.ந.பொ. நிதியமானது 2014 ஆம் ஆண்டில் முகாமை செய்யப்பட்டது. சபையின் ஆள் ஒருவரை தவிசாளராக நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்கேற்ப, சபையின் சகல உறுப்பினர்களும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருட காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும். பணிப்பாளர் சபையின் பெயர்கள் தே.கா.ந.பொ. நிதிய பக்கத்தின் பணிப்பாளர் சபையில் தரப்பட்டுள்ளன.

### தகவல் வழங்கல்

சபைக் கூட்டத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக சுற்றறிக்கையிடப்படும் மாதாந்த செயற்றிறன் அறிக்கைகள் மற்றும் முன்னைய சபைக் கூட்ட அறிக்கை, சபைப் பத்திரங்கள் என்பவை பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படும்.

### நிதிக் கூற்றுக்கள்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றுக்கு ஒத்திசைவாக முன்னளிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு விரிவான மற்றும் வெளிப்படையான செயற்றிறன் பகுப்பாய்வு ஒன்றினை தே.கா.ந.பொ. நிதியம் வழங்குகின்றது.

### ஆண்டறிக்கை 2014

அறிவார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்கென 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.கா.ந.பொ. நிதிய அலுவல்களின்

ஒட்டுமொத்த பார்வையினையும் காட்டுவதற்கு இந் நிறுவன வருடாந்த அறிக்கை 2014 வடிவமைக்கப்பட்டது.

### பெறுகை

தே.பெ.மு. (NPA) வழிகாட்டல்கள் மற்றும் பொது நிதி திணைக்கள வழிகாட்டல்கள் என்பவற்றைப் பயன்படுத்தி தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு CAPC (அமைச்சரவை நியமிப்புப் பெறுகைக் குழு) மற்றும் MPC (அமைச்சுப் பெறுகைக் குழு), DPC (திணைக்களப் பெறுகைக் குழு) போன்ற குழுக்களைப் பயன்படுத்தி பெறுகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### உள்ளகக் கட்டுப்பாடு

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்கள உள்ளகக் கணக்காய்வு மற்றும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியத்தின் கணக்காய்வு என்பன உள்ளங்கலாக உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளானவை உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன

### கணக்காய்வுக் குழு

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழு உருவாக்கப்பட்டதுடன் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லை பின்வருமாறு.

1. உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை வரையறுத்தல் மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வுசெய்தல்.
2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளிற்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
3. கிரய வினைத்திறனிற்காகவும் விரய செலவினம் போன்றவற்றை இல்லாமற் செய்வதற்கும் ஒழுங்கான இடைவெளிகளில் செயற்றிறனை மீளாய்வு செய்தல்.
4. வெளியகக் கணக்காய்வாளருடன் தொடர்புகொள்தல் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின்/ வெளியகக் கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதங்களைத் தொடர்தல்.
5. நியதிச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பன இயைந்தொழுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தல்.
6. கணக்கீட்டு நியமங்களுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துவதற்கு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
7. உள்ளகக் கணக்காய்வு/ வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள், தீர்வு நடவடிக்கைகளான முகாமைத்துவக் கடிதம் என்பவற்றை மீளாய்வு செய்தல்.

8. அரச தொழில்முயற்சிக் குழுவின் பரிந்துரை/ அறிவுறுத்தல்களின் அமுலாக்கத்தினை மீளாய்வு செய்தல்.
9. ஆண்டறிக்கையினை உள்ளடக்குவதற்காக குழுவின் முடிவு தொடர்பான அறிக்கையினைத் தயாரித்தல்.

## 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுரிமை ஆட்சி ஒத்திசைவு

**முகாமைத்துவக் கட்டமைப்பு**

தே.கா.ந.பொ. நிதியமானது பொருத்தமாக முகாமை செய்யப்படுகின்றது என்பதையும் அதன் நோக்கங்களை அது அடைந்துகொள்கின்றது என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தே.கா.ந.பொ. நிதிய சபை உறுப்பினர்கள் அக்கறைகொண்ட தரப்பினருக்குப் பொறுப்புடையவர்களாவர். ஒரு பொருத்தமான ஆட்சி முறைமையானது நிறுவகம் முழுவதுமே சீராக உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதையும் இது உள்ளடக்குகின்றது.

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தே.கா.ந.பொ. நிதியச் சட்டத்திலும் மற்றும் இச் சபைக்கும் அதன் குழுக்களுக்குமாக அதன் ஆய்வெல்லையின் கீழ் அல்லது சபைக் கூட்டங்களில் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளிலும் விசேடமாக விடயங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்பதுடன் தவிசாளருக்கு/ பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

**சபைக் கூட்டங்கள்**

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 14 சபைக் கூட்டங்கள் இடம்பெற்றதுடன் கூட்டத்தில் மிகச் சிறப்பான வரவுப் பதிவுகளை சபை உறுப்பினர்கள் பேணியிருந்தனர். சபைக் கூட்டங்களில் கலந்துகொண்ட சபை உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு தரப்பட்டுள்ளது;

| சபை உறுப்பினர் | நியமனத் திகதி | கலந்துகொண்ட கூட்டங்களின் எண். |
|---|---|---|
| திரு. டி. விதானகமாச்சி<br>தவிசாளர் | 09.10.2012 | 14 |
| கலாநிதி. எல். சமரவிக்ரம<br>சபை உறுப்பினர் | 11.06.2010 | 14 |
| திரு. ஏ.கே. செனெவிரத்ன<br>சபை உறுப்பினர் | 08.07.2011 | 14 |
| திரு. என். குலசேகர<br>சபை உறுப்பினர் | 18.07.2011 | 12 |
| திரு. ஜே. தடல்லகே<br>சபை உறுப்பினர் | 23.06.2010 | 13 |
| திரு. டபிள்யூ. எச். பியதாச<br>தொழிற்படு பணிப்பாளர் | 10.07.2010 | 14 |

அனுமதிக்கப்பட்ட வியாபாரத் திட்டம் மற்றும் அடையப்பெற்ற நிறுவனத்தின் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் என்பவற்றின் அடிப்படையில் ஒரு பொருத்தமான விதத்தில் வியாபாரம் நடாத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்தின் அக்கறைகொண்ட தரப்பினருக்கு பொறுப்புக்கூறக்கூடியதாக இச் சபை உள்ளது.



# 9. தொழில்முயற்சி இடர் முகாமைத்துவம்

## அறிமுகம்

ஒரு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, முகாமை மற்றும் ஏனைய ஆளணி ஆகியவற்றினால் விளைவிக்கப்படும், தந்திரோபாயம் அமைத்தல் மற்றும் தொழில்முயற்சியின் வழியே பிரயோகிக்கப்படும், நிறுவனத்தினைப் பாதிக்கக்கூடிய சாத்தியமான நிகழ்வுகளை இனங்காண்பதற்கும் மற்றும் அதன் இடர் நாட்டத்திற்குள் இருக்கும் இடரினை முகாமைசெய்யவும், நிறுவன நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பில் நியாயமான உறுதிப்பாட்டினை வழங்கவுமென வடிவமைக்கப்படும் செய்முறையாக தொழில்முயற்சி இடர் முகாமைத்துவத்தினை (ERM) வரையறுக்க முடியும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் பின்பற்றப்படும் தொழில்முயற்சி இடர் முகாமைத்துவத்தினது (ERM) அடிப்படை தத்துவங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

• வியாபாரத் தந்திரோபாயச் சூழமைவிலான அக்கறை

• உயர் மட்டத்திலிருந்து ஏற்படுத்தப்படும் வெளிப்படுத்துகை விதத்துடன் ஒவ்வொருவரினதும் பொறுப்பாக இது இருக்கின்றது.

• சபையினால் வழிப்படுத்தப்படும் ஒரு மையக் குவிப்புத் தந்திரோபாயம்

• செயலூக்க இடர் முகாமைத்துவம்

• இடர் விழிப்புணர்வு வழக்கம் ஒன்றின் உருவாக்கம்

• இடர் முகாமைத்துவத்திற்கான ஒரு முழுமொத்த மற்றும் முழுநிலை அணுகுமுறை

• ஒரு பரந்துபட்ட இடர் வீச்சினைக் கருத்திற்கொள்ளல் (தந்திரோபாயம், நிதி, தொழிற்பாடு மற்றும் ஒத்திசைவு)

• இடர் முகாமைத்துவ சட்டகம் அல்லது முறைமை ஒன்றுக்கூடான அமுலாக்கம்.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தந்திரோபாய முகாமைத்துவத்தின் மையப் பகுதியாக இடர் முகாமைத்துவம் உள்ளது. தே.கா.ந.பொ. நிதிய இடர் முகாமையானது ஒவ்வொரு

செயற்பாட்டிற்குள்ளும் மற்றும் சகல செயற்பாட்டுத் தொகுதியின் வழியேயும் நிலைத்துநிற்கும் நன்மையினை அடைந்துகொள்ளும் இலக்குடன்கூடிய தமது செயற்பாடுகளுடன் இணைந்த ஆபத்துக்களை முறைமையாக எடுத்துரைக்கின்றது. சிறந்த இடர் முகாமைத்துவத்தின் நோக்கானது இவ் இடர்களை இனங்கண்டு தீர்த்தலாக உள்ளது என்பதை தே.கா.ந.பொ.நிதியம் அடையாளங் கண்டுகொண்டுள்ளது. இந்நிறுவனத்தினைப் பாதிக்கக்கூடிய இச்சகல காரணிகளினதும் சாத்தியமான நன்மை தீமைகளை விளங்கிக்கொள்வதனூடாக நிறுவனத்தின் சகல செயற்பாடுகளுக்கும் உச்சபட்சமான நிலைத்துநிற்கும் பெறுமதியினைச் சேர்ப்பதே தே.கா.ந.பொ.நிதியத்தின் குறிக்கோளாகும். தொழில்முயற்சி இடர் முகாமைத்துவத் தந்திரோபாயங்களைப் பின்பற்றும் போது தாக்கம்/ விளைவின் அளவு மற்றும் நிகழ்வின் சாத்தியப்பாடு/ மெய்ப்பாட்டுத் தோற்றம் என்பவற்றை மதிப்பீடு செய்து பின்வரும் முக்கியமான இடர்கள் இனங்காணப்பட்டுள்ளன.

### R01 - தந்திரோபாய இடர்

உள்ளக மற்றும் வெளியக சுற்றாடல் காரணிகள் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தந்திரோபாய இலக்குகள், நோக்கங்கள் மற்றும் வியாபாரத் திட்டம் என்பவற்றை அடைந்துகொள்ளவியலாதிருக்கும் இடராகும். தந்திரோபாய நோக்கங்களை அடைந்துகொள்வதை உறுதிப்படுத்துவதற்கென தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முகாமையானது பொதுச் சூழலிலுள்ள அரசியல், தொழில்நுட்ப, சமூக-கலாசார, பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தந்திரோபாய உத்தேசத்தினைப் பாதிக்கக்கூடிய காப்புறுதித் துறையுடன் தொடர்புற்ற இலங்கையின் பணிச் சூழலிலுள்ள போட்டியாளர் மற்றும் வாடிக்கையாளர் இயக்க காரணிகள் ஆகியவற்றை விழிப்பாக கண்காணித்து வருகின்றது.

### R02 - வியாபார இடர்

பல்வேறுப்பட்ட வியாபாரச் செயற்பாடுகள் தடைப்படுதல் அல்லது குறைவடைந்து செல்லும் ஆபத்தினை வியாபார இடர் குறிக்கின்றது. பயிர்க் காப்புறுதி, பொதுக் காப்புறுதி, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய காப்புறுதி, மோட்டார் வாகனக் காப்புறுதி, அக்ரஹார காப்புறுதி, வெளிநாட்டுத் தொழில் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி போன்ற பல தந்திரோபாய வியாபார அலகுகளாக பன்முகப்படுத்துவதனூடாக தே.கா.ந.பொ. நிதியத்தின் வியாபார இடரானது குறைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

### R03 - திரவத்தன்மை இடர்

மீள்கொள்வனவு (Repos), வெவ்வேறான முதிர்ச்சிக்காலங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள், வெவ்வேறான முதிர்ச்சிக்காலங்களைக் கொண்ட திறைசேரி முறிகள் மற்றும் தொகுதிக்கடன்கள் போன்ற வெவ்வேறான முதிர்ச்சிக்காலங்களைக் கொண்ட முதலீட்டு பல்வகைப்படுத்தலுக்கூடாக திரவத்தன்மை இடர் அல்லது உரிமைக்கோரிக்கைக் கொடுப்பனவுகள், மீள்காப்புறுதிக் கொடுப்பனவுகள் மற்றும் நிதி அமைச்சினால் கோரிக்கையிடப்படும் போது திறைசேரிக்கான நிதிய மாற்றல்கள் போன்ற ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான இயலாமை குறைக்கப்பட்டுள்ளது.

### R04 - தொழிற்பாட்டு இடர்

தொழிற்பாடுகளைக் கணனிமயப்படுத்துவதன் மூலமும் உள்ளக கணக்காய்வின் மூலமும் தொழிற்பாட்டு இடர் குறைக்கப்படுகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினுடைய வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தினதும் ஏனைய திணைக்களத்தினதும் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடானது தவணைக் கட்டணச் சேகரிப்பு மற்றும் உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுகள் என்பவற்றின் வழுக்கள் மற்றும் வேறுபாடுகளைக் குறைப்பதற்கென உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் வழுக்கள் மற்றும் வேறுபாடுகளைக் குறைக்கும் பொருட்டு அலுவல நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

### R05 - சர்வதேச இடர்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொழிலில் நேரடித் தாக்கத்தினைக் கொண்டுள்ள சர்வதேச அரசியல் மற்றும் சமூக – பொருளாதார காரணிகள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் கண்காணிக்கப்பட்டுள்ளன. இவை விசேடமாக தே.கா.ந.பொ. நிதியத்தின் மீள்காப்புறுதித் துறையுடன் தொடர்புபட்ட சர்வதேச வியாபாரப் போக்குகளைக் கண்காணிப்பதன் மூலம் முகாமை செய்யப்பட்டுள்ளன.

### R06 –இயற்கை இடர்

பயிர்க் காப்புறுதி, பொதுக் காப்புறுதி மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதி ஆகியவற்றைப் பாதிக்கும் மழை, வெள்ளப் பெருக்கு, சூறாவளி அதேபோல பீடைத் தாக்கங்கள் மற்றும் பூச்சித் தாக்கங்கள் போன்ற இயற்கைப் பேரழிவுகள் காரணமாகத் தோன்றுகின்ற இடரினை இது குறிக்கின்றது. வானிலை எதிர்வுகூறலைக் கவனமாகக் கண்காணிப்பதன் மூலமும் அதற்கிணங்க தவணைக் கட்டணத்தினை கட்டுப்படுத்துவதன் மூலமும் இவ் இடர் குறைக்கப்படுகின்றது.

### R07 -குவிப்பு இடர்

வங்கியானது யாருக்கு பணத்தினைக் கடன் வழங்கியுள்ளதோ அல்லது முதலிட்டுள்ளதோ அக் கடன்படுநர்கள் அல்லது நிதியீட்டாளர்களின் எண்ணிக்கை அல்லது வகையின் மீதான ஒரு நிறுவனத்தின் செலுத்த வேண்டிய நிதி ஒதுக்குகளின் ஒட்டுமொத்த பரம்பலே குவிப்பு இடராகும். மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி போன்ற பல வங்கிகளுக்குள் முதலீடுகளை பன்முகப்படுத்துவதன் ஊடாக குவிப்பு இடர் குறைக்கப்படுகின்றது.

### R08 - தொழிற்பாட்டு இடர்

தொழிற்பாடுகளைக் கணனிமயப்படுத்துவதன் மூலம் தொழிற்பாட்டு இடர் குறைக்கப்படுகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினுடைய வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தினதும் ஏனைய திணைக்களத்தினதும் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடானது தவணைக் கட்டணச் சேகரிப்பு மற்றும் உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுகள் என்பவற்றின் வழுக்கள் மற்றும் வேறுபாடுகளைக் குறைப்பதற்கென உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் வழுக்கள் மற்றும் வேறுபாடுகளைக் குறைக்கும் பொருட்டு அலுவல நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.



# 10. கணக்காய்வுக் குழு அறிக்கை

**கணக்காய்வுக் குழு அறிக்கை**

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திரு. ஏ.கே. செனெவிரத்ன (பணிப்பாளர் நாயகம் – அரசிறைக் கொள்கைத் திணைக்களம்), திரு. லோகித சமரவிக்கிரம மற்றும் திரு. என். குலசேகர (பிரதம கணக்காளர் – நிதி அமைச்சு) எனப் பெயர்குறிக்கப்படும் நிறைவேற்றுத் தரம் சாராத மூன்று பணிப்பாளர்களை இக் கணக்காய்வுக் குழு (AC) உள்ளடக்கியது.

கணக்காய்வு அதிபதித் திணைக்களத்திலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கென நியமிக்கப்பட்ட கணக்காய்வு அத்தியட்சகரும் இக் குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களில் பங்குபற்றினார்.

**கணக்காய்வு நோக்கெல்லை**

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இக் கணக்காய்வுக் குழுவானது பின்வரும் கணக்காய்வு நோக்கெல்லையினை உருவாக்கியுள்ளது.

1. உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை வரையறுத்தல் மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வுசெய்தல்.
2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளிற்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
3. கிரய வினைத்திறனிற்காகவும் விரய செலவினம் போன்றவற்றை இல்லாமற் செய்வதற்கும் ஒழுங்கான கால இடைவெளிகளில் செயற்றிறனை மீளாய்வு செய்தல்.
4. வெளியகக் கணக்காய்வாளருடன் தொடர்புகொள்தல் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின்/ வெளியகக் கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதங்களைத் தொடர்தல்.
5. நியதிச் சட்டங்கள், பிரமாணங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பன இயைந்தொழுகுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தல்.
6. கணக்கீட்டு நியமங்களுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துவதற்கு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
7. உள்ளகக் கணக்காய்வு/ வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள், தீர்வு நடவடிக்கைகான முகாமைத்துவக் கடிதம் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
8. அரச தொழில்முயற்சிக் குழுவின் பரிந்துரை/ அறிவுறுத்தல்களின் அமுலாக்கத்தினை மீளாய்வு செய்தல்.

**குழுக் கூட்டங்கள்**

2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டுக் காலப்பகுதியில், ஐந்து குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. குழுக் கூட்டங்களின் தொடர் நடவடிக்கைகளானவை போதுமான விபரங்களுடன் பதிவுசெய்யப்பட்டு பணிப்பாளர் சபைக்கு ஒழுங்காக அறிக்கையிடப்பட்டுள்ளன.

**உள்ளகக் கணக்காய்வு**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது அதன் சொந்த உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினைக் கொண்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வுத் திட்டமானது முன்வைக்கப்பட்டு கணக்காய்வுக் குழுவினால் (AC) அனுமதிக்கப்பட்டதுடன் குழுவானது உள்ளகக் கணக்காய்வு மற்றும் பரிசோதனைத் தொழிற்பாட்டினை ஒழுங்காக மீளாய்வு செய்து கண்காணிக்கின்றது.

**வெளியகக் கணக்காய்வு**

கணக்காய்வு அதிபதியினால் வழங்கப்படும் கணக்காய்வுச் சேவைகளானவை வெளியகக் கணக்காய்வாளர்களின் சுதந்திரத்தினைப் பாதிப்பதில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு கணக்காய்வுக் குழு அத்தகைய சேவைகளை மீளாய்வு செய்கின்றது.



# 11. பணிப்பாளர்களின் அறிக்கை

## பணிப்பாளர்களின் அறிக்கை

நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் ஏழு உறுப்பினர்களை உள்ளடக்கும் சபை ஒன்றின் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது முகாமை செய்யப்படுகின்றது.

(அ) நிதி விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்குரிய அமைச்சின் அலுவலர் ஒருவர்:

(ஆ) நிதி விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்குரிய அமைச்சின் பிரதம கணக்காளர்:

(இ) சுகாதார விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்குரிய அமைச்சின் அலுவலர் ஒருவர்:

(ஈ) அரசாங்க நிர்வாக விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்குரிய அமைச்சின் அலுவலர் ஒருவர்: அத்துடன்

(உ) நிதி வங்கியியல், காப்புறுதி முகாமைத்துவம் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் தகைமைகளை அல்லது நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள ஆட்களிலிருந்து அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படவுள்ள மூன்று ஆட்கள்.

சபையின் ஆள் ஒருவரை தவிசாளராக நியமிப்புச் செய்வதற்கு அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்கேற்ப, சபையின் சகல உறுப்பினர்களும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருட காலப்பகுதி ஒன்றுக்கு பதவியினை வகித்தல் வேண்டும்.

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 14 சபைக் கூட்டங்கள் இடம்பெற்றன அத்துடன் சபை உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் சிறந்த வரவுப் பதிவுகளைப் பேணியிருந்தனர். சபைக் கூட்டங்களில் சபை உறுப்பினர்களின் வரவானது பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது;

| சபை உறுப்பினர் | நியமனத் திகதி | வருகைதந்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு. டி. விதானகமாச்சி<br>தவிசாளர் | 09.10.2012 | 14 |
| கலாநிதி. எல். சமரவிக்ரம<br>சபை உறுப்பினர் | 11.06.2010 | 14 |
| திரு. ஏ.கே. செனவிரத்ன<br>சபை உறுப்பினர் | 08.07.2011 | 14 |
| திரு. என். குலசேகர<br>சபை உறுப்பினர் | 18.07.2011 | 12 |
| திரு. ஜே. தடல்லகே | 23.06.2010 | 13 |

சபை உறுப்பினர்

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யூ. எச். பியதாச<br>தொழிற்படு பணிப்பாளர் | 10.07.2010 | 14 |

அனுமதிக்கப்பட்ட வியாபாரத் திட்டம் மற்றும் நிறுவனம் அடைந்துகொண்ட நிதி மற்றும் பௌதீக இலக்குகள் என்பவற்றின் அடிப்படையில் பொருத்தமானதோர் விதத்தில் வியாபாரம் நடாத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதில் நிறுவனத்தின் அக்கறைதாரருக்கு சபையானது பொறுப்புக்கூற வேண்டியுள்ளது.

**பிரதான செயற்பாடுகளும் வியாபார மீளாய்வுகளும்**

2014 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான செயற்பாடுகளானவைஅரசாங்க அலுவலர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹாரா), கட்டாய மீள்காப்புறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம் (அரசாங்கத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்காக), பொதுக் காப்புறுதித் திட்டம், பயிர்க் காப்புறுதித் திட்டம் மற்றும்வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் (SRCC&TF) முகாமை ஆகியவற்றின் அமுலாக்கமாக உள்ளன.

**நிதிப் பெறுபேறுகள்**

2014 ஆம் ஆண்டில் உள்முக மீள்காப்புறுதி, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதிய (SRCC&T) தவணைக் கட்டணம் மற்றும் பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்தான தவணைக் கட்டணம் ஆகியவற்றின் அதிகரிப்புக் காரணமாக 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு துரித அதிகரிப்பினைக் காட்டி ரூபா. 5,842 மில்லியன் கொண்டமொத்த உழைப்புத் தவணைக் கட்டணத்தினை (GWP) 2014 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பதிவுசெய்துள்ளது. 2014 ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது ரூபா. 4,583 மில்லியன் கொண்ட தேறிய இலாபம் ஒன்றை உழைத்துள்ளது.

**ஊழியர்கள்**

2014 ஆம் ஆண்டிறுதியிலுள்ளவாறு மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையானது 177 ஆகும்.

**கணக்காய்வாளர்கள்**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கேற்ப கணக்காய்வாளர் அதிபதியினால் இச் சபையின் 2014 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றானது கணக்காய்வு செய்யப்பட்டது.

**கணக்காய்வுக் குழு**

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திரு. ஏ.கே. செனெவிரத்ன - (திறைசேரியின் பிரதிநிதி/ மேலதிக பணிப்பாளர் நாயகம் – அரசிறைக் கொள்கைத் திணைக்களம்), வைத்திய லோகித சமரவிக்கிரம மற்றும் திரு. என். குலசேகர (பிரதம கணக்காளர் – நிதி அமைச்சு) எனப் பெயர்குறிக்கப்படும் நிறைவேற்றுத் தரம் சாராத மூன்று பணிப்பாளர்களை இக் கணக்காய்வுக் குழு (AC) உள்ளடக்கியது.

கணக்காய்வு அதிபதித் திணைக்களத்திலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கென நியமிக்கப்பட்ட கணக்காய்வு அத்தியட்சகரும் இக் குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களில் பங்குபற்றினார்.

2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டுக் காலப்பகுதியில், ஐந்து குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. குழுக் கூட்டங்களின் தொடர் நடவடிக்கைகளானவை போதுமான விபரங்களுடன் பதிவுசெய்யப்பட்டு பணிப்பாளர் சபைக்கு ஒழுங்காக அறிக்கையிடப்பட்டுள்ளன.

உள்ளகக் கணக்காய்வுத் திட்டமானது முன்வைக்கப்பட்டு கணக்காய்வுக் குழுவினால் (AC) அனுமதிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திணைக்களங்களின் உள்ளகக் கணக்காய்வு மற்றும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் (SRCC&T) கணக்காய்வு உள்ளடங்கலான உள்ளகக் கணக்காய்வுத்தொழிற்பாடுகள்உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கூட்டுரிமை ஆட்சி**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட கூட்டுரிமை ஆட்சி ஒழுக்க விதிக்கோவை மற்றும் நல்லாட்சி மற்றும் கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகளுக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்கள் ஆகியவற்றின் பொருத்தமான பிரிவுகளின் மீது உரிய கவனத்தினைச் செலுத்தி கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மஞ்சுளா டி சில்வா

தவிசாளர்

தயானி சியாம்பலாகொட

சபைச் செயலாளர்

2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 9 ஆம் திகதி

கொழும்பு



# 12. நிதிக் கூற்றுக்கள் -2014

# வருமானக் கூற்று

| டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது | | (சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்) | |
|---|---|---|---|
| | | 2014 | 2013 |
| | குறிப்புக்கள் | ரூபா. | ரூபா. |
| மொத்த உழைப்புத் தவணைக் கட்டணம் | 1 | 5,842,067,431 | 4,168,033,208 |
| அக்ரஹாரவிற்காக சேகரிக்கப்பட்ட பங்களிப்பு | 1 | 1,494,899,976 | 1,406,706,842 |
| சேகரிக்கப்பட்ட பயிர்க் காப்புறுதி விதிப்பனவு | | 1,184,647,255 | 440,836,600 |
| தேறிய உழைப்புத் தவணைக் கட்டணம் | | **8,521,614,663** | **6,015,576,650** |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கில் தேறிய மாற்றம் | | **(505,986,318)** | **(563,257,987)** |
| **தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம்** | | **8,015,628,346** | **5,452,318,663** |
| **ஏனைய தொழிற்பாடுகளிலிருந்தான வருமானம்** | | | |
| கட்டணங்களும் தரகு வருமானமும் | 2 | 1,405,900 | 16,275 |
| முதலீடும் ஏனைய வருமானமும் | 3 | 638,509,884 | 700,136,640 |
| **ஏனைய வருமானம்** | | **639,915,784** | **700,152,915** |
| செலுத்தப்பட்ட மொத்த நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும் | 4 | (2,373,269,385) | (1,394,317,378) |
| மீள்காப்புறுதி செய்பவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் | 4 | - | - |
| ஒப்பந்தப் பொறுப்புக்களில் மொத்த மாற்றம் | 4 | (831,930,326) | 13,017,715 |
| மீள்காப்புறுதி செய்பவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஒப்பந்தப் பொறுப்புக்களில் மொத்த மாற்றம் | 4 | - | - |
| **தேறிய நன்மைகளும் உரிமைக்கோரிக்கைகளும்** | | **(3,205,199,711)** | **(1,381,299,662)** |
| பொறுப்பேற்றல் மற்றும் கொள்ளல் கிரயம் (மீள்காப்புறுதி உள்ளடங்கலாக) | 5 | (694,770,258) | (382,177,026) |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாக நிதிச் செலவு | 6 | (172,918,575) | (149,567,708) |
| **மொத்த நன்மைகள், உரிமைக்கோரிக்கைகள் மற்றும் ஏனைய செலவினங்கள்** | | **(4,072,888,544)** | **(1,913,044,397)** |
| **வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | | **4,582,655,586** | **4,239,427,182** |
| வருமான வரிச் செலவினங்கள் | | - | - |
| **ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)** | | **4,582,655,586** | **4,239,427,182** |
| **ஏனைய முழுமொத்த வருமானம்** | | | |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | 155,191,084 | 17,624,148 |
| **ஆண்டுக்கான ஏனைய முழுமொத்த வருமானம், தேறிய வரி** | | 155,191,084 | 17,624,148 |
| **மொத்த முழுமொத்த வருமானம்** | | **4,737,846,670** | **4,257,051,330** |

# ஐந்தொகை

## ஐந்தொகை

| டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | குறிப்புக்கள் | 2014 ரூபா. | 2013 ரூபா. |
|---|---|---|---|
| | | (சகல பெறுமானங்களும் இலங்கைரூபாவில்) | |
| **சொத்துக்கள்** | | | |
| அருவச் சொத்துக்கள் | 7 | 0 | 17,188 |
| ஆதனங்களும்பொறித்தொகுதிகளும்உபகரணங்களும் | 8 | 26,251,881 | 19,277,720 |
| நிதிச் சொத்துக்கள் | 9 | 9,105,573,879 | 6,844,238,119 |
| வருமதியாகவுள்ள தவணைக் கட்டணம் | 10 | 1,144,259,034 | 824,727,624 |
| மென் கடன்கள் | 11 | 188,220,907 | 622,760,214 |
| ஏனைய நிதிசாராச் சொத்துக்கள் | 12 | 84,351,380 | 78,069,200 |
| பிற்போடப்பட்டதாகு | 13 | 366,621,700 | 199,173,169 |
| வங்கியிலுள்ள காசும் கையிலுள்ள காசும் | 14 | 278,096,913 | 360,658,373 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **11,193,375,695** | **8,948,921,608** |
| **உரிமைமுதலும் பொறுப்புக்களும்** | | | |
| பிடித்துவைத்த உழைப்புக்கள் | | 7,550,219,714 | 6,949,244,214 |
| ஏனைய உரிமைமுதல் கூறு | | 172,815,232 | 17,624,148 |
| **மொத்த உரிமைமுதல்** | | **7,723,034,946** | **6,966,868,362** |
| **பொறுப்புக்கள்** | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள் | | 3,240,259,344 | 1,895,716,630 |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு | | 11,364,304 | 7,799,474 |
| ஏனைய பொறுப்புக்கள் | 15 | 197,413,174 | 23,374,582 |
| வங்கி மேலதிகப் பற்று | 14 | 21,303,927 | 55,162,561 |
| **மொத்தப்பொறுப்புக்கள்** | | **3,470,340,750** | **1,982,053,247** |
| **மொத்தஉரிமைமுதலும்பொறுப்புக்களும்** | | **11,193,375,695** | **8,948,921,608** |

இந்நிதியத்தின்நிதிக்கூற்றானதுஇலங்கைக்கணக்கீட்டுநியமங்களின்தேவைப்பாட்டுடன்ஒத்திசைகின்றதுஎன்பதைநான்உறுதிப்படுத்துகின்றேன்

..............................
நிதிமுகாமையாளர்

பக்கம் 5 தொடக்கம் 33 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன இந் நிதிக் கூற்றுக்களில் முக்கியமான பகுதியினை உருவாக்குகின்றன. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்வைப்பதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந் நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் சார்பில் ஒப்பமிடப்பட்டுள்ளன.

.............................. ..............................
பணிப்பாளர் பணிப்பாளர்

# உரிமைமுதல் மாற்றக் கூற்று

டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு

(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

| | பிடித்து வைத்த உழைப்புக்கள் ரூபா. | நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய ரூபா. | மொத்த உரிமை முதல் ரூபா. |
|---|---|---|---|
| 2012 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | **5,912,918,517** | **-** | **5,912,918,517** |
| ஆண்டுக்கான இலாபம் | 4,239,427,182 | - | **4,239,427,182** |
| **ஏனைய முழுமொத்த வருமானம்** | | | |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | 17,624,148 | **17,624,148** |
| மோட்டார் வாகனத் தவணைக் கட்டணச் சீராக்கம் | (5,964,896) | | **(5,964,896)** |
| முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் - வே.க.சி.கு. (SRCC) | 2,863,411 | | **2,863,411** |
| திரட்டு நிதியத்துக்கு மாற்றப்பட்ட காசு | (3,200,000,000) | - | **(3,200,000,000)** |
| **2013 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி** | **6,949,244,214** | **17,624,148** | **6,966,868,362** |
| ஆண்டுக்கான இலாபம் | 4,582,655,586 | - | 4,582,655,586 |
| **ஏனைய முழுமொத்த வருமானம்** | | | |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | 155,191,084 | 155,191,084 |
| மோட்டார் வாகன திரண்ட தேய்வுச் சீராக்கம் | 14,558,589 | - | **14,558,589** |
| மீளப்பெற்ற இலாபத் தரகு மற்றும் மீ.கா. (RI) திணைக்களத்திடமிருந்து மீளப்பெறக்கூடியவை: | 12,287,375 | | 12,287,375 |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டணத் திருத்தமும் செலுத்த வேண்டிய வே.க.சி.கு. (SRCC) இற்குகொண்டுசெல்லப்பட்டதும் | (10,268,621) | | (10,268,621) |
| 2013 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான தேய்வு | (511,780) | | (511,780) |
| SLIPS வருவாய் திருத்தம் | 2,055,047 | | 2,055,047 |
| ஊ.ந.பொ.நி. (ETF) மற்றும் முத்திரைத் தீர்வைத் திருத்தம் | 199,305 | | 199,305 |
| திரட்டு நிதியத்துக்கு மாற்றப்பட்ட காசு | (4,000,000,000) | - | (4,000,000,000) |
| **2014 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி** | **7,550,219,714** | **172,815,232** | **7,723,034,946** |

# காசுப் பாய்ச்சல் கூற்று

டிசெம்பர்31 ஆம்திகதியில்முடிவடைந்தஆண்டுக்கானது

| | | 2014 | 2013 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **தொழிற்பாட்டுநடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| வரிக்குமுன்னரானஇலாபம் | | 4,582,655,586 | 4,239,427,182 |
| **சீராக்கங்கள் :** | | | |
| வட்டி வருமானம் | | (624,075,269) | (700,136,640) |
| தேய்வு | | 8,552,653 | 9,604,450 |
| தேறிய முகப் பெறுமதி மாற்றங்கள் | | 155,191,084 | 17,624,148 |
| பதிவழித்த இலாபத் தரகுச் செலவுகளும்மீ.கா. (RI) திணைக்களத்திடமி( | | 12,287,375 | - |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டணத் திருத்தமும் செலுத்த வேண்டிய வே | | (10,268,621) | |
| மோட்டார் வாகனத் தவணைக் கட்டணச் சீராக்கம் | | - | (5,964,896) |
| முன்னையஆண்டுச்சீராக்கங்கள் - வே.க.சி.கு. (SRCC) | | - | 2,863,411 |
| SLIPS வருவாய் திருத்தம்☐ | | 2,055,047 | |
| ஊ.ந.பொ.நி. (ETF) மற்றும் முத்திரைத் தீர்வைத் திருத்தம் | | 199,305 | |
| | | **4,126,597,159** | **3,563,417,655** |
| தொழிற்பாட்டுச் சொத்துக்களில் மாற்றம் | **A** | (493,262,120) | (219,246,251) |
| தொழிற்பாட்டுப் பொறுப்புக்களில் மாற்றட | **B** | 1,518,581,307 | 489,454,031 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | 5,151,916,346 | 3,833,625,434 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | 3,564,830 | 4,902,437 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு | | 5,155,481,176 | 3,838,527,871 |
| **முதலீட்டுச்செயற்பாடுகளிலிருந்தானகாசுப்பாய்ச்சல்** | | | |
| நிதி முதலீட்டின் தேறிய கொள்ளல் | | (2,261,335,760) | (1,468,323,447) |
| பெற்றுக்கொண்ட வட்டி | | 624,075,269 | 700,136,640 |
| மென் கடன்களின் மீள்பெறுகை | | 434,539,307 | 335,696,568 |
| ஆதனம்,பொறித்தொகுதிமற்றும்உபகரணக்கொள்வனவுகள் | | (1,462,818) | (4,183,215) |
| முதலீட்டுச்செயற்பாடுகளில்பாவிக்கப்பட்டதேறியகாசு | | (1,204,184,002) | (436,673,454) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தானகாசுப்பாய்ச்சல்** | | | |
| திரட்டுநிதியத்துக்கு மாற்றப்பட்ட காசு | | (4,000,000,000) | (3,200,000,000) |
| நிதிச் செயற்பாடுகளில்பாவிக்கப்பட்டதேறியகாசு | | (4,000,000,000) | (3,200,000,000) |
| **காசும்காசுக்குச்சமமானவற்றினதும்தேறியஅதிகரிப்பு / (குறைவு)** | | (48,702,826) | 201,854,417 |
| ஆண்டுத்தொடக்கத்தில் தேறியகாசும்காசுக்குச்சமனானவிடயங்களும் | | 305,495,812 | 103,641,397 |
| ஆண்டு இறுதியில்காசும்காசுக்குச்சமனானவிடயங்களும் | | 256,792,986 | 305,495,814 |

**காசுப் பாய்ச்சற் கூற்றிற்கான குறிப்புக்கள்**

| | 2014 | 2013 |
|---|---|---|
| **A. தொழிற்பாட்டுச் சொத்துக்களில் மாற்றம்** | | |
| பிற்போடப்பட்டதரகில் (அதிகரிப்பு)/ குறைவு | (167,448,531) | (22,640,481) |
| வருமதியான தவணைக் கட்டணத்தில் (அதிகரிப்பு)/ குறைவு | (319,531,410) | (327,650,517) |
| ஏனைய நிதி சாராச் சொத்துக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | (6,282,179) | 131,044,747 |
| | (493,262,120) | (219,246,251) |
| **B. தொழிற்பாட்டுப் பொறுப்புக்களில் மாற்றம்** | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | 1,344,542,715 | 550,240,272 |
| ஏனைய பொறுப்புக்களில் அதிகரிப்பு/ (குறைவு) | 174,038,592 | (60,786,241) |
| | 1,518,581,307 | 489,454,031 |
| **C. காசும்காசுக்குச்சமமானவற்றினதும்அதிகரிப்பு / (குறைவு)** | | |
| ஆண்டு இறுதியில்தேறிய காசும்காசுக்குச்சமனானவிடயங்களும் | 256,792,986 | 305,495,812 |
| கழிப்பனவு: ஆண்டுத்தொடக்கத்தில் தேறியகாசும்காசுக்குச்சமனானவிட | 305,495,812 | 103,641,397 |
| காசும்காசுக்குச்சமனானவிடயங்களின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | (48,702,826) | 201,854,415 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

### 1.0 கூட்டுரிமைத் தகவல்

1.1 நிறுவனத்தினை அறிக்கையிடல்

"2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்" மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது ("இந் நிதியம்") உருவாக்கப்பட்டு இலங்கையில் அமையப் பெற்றுள்ளது. தே.கா.ந.பொ.நிதியத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இல. 97, மருதானை வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்துள்ளதுடன் பிரதான தொழில் தளமும் இம் முகவரியிலேயே அமைந்துள்ளது.

1.2 தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும்
சபையின் தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும் இலங்கை அரசாங்கம் ஆகும்.

1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்
இச் சபையின் பிரதான செயற்பாடுகளானவை பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதித் தொழில் என்பவற்றை நடாத்திச் செல்கின்றன.

1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு
பணிப்பாளர் சபையானது இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்னளிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

1.5 ஊழியர்களின் எண்ணிக்கை
2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இச் சபையின் ஊழியர் வலு 177 (2013 - 162) ஆக இருந்தது.

### 2.0 முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்

**2.1 தயாரிப்பு அடிப்படை**

முகப் பெறுமதியில் அளவிடப்படும் 'விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய' நிதிச் சொத்துக்கள் தவிர வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

1.1 ஒத்திசைவுக் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ( ICASL) நடைமுறைப்படுத்தப்பட்டதும் SLFRS ( IFRS இற்கு ஒத்ததாக) மற்றும் LKAS (IAS இற்கு ஒத்ததாக) ஆகிய இரண்டும் முன்னிணைக்கப்பட்ட புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க ( SLAS) இச் சபையின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. SLFRS மற்றும் LKAS மற்றும் SLFRS 1 – இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் முதலாவது பின்பற்றுகை ஆகியவை முன்னிணைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட சபையின் முதலாவது நிதிக் கூற்றுக்கள் இவையாகும்.

1.1 தொழிற்பாட்டு மற்றும் முன்னளிப்பு நாணயம்

நிதிக் கூற்றுக்களானவை இலங்கை ரூபாவில் ( LKR) முன்னளிக்கப்படுகின்றன. இலங்கை ரூபாவில் முன்னளிக்கப்படும் சகல நிதித் தகவல்களும் வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி மிகக் கிட்டிய ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

1.2 **அறிக்கையிடும் காலப்பகுதி**

அறிக்கையிடும் காலப்பகுதி 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையாகும்.

பொருத்தமானவிடத்து கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்துவரும் குறிப்புக்களில் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன.

1.3 **முக்கியமான கணக்கீட்டுத் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலானது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிட்ட அளவுகளையும் பாதிக்கின்ற தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு முகாமைக்குத் தேவையாகும். உண்மையான பெறுபேறுகள் இம் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

வரலாற்று அனுபவம் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக இருக்குமென நம்பப்படும் ஏனைய பல்வேறுபட்ட காரணிகள் என்பவற்றினை மதிப்பீடுகளும்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

அடிப்படையான எடுகோள்களும் அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதுடன் அவற்றின் பெறுபேறுகளானவை ஏனைய மூலங்களிலிருந்து உடனடி வெளிப்படையற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டுசெல்லும் தொகையினைப் பற்றியதான தீர்வுகளை உருவாக்கும் அடிப்படையினை உருவாக்குகின்றன.

மதிப்பீடுகளும் அடிப்படையான எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் அடிப்படை ஒன்றில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் திருத்தப்படும் காலப்பகுதியிலும் ஏதேனும் பாதிக்கப்படும் எதிர்காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளின் மீது கூடுதல் முக்கியத்துமான விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதிலான தர்க்க ரீதியான தீர்வுகளைப் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.5.1 காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களை மதிப்பிடுதல்

பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக, அறிக்கையிடும் திகதியன்று அறிக்கையிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இறுதி உரிமைக்கோரிக்கைக் கிரயத்துக்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இறுதி உரிமைக்கோரிக்கைக் கிரயமானது நிச்சமானதாக உருவாக்கப்படக்கூடியதாக இருப்பதற்கு முன்னர் குறிப்பிடத்தக்க காலப்பகுதி ஒன்று எடுக்கலாம்.

பாரியளவு உரிமைக்கோரிக்கைகளானவை ஒன்றில் இழப்பீட்டு மதிப்பீட்டாளர் (loss adjuster) மதிப்பீடுகளின் முகப் பெறுமதியில் ஒதுக்கப்படுவதன் மூலம் அல்லது அவற்றின் எதிர்கால அபிவிருத்தியினைப் பிரதிபலிக்கும் பொருட்டு வெவ்வேறாக மதிப்பிடப்படுவதன் மூலம் வழமையாக வெவ்வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன. கூடுதலான சந்தர்ப்பங்களில், எதிர்கால உரிமைக்கோரிக்கை பணவீக்க வீதங்கள் அல்லது இழப்பு விகிதங்கள் தொடர்பில் வெளிப்படையான எடுகோள்கள் எவையும் மேற்கொள்ளப்படுவதில்லை. பதிலாக, பாவிக்கப்படும் எடுகோள்களானவை மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்ட வரலாற்று உரிமைக்கோரிக்கை அபிவிருத்தித் தரவுகளில் உட்கிடையாக உள்ளனவையாகும்.

ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஏற்பாடுகளின் போதுமான தன்மையினை மதிப்பிடுவதில் ஒத்த தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பன கையாளப்படுகின்றன. ஒப்பந்தம் ஒன்றின் மூலம் வழங்கப்படும்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

காப்புறுதிச் சேவைப் பாங்கிற்கு ஈட்டப்படாத தவணைக் கட்டண கடனழிப்பானது தவணை முறை கடனழிப்பு அடிப்படையினை விட வேறோர் அடிப்படையில் தேவையானதா என்பதை வரையறுப்பதிலும் தீர்வு தேவைப்படுத்தப்படுகின்றது.

2.5.2 பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்தின் (DAC) குறைவு

பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்தின் குறைவு மீளாய்வு ஒன்று ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மேற்கொள்ளப்படுகின்றது. மீளப்பெறக்கூடிய தொகையானது கொண்டு செல்லும் பெறுமதியினை விட குறைவாக இருக்கும் போது முழுமொத்த வருமானக் கூற்றில் குறைவு நட்டம் ஒன்று இனங்காணப்படுகின்றது. மீளாய்வின் கீழ் ஆண்டுக் காலப்பகுதியில் அத்தகைய குறைவு அறிகுறியேதும் உணரப்படவில்லை.

2.5.3 **குறைவு மதிப்பீடு**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்து ஒன்றிற்கு அல்லது காசு பிறப்பாக்கல் அலகு ஒன்றுக்கு ஏதேனும் குறைவு குறிகாட்டிகள் உள்ளனவா என்பதை சபையானது மதிப்பிடுகின்றது. அத்தகைய தனிப்பட்ட சொத்தின் அல்லது காசு பிறப்பாக்கல் அலகின் ‘பயன்பாட்டிலிருக்கும் பெறுமதியின்’ மதிப்பீட்டினை இது தேவைப்படுத்துகின்றது. பயன்பாட்டிலிருக்கும் பெறுமதியினை’ மதிப்பிடுதலானது சொத்து அல்லது காசு பிறப்பாக்கல் அலகிலிருந்து மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வதற்கும் மற்றும் உரிய காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியினை கணிப்பிடும் பொருட்டு ஒரு பொருத்தமான கழிவு வீதத்தினை தெரிவுசெய்துகொள்வதற்கும் முகாமையினை தேவைப்படுத்துகின்றது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மற்றும் கழிவு வீதங்களைப் பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் இம் மதிப்பீடானது சபையினை தேவைப்படுத்துகின்றது. ஆதலினால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன.

2.5.4 **பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத செலவுகளுக்கான ஏற்பாடு**

சபையானது சாதாரண வியாபார நடவடிக்கையில் இதற்கு எதிரான சட்ட ரீதியான உரிமைக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்கின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் வெற்றியீட்டும் ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் சாத்தியப்பாடு தொடர்பில் தீர்வுகளை முகாமையானது மேற்கொண்டுள்ளது. சாத்தியமான பொருளாதார நன்மை வெளிப் பாய்ச்சல் தொகை காணப்படுவதனால் சட்ட உரிமைக் கோரிக்கையை முடிவுறுத்தும் காலமானது நிச்சயமற்றது. கால அளவும் கிரயமும் இறுதியாக உரிய சட்ட நியாயாதிக்கங்களிலுள்ள உரிய செய்முறையில் தங்கியுள்ளன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

சிக்கலான வரி ஒழுங்குவிதிகள் மற்றும் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய வருமானத் தொகை மற்றும் கால அளவு என்பவற்றின் பொருள்கோடல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. வரி நோக்கங்களுக்காக தகைமைபெறும் கொடுப்பனவுகளாகக் கருதப்படும், திரட்டு நிதியத்துக்கு மேற்கொள்ளப்படும் கணிசமானளவு பங்களிப்புக்கள் காரணமாக எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வரிவிதிக்கக்கூடிய இலாபம் ஒன்றினை உருவாக்குவதில் சாத்தியப்பாடு குறைவாக உள்ளது என்பதை முகாமை மதிப்பிடுகின்றது. ஆதலினால் பிற்போடப்பட்ட வரிக்காக எதுவித ஏற்பாடும் மேற்கொள்ளப்படுவதில்லை.

2.5.6 ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டினை மதிப்பிடுதல்

ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டுக் கிரயமானது காப்பீட்டுக் கணிப்பு ( actuarial) மதிப்பீட்டினைப் பயன்படுத்தி வரையறுக்கப்படுவதில்லை. பணிக்கொடைக்கான ஏற்பாடானது ஒவ்வொரு முற்றுப்பெற்ற வருட சேவைக்கும் ஆகக் குறைந்தது அரை மாதச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

2.5.7 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

சபையின் முகாமையயானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றல் மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு வியாபாரத்தினைத் தொடர்வதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதிலும் திருப்தி கண்டுள்ளது. மேலும், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றலின் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை விளைவிக்கக்கூடிய ஏதேனும் முக்கியமான நிச்சயமற்ற தன்மைகளைப் பற்றி முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆதலால், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது கூடுதல் முக்கியமான விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதிலான மதிப்பீடு, நிச்சயமற்ற தன்மை மற்றும் தர்க்க ரீதியான தீர்வுகளின் குறிப்பிடத்தக்க துறைகள் பற்றிய தகவல்கள் பின்வருவனவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| தர்க்க ரீதியான கணக்கீட்டுத் தீர்வு, மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் |
|---|
| ஈட்டப்படாத தவணைக் கட்டணம் மற்றும் பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயம் |
| மொத்த செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கைகளுக்கான ஒதுக்கு |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டு அளவீடு |

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

2.6.1 அருவச் சொத்துக்கள்

வெவ்வேறாகக் கொள்ளல் செய்யப்படும் அருவச் சொத்துக்களானவை ஆரம்ப அடையாளங்காணல் (recognition) தொடர்பில் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அடையாளங்காணலைத் தொடர்ந்து அருவச் சொத்துக்களானவை ஏதேனும் திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு நட்டங்கள் என்பவற்றைக் கழித்து வரும் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. அருவச் சொத்து குறைக்கப்படலாம் என்னும் குறிகாட்டி காணப்படும் போதெல்லாம் அருவச் சொத்துக்களானவை பயன்தரு பொருளியல் ஆயுட்காலத்திற்கு கடனழிவு செய்யப்பட்டு குறைவுக்காக மதிப்பிடப்படுகின்றன. அருவச் சொத்து ஒன்றுக்கான கடனழிவுக் காலப்பகுதி மற்றும் கடனழிவு முறை என்பன குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. சொத்துடன் ஒன்றிணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாங்கிலான மாற்றங்களானவை கடனழிவுக் காலப்பகுதி அல்லது முறையினைப் பொருத்தமுடையதாக மாற்றுவதன் மூலம் கணக்கிடப்பட்டு கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்களாக கருதப்படுகின்றன. அருவச் சொத்துக்கள் மீதான கடனழிவுச் செலவானது அருவச் சொத்தின் தொழிற்பாட்டுக்கு ஒத்ததாக செலவு வகுதியில் வருமானக் கூற்றில் அடையாளங் காணப்பட்டுள்ளது. அருவச் சொத்து ஒன்றின் அடையாளம் நீக்கலிலிருந்து (De-recognition) எழும் இலாபங்கள் அல்லது நட்டங்களானவை தேறிய அகற்றல் வருவாய்களுக்கும் சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்பட்டு சொத்தானது அடையாளம் நீக்கப்படும் போது வருமானக் கூற்றில் அடையாளங் காணப்படுகின்றன.

கணனி மென்பொருள் 4 வருடங்களுக்கு மேல்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன சொத்துக்களை அதன் உத்தேச பாவனைக்காக அதன் தொழிற்படு நிலைக்கு கொண்டுவருவதில் ஏற்பட்ட ஏதேனும் செலவுகளையும் ஒன்றுசேர்த்த கொள்வனவுக் கிரயமாக உள்ளது.

சபையினைத் தொடர்வதற்காக, நிரந்தர தன்மையில் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல், விஸ்தரித்தல் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஏற்படும் செலவினம்.

2.6.3 **பெறுமானத் தேய்வு**

சகல ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றினதும் கிரயத்தின் பேரில் நேர்கோட்டு முறையினைப் பாவிப்பதன் மூலம் சமமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் மூலம் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு அத்தொகையினைப் பதிவழிப்பதற்கென பெறுமானத் தேய்வேற்பாடு பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

| | |
|---|---|
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 10 வருடத்திற்கு மேலாக |
| தளபாடமும் பொருத்துக்களும் | 08 வருடத்திற்கு மேலாக |
| அலுவலக உபகரணங்கள் | 06 வருடத்திற்கு மேலாக |
| மோட்டார் வாகனங்கள் | 10 வருடத்திற்கு மேலாக |

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதிகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்வு முறை என்பன மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமுடையதாயின் சீராக்கப்படும்.

மீளாய்வின் கீழான வருடத்தின் போது, 5 வருடங்களிலிருந்து 10 வருடங்களுக்கு மோட்டார் வாகனங்களின் பயன்தரு ஆயுட்காலத்தினைத் திருத்துவதற்கு சபை தீர்மானித்தது.

திருத்தமானது கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றம் ஒன்றாக 2014 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட எஞ்சிய பயன்தரு ஆயுட்காலத்தினை உள்ளடக்கி திருத்திய பயன்தரு ஆயுட்காலத்தின் அடிப்படையில் மோட்டார் வாகனங்களின் கொள்ளல் திகதியிலிருந்து பெறுமானத் தேய்வினை சபையானது அளவிட்டு உரிமை முதலின் கீழ் வேறுபாட்டினை சீராக்கியிருப்பின் மீள எடுத்துரைக்கும் திகதியில் ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டுள்ள தொகைகளில் திரண்ட பெறுமானத் தேய்வினை மீள எடுத்துரைத்துள்ளது.

உரிமைமுதலினூடாக சீராக்கப்பட்ட திரண்ட தேய்விலான மாற்றம் - ரூபா. 14,558,589

2014 ஆம் ஆண்டிற்கான மேலதிக தேய்வுக் கட்டணம் - ரூபா. 2,417,982

**பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு இன்னமும் பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஆரம்பக் கிரயமானது குறிப்பு 8 இல் காட்டப்பட்டுள்ளது.

2.6.4 நிதி ஆவணங்கள் ( Financial Instruments)

சபையானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் போது அதன் நிதி நிலமைக் கூற்றில் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்களை இனங்கண்டு கொள்கின்றது. நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் ( fair value) அளவிடப்படுகின்றன. நிதிச் சொத்து ஒன்றின் அல்லது பொறுப்பு ஒன்றின் (இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் தவிர) கொள்ளல் அல்லது வழங்கலுக்கு நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் கிரயங்களானவை ஆரம்ப இனங்காணலின் போது பொருத்தமுடையதாக நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் உண்மைப் பெறுமதியுடன் சேர்க்க அல்லது அதிலிருந்து கழிக்கப்படும். இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் கொள்ளலுக்கு நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் கிரயங்களானவை வருமானக் கூற்றில் உடனடியாக இனங்காணப்படும். சபையானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினை பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை முன்னளிக்கப்படும்.

நிதிச் சொத்துக்கள்

(அ) ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

கடன்களும் வருமதிகளும் எத் திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே சபையானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. சபையானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது விடயம் ஒன்றுக்காக நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பொன்றானது அதன் கொள்ளல் அல்லது வழங்கலுடன் நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது.

ஆரம்பத்தில் ஒரு நிதிச் சொத்தானது பின்வரும் வகுதிகளில் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றது.

- இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதி ( FVTPL);

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

- விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான (AFS) நிதிச் சொத்துக்கள்;
- கடன்களும் வருமதிகளும் (L&R); மற்றும்
- பொருத்தமுடையதாக முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் (HTM).

சபையானது ஆரம்ப இனங்காணலில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது. எந் நோக்கத்திற்காக முதலீடுகள் கொள்ளல் செய்யப்படுகின்றதோ அல்லது ஆரம்பிக்கப்படுகின்றதோ (அதாவது, உள்நோக்கம்) அந் நோக்கத்தில் வகைப்பாடு தங்கியிருப்பதுடன் சபையின் ஆற்றலினையும் அடிப்படையாகக் கொண்டது. குழு முதலீட்டுத் தந்திரோபாயமானது உண்மைப் பெறுமதி அடிப்படையில் நிதி முதலீடுகளை முகாமை செய்துகொள்வதற்காக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலுள்ளவாறு நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்படும். உரியவை முனைப்பற்றதாக முகாமை செய்யப்படும் போது அத்துடன்/ அல்லது கடனழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் போது விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான ( AFS) மற்றும் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் (HTM) வகுதிகள் பயன்படுத்தப்படும். ஒழுங்குவிதி அல்லது கூட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட கால அட்டவணைக்குள் சந்தையில் சொத்துக்களின் வழங்கலைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளானவை தீர்ப்பனவுத் திகதியில் அடையாளங் காணப்படுகின்றன. அதாவது, நிதிச் சொத்தின் விற்பனை/ கொள்வனவுக்காக சபையானது பணத்தினைப் பெற்றுக்கொள்ளும்/ தீர்ப்பனவு செய்யும் திகதியாகும். எனினும், விலைகூறப்பட்ட உரிமைமுதல் மற்றும் கூட்டுரிமைக் கடன் என்பவற்றில் முதலீட்டுக்கு இது வரும் போது சொத்தினை இனங் காண்பதற்கு/ இனங்காணலை இரத்துச் செய்வதற்கு கொடுக்கல் வாங்கல் திகதி (அதாவது. வியாபாரத் திகதி) பயன்படுத்தப்படுகின்றது. முதலீடு கிரயத்தில் காட்டப்பட்டுள்ளது.

சபையின் ஏற்கனவேயுள்ள நிதிச் சொத்துக்களின் வகைகள் மற்றும் அவற்றின் வகைப்பாடு என்பன கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| நிதிச் சொத்து | வகுதி |
|---|---|
| திறைசேரி முறிகள் | விற்பனைக்காக கிடைக்கக்கூடியன ( AFS) |
| திறைசேரி உண்டியல்கள் | விற்பனைக்காக கிடைக்கக்கூடியன ( AFS) |
| தொகுதிக் கடன்கள் | கடன்களும் வருமதிகளும் ( L&R) |
| மீள்கொள்வனவு உடன்படிக்கை | கடன்களும் வருமதிகளும் ( L&R) |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

(ஆ) அடுத்தபடியான அளவீடு

நிதிச் சொத்துக்களின் அடுத்தபடியான அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்பாட்டில் தங்கியுள்ளது.

இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் (FVTPL)

வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்டவற்றையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்பதற்கான உள்நோக்கத்துடன் எடுத்துக்காட்டாக வாங்கப்பட்ட முதலீடுகளானவை வியாபாரத்திற்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலுள்ளவாறு குறித்தொதுக்கப்பட்ட முதலீடுகளிற்காக, பின்வரும் தகுதி விதிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

- சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை அளவிடுவதிலிருந்து அல்லது ஒரு வேறுபாடான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டங்களை இனங்காண்பதிலிருந்து இன்னொரு விதத்தில் எழுக்கூடிய ஒத்திசையாத் தீர்வினை குறித்தொதுக்கலானது இல்லாமற் செய்கின்றது அல்லது குறிப்பிடத்தக்களவிற்குக் குறைக்கின்றது, அல்லது

- ஒரு சபையினது நிதிச் சொத்துக்கள், நிதிப் பொறுப்புக்கள் அல்லது இரண்டினதும் பகுதியாக, சபையினது முதலீட்டுத் தந்திரோபாயத்துக்கிணங்க முகாமை செய்யப்பட்டு அவற்றின் செயற்றிறனானது உண்மைப் பெறுமதி அடிப்படை ஒன்றில் மதிப்பிடப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக உள்ளன.

இம் முதலீடுகள் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் பதியப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலுக்கு அடுத்ததாக, அவை உண்மைப் பெறுமதியில் மீள அளவிடப்படுகின்றன. உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களானவை முழுமொத்த வருமானக் கூற்றில் “உண்மைப் பெறுமதி இலாபங்கள் மற்றும் நட்டங்களில்” பதிவு செய்யப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை ( EIR) பயன்படுத்தி ‘முதலீட்டு வருமானம்’ அல்லது ‘நிதிக் கிரயம்’ என்பதில் வட்டியானது உரியவாறு அட்டுறுத்தப்பட்டு முன்னளிக்கப்படுகின்றது. கொடுப்பனவிற்கான உரிமை உள்வாங்கப்பட்டுள்ள போது பங்கிலாப வருமானமானது ‘முதலீட்டு வருமானத்தில்’ பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபையானது அதன் நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான உள்நோக்கம் இன்னமும் பொருத்தமானதாகவிருப்பின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் (வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட) மதிப்பிடுகின்றது. செயலூக்கமற்ற சந்தைகள் மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கான

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

முகாமையினது உள்நோக்கம் குறிப்பிடத்தக்களவு மாற்றமுறல் போன்ற காரணங்களினால் அவற்றை வர்த்தகம் செய்வதற்கு சபையினால் இயலாத போது அரிதான சந்தர்ப்பங்களில் இந் நிதியச் சொத்துக்களை மீள வகைப்படுத்துவதை சபை தேர்வு செய்யும். கடன்கள் மற்றும் வருமதிகள், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியவை அல்லது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுபவை என்பவற்றுக்கான மீள வகைப்படுத்தலானது சொத்தின் தன்மை அடிப்படையில் தங்கியிருக்கும்.

**விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்கள்**

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகளானவை திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி (அரசாங்க ஆவணங்கள்) என்பவற்றை உள்ளடக்குகின்றன. இவ் வகுதியிலுள்ள அரசாங்க ஆவணங்களானவை முடிவில்லாக் காலப்பகுதிக்கு வைத்திருக்க உத்தேசிக்கப்பட்டுள்ளவையும் அத்துடன் திரவத்தன்மைத் தேவைக்கு முகங்கொடுப்பதற்கு அல்லது சந்தை நிலமையிலுள்ள மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கு விற்கப்படக்கூடியவையாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய ஒதுக்கில் ஏனைய முழுமொத்த வருமானத்தில் ( OIC) இனங்காணப்பட்டுள்ள பணமாக்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்களுடன் உண்மைப் பெறுமதியில் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்களானவை பின்னர் அளவிடப்படும்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் வேளை ஈட்டிய வட்டியானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை ( EIR) பயன்படுத்தி 'வட்டி வருமானமாக' அறிக்கையிடப்படும். கொடுப்பனவு உரிமை உருவாக்கப்பட்டுள்ள போது, விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் போதான கடனழிவு செய்யப்பட்ட தவணைக் கட்டணங்கள் அத்துடன்/ அல்லது கழிவுகள் 'முதலீட்டு வருமானமாக' வருமானக் கூற்றில் இனங்காணப்படும். சொத்தானது இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது முதலீட்டு வருமானத்தில் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படும். சொத்தினைக் குறைப்பதற்கு வரையறுக்கப்பட்டால் 'முதலீட்டு வருமானத்தில்' வருமானக் கூற்றில் திரண்ட நட்டமானது இனங்காணப்பட்டு விற்பனைக்காக கிடைக்கக்கூடிய ஒதுக்கிலிருந்து நீக்கப்படும்.

சபையானது அதன் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசம் என்பன இன்னமும் பொருத்தமானதாக இருக்கின்றதா என்பதை வரையறுப்பதற்காக மதிப்பீடு செய்யும். செயலூக்கமற்ற சந்தைகள் மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கான முகாமையினது உத்தேசம் குறிப்பிடத்தக்களவு மாறுதல் போன்ற காரணங்களினால் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கு சபையினால் இயலாது போகும் பட்சத்தில் அரிதான சந்தர்ப்பங்களில் இந் நிதிச் சொத்துக்களை மீள வகைப்படுத்தலை சபையானது தேர்வு செய்யலாம்.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

நிதிச் சொத்தானது கடன்களினதும் வருமதிகளினதும் வரைவிலக்கணத்தைப் பூர்த்திசெய்யும் போதும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு அல்லது முதிர்வு வரை இந் நிதிச் சொத்துக்களை வைத்திருப்பதற்கான உத்தேசம் மற்றும் ஆற்றலினை முகாமையானது கொண்டுள்ள போதும் கடன்கள் மற்றும் வருமதிகளது மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. முதிர்வு வரை நிதிச் சொத்தினை வைத்திருப்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசத்தினை நிறுவனமானது கொண்டுள்ள போது மட்டுமே முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதற்கான மீள் வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது.

விற்பனைக்காக கிடைக்கக்கூடிய வகுதியில் மீள் வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்தொன்றுக்காக, உரிமை முதலில் இனங்காணப்பட்டுள்ள அச் சொத்தின் மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சிய ஆயுட்காலத்திற்கு இலாபமாக அல்லது நட்டமாக கடனழிவு செய்யப்படுகின்றது. புதிய கடனழிவு செய்யப்படும் கிரயத்திற்கும் எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சலிற்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசமும் பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை ( EIR) பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய ஆயுட் காலத்திற்கு கடனழிவு செய்யப்படுகின்றது. அச் சொத்தானது பின்னர் குறைவாக இருக்குமென வரையறுக்கப்படின் அதன் பின்னர் உரிமை முதலில் பதிவு செய்யப்பட்ட தொகையானது வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படும்.

**கடன்களும் வருமதிகளும்**

செயலூக்கமிக்க சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களாக கடன்களும் வருமதிகளும் காணப்படும். தொகுதிக் கடன் ஆவணங்களுக்கு, அத்தகைய ஆவணங்கள் பட்டியற்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயலூக்கமிக்க சந்தையொன்று காணப்படாத காரணத்தினால் இவ் வகுதியின் கீழ் இவ் ஆவணங்களை வகைப்படுத்துவதற்கும் சபையானது தீர்மானித்தது.

இம் முதலீடுகளானவை முதலீட்டுக் கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட கருத்திற்கொண்ட உண்மைப் பெறுமதியாக இருக்கும் கிரயத்தில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இக் கொள்ளலுக்கு நேரடிக் காரணமாயிருந்த சகல கொடுக்கல் வாங்கல் கிரயங்களும் முதலீட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைதலுக்கான படியினைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை ( EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களும் வருமதிகளும் அளவிடப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பில் ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கல் ஏதேனும் இருப்பின் அதனைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத ( EIR) கடனழிவானது வருமானக் கூற்றில் ‘முதலீட்டு வருமானத்தில்’ உள்ளடக்கப்படுகின்றது. முதலீடுகளானவை இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது அல்லது குறைக்கப்படும் போது

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

அதேபோல கடனழிவுச் செய்முறைக்கூடாக வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படும்.

நிலுவையிலுள்ள கடன்களின் பெறுமதியானது அடிப்படையானதாக கருதப்படாததனால் ஒத்த கடன்கள் தொடர்பில் தற்போது வழங்கப்பட்டு வரும் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி எதிர்காலக் காசுப் பாய்ச்சலினைக் கழிவிடுவதன் மூலம் இடர் கடன்களின் உண்மைப் பெறுமதியானது மதிப்பிடப்படுவதில்லை.

**முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துகள்**(HTM)

நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிக் காலத்தையுடைய நிதிச் சொத்துக்கள் என்பன சபையானது முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதற்கான உத்தேசம் மற்றும் ஆற்றலினைக் கொண்டுள்ள போது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவினைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை ( EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துகள் அளவிடப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீத ( EIR) கடனழிவானது வருமானக் கூற்றில் 'முதலீட்டு வருமானத்தில்' உள்ளடக்கப்படுகின்றது.

முதலீடுகளானவை இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது அல்லது குறைக்கப்படும் போது அதேபோல கடனழிவுச் செய்முறைக்கூடாக வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படுகின்றன.

(அ) நிதிச் சொத்துக்களின் இனங்காணலை இரத்துச் செய்தல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்தொன்று (அல்லது ஏற்புடையதாகும் போது, நிதிச் சொத்தொன்றின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக்களின் குழு ஒன்றின் பகுதி) இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றது.

— அச் சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் காலாவதியாகியுள்ள போது

— காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த உரிமையை மாற்றும் போது

அல்லது

சபையானது அச் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினைத் தக்க வைத்திருக்கும் போது அல்லது 'விலையினை அதிகரிக்கும் ஈடாக்கும் செய்முறை' ( pass-through) ஒழுங்கின்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

— கீழ் மூன்றாம் நபர் ஒருவருக்கு அடிப்படையான தாமதமின்றி பெற்றுக்கொண்ட காசுப் பாய்ச்சலினை முழுமையாகச் செலுத்துவதற்கான கடமைப்பாடு ஒன்றினை எடுகோளாகக் கொண்டிருக்கும் போது ;

— அத்துடன் ஒன்றில்:

(அ) சொத்தின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமானளவு சபையானது மாற்றியிருக்கும் போது அல்லது

(ஆ) சபையானது சொத்துக்களின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமானளவு மாற்றாமலோ அல்லது தக்க வைத்திராமலோவிருந்து ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றியிருக்கும் போது

சபையானது சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமையினை மாற்றியுள்ள போது அல்லது 'விலையினை அதிகரிக்கும் ஈடாக்கும் செய்முறை' ( pass-through) ஒழுங்கு ஒன்றில் பங்குபற்றியுள்ள போது அத்துடன் சொத்தின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமானளவு மாற்றாமலோ அல்லது தக்க வைத்திராமலோவிருந்து சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றாமலோவிருக்கும் போது சபையின் தொடர்ச்சியான சொத்து உள்வாங்கல் நீட்டிப்புக்கு சொத்தானது இனங்காணப்படுகின்றது.

மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தினை எடுக்கின்ற தொடர்ச்சியான உள்வாங்கலானது சொத்தின் குறைந்த ஆரம்ப கொண்டு செல்லல் தொகையிலும் மீளச் செலுத்துமாறு சபையினைக் கோரக்கூடிய கருத்திற்கொள்ளப்படும் ஆகக்கூடிய தொகையிலும் அளவிடப்படுகின்றது. அச் சந்தர்ப்பத்தில் சபையும் ஒன்றிணைந்த பொறுபொன்றினை இனங்காண்கின்றது. சபை தக்கவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கும் அடிப்படை ஒன்றில், மாற்றப்பட்ட சொத்து மற்றும் ஒன்றிணைந்த பொறுப்பு என்பன அளவிடப்படுகின்றன.

(அ) நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்

ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இச் சபையானது மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஏற்பட்டுள்ள ஒன்று அல்லது கூடுதலான நிகழ்வுகளின் (நேரிட்ட 'இழப்பு நிகழ்வு' ஒன்று) விளைவாக குறைவின் யதார்த்தமான சான்று இருப்பின் அத்துடன் நம்பகரமான மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துக் கூட்டத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் மீது ஒரு தாக்கத்தினை அந்த இழப்பு நிகழ்வு கொண்டிருந்தால் மாத்திரமே ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக் கூட்டம் ஒன்று குறைவடைந்திருப்பதாகக் கருத்தப்படும். குறிப்பிடத்தக்க நிதிப் பிரச்சினை, வட்டி

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

அல்லது முக்கியமான கொடுப்பனவுகளைச் செய்யாதுவிடல் அல்லது செய்யத் தவறுதல் என்பவற்றைக் கடன்படுநர்கள் அல்லது கடன்படுநர் குழுவொன்று அனுபவித்துவரும் குறிகாட்டிகள், அவர்கள் வகையற்றவர்களாக மாறும் சாத்தியப்பாடு அல்லது கொடுப்பனவுகளைச் செய்யாதிருப்பதுடன் தொடர்புறும் நிலுவை மாற்றங்கள் அல்லது பொருளாதார நிலமைகள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலில் ஓர் அளவிடக்கூடிய குறைவொன்று உள்ளது என்பதை அவதானிக்கக்கூடிய தரவு சுட்டிக்காட்டும் ஏனைய நிதி மீள்ஒழுங்கமைப்பு ஆகியவற்றை குறைவுச் சான்று உள்ளடக்கலாம்.

**நிதிப் பொறுப்புக்கள்**

(அ) ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

சகல நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றன அத்துடன் கடன்கள் மற்றும் கடன்படுகைகள் என்னும் பட்சத்தில் நேரடிக் காரணமான கொடுக்கல் வாங்கல் செலவுகள் கழிக்கப்படுகின்றன.

சபையினது நிதிப் பொறுப்புகளானவை வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள், காப்புறுதி சென்மதிகள் மற்றும் வங்கி மேலதிகப்பற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

(ஆ) அடுத்தபடியான அளவீடு

நிதிப் பொறுப்புக்களின் அடுத்தபடியான அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

**கடன்களும் கடன்படுகைகளும்**

ஆரம்ப இனங்காணலின் பின்னர், வட்டியினைத் தாங்கும் கடன்கள் மற்றும் கடன்படுகைகள் என்பன பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அடுத்தபடியாக அளவிடப்படுகின்றன. பொறுப்புக்கள் இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போதும் அதே போல பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறை ( EIR) கடனழிவுச் செய்முறைக்கு ஊடாகவும் வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் ( EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பிலான ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கல் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத ( EIR) கடனழிவானது வருமானக் கூற்றில் நிதிக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் **31** ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

(இ) இனங்காணலில் இரத்துச் செய்தல்

பொறுப்பின் கீழான கடப்பாடானது விடுவிக்கப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது நிதிப் பொறுப்பொன்று இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றது.

(ஈ) காப்புறுதிச் சென்மதிகள்

காப்புறுதி சென்மதிகளானவை, நிலுவையாகவிருக்கும் போதும் அத்துடன் நேரடிக் காரணமான கொடுக்கல் வாங்கல் செலவுகள் கழித்து பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போதும் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், அவை பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

பொறுப்பின் கீழான கடப்பாடானது தீர்க்கப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது காப்புறுதி சென்மதிகள் இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

2.6.5 நிதி ஆவணங்களை ஈடாக்குதல்

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு அத்துடன் இனங்காணப்பட்ட தொகையினை ஈடாக்குவதற்கு தற்போது வலுவிலுள்ள சட்ட உரிமை உள்ளதாயின் அத்துடன் தேறிய அடிப்படை ஒன்றில் தீர்ப்பதற்கான அல்லது சொத்துக்களைப் பணமாக்கி ஒரே நேரத்தில் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கான உள்நோக்கம் ஒன்றும் காணப்பட்டால் மாத்திரமே நிதி நிலமைக்கூற்றில் தேறிய தொகை அறிக்கையிடப்படும். சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடக்கூடியதாக இணைக்கப்பட்டவாறு ஏதேனும் கணக்கீட்டு நியமத்தினால் அல்லது பொருள்கோடல் மூலம் தேவைப்படுத்தப்பட்டாலொழிய அல்லது அனுமதிக்கப்பட்டாலொழிய வருமானமும் செலவினமும் வருமானக் கூற்றில் ஈடாக்கப்படமாட்டா.

2.6.6 நிதிசாராச் சொத்துக்கள் குறைவடைதல்

சொத்தொன்று குறைவடையலாம் என்னும் குறிகாட்டி ஒன்று உள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபையானது மதிப்பிடுகின்றது. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான வருடாந்த குறைவடைதல் பரிசோதிப்பு தேவைப்படுத்தப்படும் போது சபையானது சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. சொத்தொன்றின் மீளப்பெறக்கூடிய தொகையானது விற்பதற்கான கிரயங்கள் மற்றும் அதன் பாவனைப் பெறுமதி என்பவற்றைக் கழித்து சொத்தொன்றின் அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகளின் ( CGU) உண்மைப் பெறுமதியிலும் அதிகமாகும். தனிப்பட்ட சொத்தொன்றுக்கான மீளப்பெறக்கூடிய தொகையானது, ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக் கூட்டங்களிலிருந்தானவற்றிலிருந்து பெருமளவு சுயாதீனமான காசு உட்பாய்ச்சல்களை அச் சொத்து பிறப்பிக்காதிருந்தாலொழிய வரையறுக்கப்படும். சொத்தொன்றின் கொண்டு

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

செல்லல் பெறுமதியானது அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகள் ( CGU) அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் அதிகமாகவிருக்குவிடத்து அச் சொத்தானது குறைவடைகின்றது எனக் கருதப்பட்டு அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்து விடப்படும். பாவனைப் பெறுமதி மதிப்பீட்டில், மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களானவை பணத்தின் நேரப் பெறுமதியின் தற்போதய சந்தை மதிப்பீடுகளையும் அச் சொத்துக்குக் குறித்தான ஆபத்துக்களையும் பிரதிபலிக்கும் முன்-வரி கழிவு வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிடப்படுகின்றன. விற்பதற்கான கிரயங்களைக் கழித்த உண்மைப் பெறுமதியினை வரையறுப்பதில் அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாகவிருப்பின் அவை கவனத்திற் கொள்ளப்படும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எவையும் இனங்காணப்பட முடியாதிருப்பின் பொருத்தமான விலைமதிப்பு முறை ஒன்று பயன்படுத்தப்படும்.

குறைவடைந்த சொத்தின் தொழிற்பாட்டுடன் ஒத்திசையும் அச் செலவின வகுதிகளில் வருமானக் கூற்றில் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் குறைவடைதல் நட்டங்கள் இனங்காணப்படும்.

2.6.4 பொதுக் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள்

பொதுக் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களானவை செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கை ஏற்பாட்டையும், ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஏற்பாட்டையும் அத்துடன் தவணைக் கட்டண பற்றாக்குறைக்கான ஏற்பாட்டையும் உள்ளடக்குகின்றன. உள்ளாகிய ஆனால் தொடர்புபட்ட உரிமைக் கோரிக்கை கையாளல் கிரயங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சிய பெறுமதி மற்றும் ஏனைய அளவீடுகளுக்கான குறைவு ஆகியவற்றுடன் ஒன்றுசேர்ந்து அறிக்கையிடல் திகதியில் செலுத்தப்படாத சகல உரிமைக் கோரிக்கைகளினதும் மதிப்பிடப்பட்ட இறுதிக் கிரயத்தினை செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கை ஏற்பாடானது அடிப்படையாகக் கொண்டது.

சில உரிமைக்கோரிக்கை வகைகளின் அறிவித்தலிலும் தீர்ப்பனவிலும் தாமதங்கள் ஏற்பட முடியும் ஆதலால் இவற்றின் இறுதிக் கிரயத்தினை, அறிக்கையிடும் திகதியில் உறுதியாக அறிய முடியாது. பணத்தின் நேரப் பெறுமதிக்காக பொறுப்பானது கழிவிடப்படுவதில்லை. சமப்பாட்டுக்காக அல்லது பேரழிவு ஒதுக்கங்களுக்காக எதுவித ஏற்பாடும் இனங்காணப்படுவதில்லை. உரிமைக் கோரிக்கை ஒன்றைச் செலுத்துவதற்கான கடப்பாடானது காலாவதியாகும் போது அல்லது விடுவிக்கப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் போது பொறுப்புக்களானவை இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

தேறிய ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கு, பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்துக்கான (தேறிய) ஒதுக்கு, மொத்த செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கைக்கான ஒதுக்கு என்பவற்றை இவ் ஏற்பாடு உள்ளடக்குகின்றது. தொழில் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க ஈட்டப்படாத தவணைக் கட்டணம், பிற்போடப்பட்ட கொள்ளல்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

கிரயம் மற்றும் மொத்த செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கைக்கான ஒதுக்கு என்பன எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபையானது அதன் காலங்கடக்காத ஆபத்தினை மீளாய்வு செய்கின்றது அத்துடன் ஈட்டப்படாத தவணைக் கட்டணங்களின் மீது எதிர்பார்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயங்களின் ஏதேனும் ஒட்டுமொத்த மிகையானது உள்ளதா என்பதை வரையறுக்கும் பொருட்டு SLFRS 4 இன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டவாறு பொறுப்புப் போதுமானதன்மைச் சோதனை ஒன்று ஆற்றப்படுகின்றது. உரிய பொதுக் காப்புறுதி தொழில்நுட்ப ஏற்பாடுகளுடன் தொடர்புற்ற சொத்துக்களின் மீது எழுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டு வருவாயை கணக்கில் எடுத்துக் கொண்ட பின்னர் எதிர்கால ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் தற்போதய மதிப்பீடுகளை இக் கணிப்பீடு பயன்படுத்துகின்றது. ஈட்டப்படாத தவணைக் கட்டணங்களின் கொண்டு செல்லல் தொகையானது (தொடர்புபட்ட பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயங்களைக் கழித்து) பற்றாக்குறையாக உள்ளது என்பதை இம் மதிப்பீடுகள் காட்டினால் தவணைக் கட்டணப் பற்றாக்குறைக்கான ஏற்பாடு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் வருமானக் கூற்றில் பற்றாக்குறையானது இனங்காணப்படும்.

2.6.5 மீள்காப்புறுதி

சபையானது அதன் சகல வியாபாரத்துக்குமான சாதாரண வியாபார நடவடிக்கையில் காப்புறுதி ஆபத்தினை ஒப்பளிப்புச் செய்கின்றது. மீள்காப்புறுதி சொத்துக்களானவை மீள்காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய மீதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதி செய்பவர்களிடமிருந்து மீளப்பெறக்கூடிய தொகைகளானவை மீள்காப்புறுதி செய்பவரின் கொள்கைகளுடன் இணைந்த நிலுவையிலுள்ள உரிமைக்கோரிக்கை ஏற்பாட்டுக்கு அல்லது தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளுக்கு ஒத்திசைவான விதத்தில் மதிப்பிடப்படுவதுடன் தொடர்புபட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தத்துக்கு இணக்கமாகவும் உள்ளன.

அறிக்கையிடும் வருடத்தின் போது குறைவுக் குறிகாட்டி ஒன்று எழும்போது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அல்லது கூடுதலாக அநேக தடவைகளில் மீள்காப்புறுதிச் சொத்துக்களானவை குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. சபையானது ஒப்பந்த நியதிகளின் கீழ் வரவேண்டிய சகல நிலுவையிலுள்ள தொகைகளையும் பெற்றுக்கொள்ளாது என்னும் மீள்காப்புறுதிச் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றினதும், சபையானது மீள்காப்புறுதி செய்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தொகைகள் மீது நம்பகரமாக அளவிடக்கூடிய தாக்கம் ஒன்றினைக் கொண்டுள்ள நிகழ்வினதும் விளைவாக அடிப்படையான சான்று இருக்கும் போது குறைவு நிகழ்கின்றது.

ஒப்பளிப்புச் செய்யப்பட்ட மீள்காப்புறுதி ஒழுங்குகளானவை சபையினை ஆவணதாரிகளுக்கான அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிப்பதில்லை.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

மீள்காப்புறுதிப் பொறுப்புக்களானவை மீள்காப்புறுதிக் கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய மீதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தொடர்புபட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தத்துக்கு ஒத்திசைவான விதத்தில் செலுத்த வேண்டிய தொகைகள் மதிப்பிடப்படுகின்றன.

தவணைக் கட்டணங்களும் உரிமைக் கோரிக்கைகளும் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட மற்றும் பொறுப்பேற்கப்பட்ட மீள்காப்புறுதி இரண்டிற்காகவும் மொத்த அடிப்படை ஒன்றில் முன்னளிக்கப்படுகின்றன.

ஒப்பந்த உரிமைகளானவை காலாவதியாகி செல்லுபடியற்றதாக்கப்படும் போது அல்லது ஒப்பந்தமானது இன்னொரு தரப்புக்கு மாற்றப்படும் போது மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

சபையானது மீளாய்வின் கீழான ஆண்டின் போதும் 2012 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கும் முன்னைய ஆண்டின் போதும் அதன் சகல வியாபாரத்துக்குமான காப்புறுதி மற்றும் உள்முக காப்புறுதி ஆபத்துக்களை ஒப்பளிக்கவில்லை.

2.6.4 காப்புறுதி வருமதிகள்

காப்புறுதி வருமதிகளானவை நிலுவையாகவிருந்து அத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போது இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், காப்புறுதி வருமதிகளானவை பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வருமானக் கூற்றில் பதிவு செய்யப்பட்ட குறைவு நட்டத்துடன் கொண்டு செல்லல் தொகையானது மீளப்பெறமுடியாது போகலாம் என்று நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் சுட்டிக்காட்டும் போதெல்லாம் காப்புறுதி வருமதிகளின் கொண்டு செல்லல் பெறுதியானது குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

2.6.5 **காசும் காசுக்குச் சமமான விடயங்களும்**

காசுப் பாய்ச்சல் நோக்கத்திற்காக, வங்கியிலுள்ள காசும் கையிலுள்ள காசும், தேறிய செலுத்த வேண்டிய வங்கி மேலதிகப்பற்றுக்கள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமான விடயங்களும் உள்ளடக்குகின்றது.

(அ) 2.6.11 **விற்பனை வரிகள் மற்றும் தவணைக் கட்டண வரிகள்**

பின்வருவன நீங்கலாக விற்பனை வரிகள் மற்றும் தவணைக் கட்டண வரிகளின் தேறிய தொகையாக வருமானங்கள், செலவினங்கள் மற்றும் சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன.

சொத்துக்கள் அல்லது சேவைகளின் கொள்வனவின் பேரில் ஏற்படும் விற்பனை அல்லது தவணைக் கட்டண வரியானது வரிவிதிப்பு அதிகாரபீடத்திடமிருந்து மீளப்பெறக்கூடியதாக இல்லாதிருக்குமிடத்து அச் சந்தர்ப்பத்தில் விற்பனை

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

— வரியானது ஏற்புடையதாக சொத்துக் கொள்ளல் கிரயத்தின் பகுதியாக அல்லது செலவு விடயப் பகுதியாக இனங்காணப்படும்.

— உரிய கொடுக்கல் வாங்கலில் உள்ளடக்கப்பட்ட விற்பனை அல்லது தவணைக் கட்டண வரித் தொகையுடன் வருமதிகளும் சென்மதிகளும் குறிப்பிடப்படுகின்றன.

வரிவிதிப்பு அதிகாரபீடத்திடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளக்கூடிய அல்லது அதற்குச் செலுத்த வேண்டிய விற்பனை அல்லது தவணைக் கட்டண வரியின் நிலுவையாகவுள்ள தேறிய தொகைகளானவை நிதிநிலமைக் கூற்றில் வருமதிகள் அல்லது சென்மதிகளின் பகுதியாக உள்ளடக்கப்படும்.

2.6.7 அந்நியச் செலாவணி மாற்றம் – கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவைகள்

அந்நியச் செலாவணிகளிலான மாற்றங்களானவை கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணி வீதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

அந்நியச் செலாவணிகளில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணிப் பரிமாற்ற வீதத்தில் மீள்மாற்றப்படுகின்றன.

2.6.8 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

(அ) வரையறுத்த நன்மைத் திட்டம் – பணிக்கொடை

பணிக்கொடை என்பது ஒரு வரையறுத்த நன்மைத் திட்டமாகும். 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கேற்ப சபையானது பணிக்கொடையினைச் செலுத்தும் பொறுப்பிற்கு ஆளாகின்றது. அதற்கிணங்க பணிக்கொடையினைச் செலுத்துவதற்கான பொறுப்பானது தொடர்ச்சியான 5 வருட சேவைப் பூர்த்தியின் பேரில் மாத்திரமே எழுகின்றது. இப் பொறுப்பினைப் பூர்த்திசெய்யும் பொருட்டு ஏற்பாடு ஒன்று நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு செல்லப்படுகின்றது. புள்ளிவிபர ( actuarial) மதிப்பீட்டு முறையினைப் பயன்படுத்தி இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 ஊழியர் நன்மைகள் , என்பதற்கமைய பணிக்கொடைப் பொறுப்பு கணிப்பிடப்படுவதில்லை.

(அ) வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள் – ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

உரிய நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஒத்திசைவாக ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்கும் ஊழியர்கள்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

தகுதியுடையவர்கள். சபையானது ஊழியர்களின் மொத்த ஊதியத்தின் ஒரு வரையறுத்த வீதத்தினை முறையே ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

2.6.4 ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்கள்

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக தற்கால கடப்பாடு ஒன்றினை (சட்ட அல்லது உட்கிடையான) சபையானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன அத்துடன் பொருளாதார நலன்கள் இணைந்த வளங்களின் வெளிப்பாய்ச்சலானது இக் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது அத்துடன் ஒரு நம்பகரமான மதிப்பீடானது கடப்பாட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட முடியும். சபையானது ஏற்பாடொன்றின் சிலவற்றை அல்லது சகலதையும் மீளளிக்கப்பட எதிர்பார்க்குமிடத்து மீளளிப்பானது மெய்நிகராக நிச்சயமாக இருக்கும் போது மட்டுமே தனியான சொத்தொன்றாக மீளளிப்பு இனங்காணப்படும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புபட்ட செலவினமானது ஏதேனும் தேறிய மீளளிப்பு வருமானக் கூற்றில் முன்னளிக்கப்படும். பணத்தின் நேரப் பெறுமதியின் விளைவானது அடிப்படையானதாகவிருப்பின் பொருத்தமானவிடத்து, பொறுப்புக் குறித்தான ஆபத்துக்களைப் பிரதிபலிக்கும் நிகழ்கால முன்-வரி வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவிடப்படுகின்றன. கழிவிடல் பயன்படுத்தப்படுமிடத்து காலம் முன்நோக்கிச் செல்வதன் காரணமாக ஏற்பாட்டில் அதிகரிப்பானது நிதிக் கிரயம் ஒன்றாக இனங்காணப்படுகின்றது.

வளங்களின் வெளிப்பாய்ச்சலானது குறைவாகவே நிகழும் சந்தர்ப்பம் இருந்தாலொழிய சகல எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் ஒரு குறிப்பாக வெளிப்படுத்தப்படும்.

2.7 வருமான இனங்காணல்

2.7.1 மொத்த தவணைக் கட்டணம்

கணக்கீட்டுக் காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட முழுக் காப்பீட்டுக் காலப்பகுதிக்கும் வருமதியாகவுள்ள மொத்த தவணைக் கட்டணங்களை மொத்தக் காப்புறுதி உழைப்புத் தவணைக் கட்டணங்கள் உள்ளடக்குகின்றன. அவை ஒப்பந்த ஆவணம் அனுமதிக்கப்பட்ட திகதியில் இனங்காணப்படுகின்றன. முன்னைய கணக்கீட்டுக் காலப்பகுதியில் நடாத்தப்பட்ட வியாபாரம் தொடர்பில் வருமதியாகவுள்ள தவணைக் கட்டணங்களுக்காக இக் கணக்கீட்டுக் காலப்பகுதியில் எழுகின்ற ஏதேனும் சீராக்கங்களை தவணைக் கட்டணங்கள் உள்ளடக்கும்.

அறிக்கையிடல் திகதியின் பின்னரான ஆபத்துக் காலப்பகுதிகளுடன் தொடர்புறும் வருடம் ஒன்றில் உழைக்கப்பட்ட தவணைக் கட்டண விகிதாசாரமாக ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் உள்ளன. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி நடைமுறைகளுக்கு ஒத்திசைவாக 365 ஆம் அடிப்படை, 1/24 ஆம் அடிப்படை அல்லது மொத்த தவணைக் கட்டணங்கள் மீதான 35% அடிப்படை ஆகியவற்றில் ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்படுகின்றன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

அடுத்துவரும் காலப்பகுதிகளுக்கு உரித்தான விகிதாசாரமானது ஈட்டப்படாத தவணைக் கட்டணங்களிற்கான ஏற்பாடொன்றாக பிற்போடப்படும்.

2.7.2 கட்டணங்களும் ஏனைய வருமானமும்

ஒப்பந்த ஆவண நிர்வாக சேவைகள், ஒப்பந்த ஆவணக் கட்டணங்கள் மற்றும் ஏனைய ஒப்பந்தக் கட்டணங்கள் ஆகியவற்றுக்காக காப்புறுதி ஒப்பந்த ஆவணதாரிகளிடமிருந்து அறவீடு செய்யப்படுகின்றது. இக் கட்டணங்களானவை உழைக்கப்பட்ட அடிப்படையில் வருமானமாக (ஏனைய வருமானம்) இனங்காணப்படுகின்றன.

2.7.1 **வட்டி வருமானம்**

வட்டி வருமானமானது அட்டுறுவதால் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டு பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுகின்றது.

2.8 நன்மைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் செலவின இனங்காணல்

2.8.1 மொத்த நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும்

ஆண்டுக் காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட சகல உரிமைக் கோரிக்கைகளையும், உரிமைக் கோரிக்கைகளைச் செய்முறைப்படுத்தி தீர்ப்பதுடன் நேரடியாகத் தொடர்புற்ற தொடர்புபடும் உள்ளக மற்றும் வெளியக உரிமைக் கோரிக்கை கையாளல் செலவுகளையும், எஞ்சிய பெறுமதிக்கான குறைவு ஒன்றையும் மற்றும் ஏனைய அறவீடுகள், மற்றும் முன்னைய வருடங்களிலிருந்து வரவேண்டிய உரிமைக் கோரிக்கைகளுக்கான ஏதேனும் சீராக்கங்களையும் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகள் உள்ளடக்குகின்றன.

2.8.2 செலவின இனங்காணல்

சபையினை நடாத்துதல் மற்றும் வினைத்திறனான நிலையில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை பராமரித்தல் ஆகியவற்றில் உள்ளாகும் சகல செலவினமும் தேறிய மிகையினை அடையும் வருமானத்துக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

2.9 **ஒப்பீட்டுத் தரவுகள்**

SLFRS/ LKAS ஆகியன சென்ற காலத்தையும் உள்ளிட்டவாறு பிரயோகிக்கப்பட்டுள்ளன ஆதலால் இந் நிதிக் கூற்றுக்களில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு நிதித் தகவல்களானவை நிகழ் வருட கணக்கீட்டுக் கொள்கைள் மற்றும் முன்னளிப்புக்களுடன் ஒத்திசைவாக இருக்குமாறு மீள எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**2.10** **மூலதன ஈடுபாடு**

ஐந்தொகை திகதியிலுள்ளவாறு எவ்வித மூலதன ஈடுபாடும் இல்லை.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

2.11 **காசுப் பாய்ச்சல் கூற்று**

"மறைமுக முறையினை" பாவித்து காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்படுகின்றது.

**2.12 தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்**

நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திணைக்களங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தவிர தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் எவையுமில்லை.

**2.13 ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்**

சகல அடிப்படையான ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகளும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களுக்கான உரிய குறிப்புக்களில் பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

2.14 **எதிர்பாராத நிகழ்வுகள்**

சபையின் அபிப்பிராயத்தில், சாதாரண வியாபார தொடர் செயற்பாட்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு எதிராக தற்போதுள்ள வழக்கானது அறிக்கையிட்ட நிதிப் பெறுபேறுகளிலோ அல்லது நிதியத்தின் எதிர்காலச் செயற்பாட்டிலோ முக்கியமான தாக்கம் ஒன்றினைக் கொண்டிருக்காது.

2.15 வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத நியமங்கள்

பின்வரும் நியமங்கள் 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக இன்னமும் செயல்வலுவுக்கு வராததுடன் சபையின் இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. இந் நியமங்கள் அவற்றின் செயல்வலுத் திகதிகளிலிருந்து நிதிக் கூற்றுக்களில் நிதித் தாக்கம் ஒன்றினைக் கொண்டிருக்க முடியும்.

SLFRS 9- நிதி ஆவணங்கள்: வகைப்படுத்தலும் அளவீடும்

வெளியிடப்பட்டவாறு SLFRS 9 ஆனது LKAS 39 இன் பதிலீடாக முதலாவது பணிக் கட்டத்தினைப் பிரதிபலிப்பதுடன் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கு ஏற்புடையதாகின்றது.

2015 ஜனவரி 01 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்தக் காலப்பகுதிக்கு இந் நியமமானது ஆரம்பத்தில் செயல்வலுவிலிருந்தது. எனினும் செயல்வலுத் திகதியானது பின்னர் பிற்போடப்பட்டுள்ளது.

SLFRS 14- ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

இந் நியமத்தின் நோக்கெல்லையானது, தமது நிதிக் கூற்றுக்களில் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்கனவே இனங்காணும் SLFRS இன் முதன்முறை கடைப்பிடிப்போர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக, SLFRS இனை ஏற்கனவே பிரயோகிக்கும், அல்லது இன்னொரு வகையில் அத்தகைய மீதிகளை இனங்காணாத வீத ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களானவை இந் நியமத்தினால் பாதிக்கப்படமாட்டா. 2016 ஜனவரி 01 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்தக் காலப்பகுதிக்கு இந் நியமமானது செயல்வலுவிலிருக்கும்.

2.16 புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLASs) நிலைமாறுவதன் விளக்கம்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) நடைமுறைப்படுத்தப்பட்டதும் SLFRS ( IFRS இற்கு ஒத்ததாக) மற்றும் LKAS (IAS இற்கு ஒத்ததாக) ஆகிய இரண்டும் முன்னிணைக்கப்பட்ட புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட இச் சபையின் முதலாவது நிதிக் கூற்றுக்களே இவையாகும். மேலே எடுத்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலும் 2013 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் அளிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டுத் தரவுகளிலும் மற்றும் 2013 ஜனவரி 1 ஆம் திகதியிலுள்ளவாறான (சபையினது நிலைமாறும் திகதி) நிதி நிலமையின் தொடக்கக் கூற்றுத் தயாரிப்பிலும் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இதன் தொடக்க புதிய இ.க. நியம ( SLAS) நிதி நிலமைக் கூற்றினைத் தயாரிப்பதில், முன்னைய இ.க. நியமங்களுக்கிணங்க (SLAS) தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் முன்னர் அறிக்கையிடப்பட்ட தொகைகளைச் சீராக்கியுள்ளது. சபையினது நிதி நிலமை மற்றும் நிதிச் செயற்றிறன் ஆகியவற்றை முன்னைய இ.க. நியமங்களிலிருந்து ( SLAS) புதிய இ.க. நியமங்களுக்கான ( SLAS) நிலைமாற்றமானது எவ்வாறு பாதித்துள்ளது என்பதற்கான விளக்கமானது பின்வரும் அட்டவணைகளிலும் அட்டவணைகளுடன் இணைந்த குறிப்புக்களிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

2013 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமைமுதல் கணக்கிணக்கம்

| சொத்துக்கள் | SLFRS/LKAS | மீள்அளவீடுகள் | SLAS |
|---|---|---|---|
| ஆதனம்,பொறித்தொகுதிஉபகரணம் | 19,317,968 | - | 19,317,968 |
| நிதி முதலீடுகள் | 6,844,238,119 | 176,720,098 | 6,667,518,021 |
| வருமதியான தவணைக் கட்டணம் | 814,910,533 | - | 814,910,533 |
| காசும் காசுக்குச் சமமான விடயங்களும் | 360,658,373 | - | 360,658,373 |
| ஏனைய வருமதிகள் | 710,623,447 | (160,516,011) | 871,139,458 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **8,749,748,439** | **16,204,087** | **8,733,544,352** |
| **உரிமைமுதல்** | | | |
| **தொழில்நுட்ப ஒதுக்கு** | | | |
| ஏனைய ஒதுக்குகள் | 1,622,656,295 | - | 1,622,656,295 |
| பிற்போடப்பட்ட தரகு | (199,173,169) | - | (199,173,169) |
| **வருமான ஒதுக்கு** | | - | |
| திரண்ட நிதியம் | 6,966,868,361 | 16,204,087 | 6,950,664,274 |
| மொத்த உரிமைமுதலும் ஒதுக்குகளும் | **8,390,351,487** | **16,204,087** | **8,374,147,400** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| சென்மதி உரிமைக்கோரிக்கை | 273,060,335 | | 273,060,335 |
| ஏனைய சென்மதிகள் | 86,336,617 | - | 86,336,617 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **359,396,952** | **-** | **359,396,952** |
| **மொத்த உரிமைமுதலும் பொறுப்புக்களும்** | **8,749,748,439** | **16,204,087** | **8,733,544,352** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

**2013 டிசெம்பர்31 ஆம்திகதியில்முடிவடைந்தஆண்டுக்கான முழுமொத்த வருமான கணக்கிணக்கம்**

| | SLFRS/LKAS | மீள்அளவீடுகள் | SLAS |
|---|---|---|---|
| மொத்த உழைத்த தவணைக் கட்டணம் | 4,168,033,208 | - | 4,168,033,208 |
| அக்ரஹாரவிற்காகப் பெற்றுக்கொண்ட பங்களிப்பு | 1,406,706,842 | - | 1,406,706,842 |
| சேகரிக்கப்பட்ட பயிர்க் காப்புறுதி விதிப்பனவு | 440,836,600 | - | 440,836,600 |
| ஈட்டப்படாத ஒதுக்கிலான தேறிய மாற்றம் | (563,257,987) | - | (563,257,987) |
| **மொத்த ஈட்டிய தவணைக் கட்டணம்** | 5,452,318,662 | - | 5,452,318,662 |
| **தேறிய ஈட்டிய தவணைக் கட்டணம்** | **5,452,318,662** | **-** | **5,452,318,662** |
| **ஏனைய வருமானம்** | | | |
| நிதி வருமானம் | 690,052,838 | (1,420,061) | 691,472,899 |
| தேறிய பணமாக்கப்பட்ட மிகை | 3,303,729 | - | 3,303,729 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 6,796,348 | - | 6,796,348 |
| | 700,152,915 | (1,420,061) | 701,572,977 |
| **மொத்த தேறிய வருமானம்** | **6,152,471,577** | **(1,420,061)** | **6,153,891,639** |
| **நன்மைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் செலவினங்கள்** | | | |
| தேறிய காப்புறுதி நன்மைகள் மற்றும் உரிமைக் கோரி | (1,381,299,662) | - | (1,381,299,662) |
| பொறுப்பேற்றல் மற்றும் கொள்ளல் கிரயம் | (382,177,026) | - | (382,177,026) |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாக செலவினங்க | (164,126,297) | - | (164,126,297) |
| **மொத்த நன்மைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றுட** | **(1,927,602,985)** | **(1,420,061)** | **(1,927,602,985)** |
| **வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | 4,224,868,592 | (1,420,061) | 4,226,288,654 |
| வருமான வரிச் செலவினங்கள் | - | | |
| **ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)** | **4,224,868,592** | **(1,420,061)** | **4,226,288,654** |
| **ஏனைய முழுமொத்த வருமானம்** | **17,624,148** | **17,624,148** | - |
| **மொத்த முழுமொத்த வருமானம்** | **4,242,492,740** | **16,204,087** | |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான முழுமொத்த வருமான கணக்கிணக்கம்

**1. தேறிய தவணைக் கட்டணங்கள்**

**1.1 மொத்த உழைத்த தவணைக் கட்டணம்**

பிரதான வியாபார வகுப்புக்கள் மூலமான ஆண்டுக்கான தவணைக் கட்டண வருமானம் பின்வருமாறு.

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| உள்முக மீள்காப்புறுதி | 2,041,207,710 | 1,042,220,495 |
| வே.நி.க.சி.கு & ப. (SRCC & Tr) தவணைக் கட்டணம் | 2,835,199,980 | 2,543,782,803 |
| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் | 142,690,974 | 174,785,654 |
| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் சாராதவை | 22,595,787 | 17,915,562 |
| பயிர்க் காப்புறுதி – விவசாயிகளிடமிருந்தான தவணைக் கட்டணம் | 787,372,981 | 379,328,695 |
| பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவத் திட்டம் | 13,000,000 | 10,000,000 |
| | **5,842,067,431** | **4,168,033,208** |

**1.2** அக்ரஹார மருத்துவக் காப்புறுதி திட்டத்திற்காக சேகரிக்கப்பட்ட பங்களிப்பு

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| உறுப்பினர்களிடமிருந்தான பங்களிப்பு | 1,094,899,976 | 996,706,842 |
| திறைசேரியிடமிருந்தான பங்களிப்பு | 400,000,000 | 410,000,000 |
| | **1,494,899,976** | **1,406,706,842** |

**2.** கட்டணங்களும் தரகு வருமானமும்

| | 2,014 | 2,013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| ஒப்பந்த ஆவணதாரி நிர்வாகக் கட்டணங்கள் | 1,405,900 | 16,275 |
| மொத்தக் கட்டணங்களும் தரகு வருமானமும் | **1,405,900** | **16,275** |

**3. முதலீடும் ஏனைய வருமானமும்**

| | 2,014 | 2,013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| **3.1 கடன்களும் வருமதிகளும் வட்டி வருமானம்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலிருந்தான வட்டி வருமானம் | 137,565,147 | 261,446,037 |
| தொகுதிக் கடன்களிலிருந்தான வட்டி வருமானம் | 113,941,967 | 114,250,459 |
| | **251,507,113** | **375,696,497** |
| **3.2 விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதானவற்றின் வட்டி வருமானம்** | | |
| திறைசேரி உண்டியல்களிலிருந்தான வட்டி வருமானம் | 136,852,638 | 77,066,626 |
| திறைசேரி முறிகளிலிருந்தான வட்டி வருமானம் | 235,715,518 | 237,289,715 |
| | 372,568,155 | 314,356,341 |
| மொத்த முதலீட்டு வருமானம் | **624,075,269** | **690,052,838** |
| **3.3 ஏனைய வருமானம்** | | |
| மென் கடன்கள் மீதான வட்டி | 11,937,931 | 5,915,955 |
| அலுவலர் குழாத்தின் இடர் கடன்கள் மீதான வட்டி | 713,358 | 645,850 |
| ஏனையவை | 1,783,326 | 3,521,997 |
| | 14,434,616 | 10,083,802 |
| **மொத்த வருமானம்** | **638,509,884** | **700,136,640** |

**4. தேறிய நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும்**

| | 2,014 | 2,013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| **(a) மொத்த நன்மைகளும் செலுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கைகளும்** | | |
| மீள்காப்புறுதி | (612,666,566) | (47,998,535) |
| வே.நி.க.சி.கு & ப. (SRCC & Tr) | (80,993,389) | (15,449,613) |
| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் | (83,453,649) | (107,457,388) |
| பொதுக் காப்புறுதி – மருத்துவமும் ஏனையவையும் | (75,560,574) | (85,707,270) |
| பயிர்க் காப்புறுதி | (369,304,694) | (5,697,749) |
| பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவத் திட்டம் | (15,161,878) | (15,333,763) |
| அக்ரஹார உறுப்பினர்களுக்கான மருத்துவத் திட்டம் | (1,136,128,636) | (1,116,673,061) |
| | **(2,373,269,385)** | **(1,394,317,378)** |
| **(b) ஒப்பந்தப் பொறுப்புக்களில் மொத்த மாற்றம்** | | |
| மீள்காப்புறுதி | (161,154,770) | 27,267,711 |
| வே.நி.க.சி.கு & ப. (SRCC & Tr) | 24,096,208 | 13,117,777 |
| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் | (55,715,081) | (9,178,864) |
| பொதுக் காப்புறுதி – மருத்துவமும் ஏனையவையும் | 2,236,590 | - |
| பயிர்க் காப்புறுதி | (549,398,194) | (4,738,899) |
| அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் | (91,995,080) | (13,450,010) |
| | (831,930,326) | 13,017,715 |
| **தேறிய நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும்** | **(3,205,199,711)** | **(1,381,299,662)** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| 5. பொறுப்பேற்றல் மற்றும் கொள்ளல் கிரயம் | 2014<br>ரூபா. | 2013<br>ரூபா. |
|---|---|---|
| கொள்ளல் கிரயம் | (862,218,789) | (404,817,508) |
| ஈட்டப்படாத தரகு ஒதுக்கில் மாற்றம் - SRCC | 25,211,540 | 22,640,481 |
| ஈட்டப்படாத தரகு ஒதுக்கில் மாற்றம் – மீள்காப்புறுதி | 142,236,991 | - |
| | (694,770,258) | (382,177,026) |

| 6. ஏனைய தொழிற்படு மற்றும் நிர்வாகச் செலவினங்கள் | 2014<br>ரூபா. | 2013<br>ரூபா. |
|---|---|---|
| கணக்காய்வாளர் ஊதியம் | 430,000 | 337,500 |
| ஊழியர் நலச் செலவுகள் | 84,790,542 | 76,487,490 |
| நிர்வாக மற்றும் தாபனச் செலவுகள் | 77,133,156 | 61,229,192 |
| விற்பனைச் செலவினங்கள் | 791,355 | 808,660 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத் தேய்வு | 8,552,653 | 9,604,450 |
| சட்டக் கட்டணங்கள் | 361,826 | 521,386 |
| நன்கொடைகள் | 859,044 | 579,030 |
| மொத்த ஏனைய தொழிற்படு மற்றும் நிர்வாகச் செலவினங்கள் | **172,918,575** | **149,567,708** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

7. **அருவச் சொத்துக்கள்**

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| **கிரயம்** | | |
| 2014 ஜனவரி 1 ஆம் திகதியிலுள்ளவாறு | 6,542,073 | 6,542,073 |
| சேர்ப்பனவுகள் | - | - |
| 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | 6,542,073 | 6,542,073 |
| **திரண்ட கடனழிவும் குறைவும்** | | |
| 2014 ஜனவரி 1 ஆம் திகதியிலுள்ளவாறு | 6,524,886 | 6,448,518 |
| கடனழிவு | 17,188 | 76,367 |
| 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | | |
| | 6,542,073 | 6,524,886 |
| **கொண்டு செல்லல் தொகை** | | |
| 2013 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | | 17,188 |
| 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | | 0 |

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு இன்னமும் பாவனையிலுள்ள முழுமையாகக் கடனழிவு செய்யப்பட்டஅருவச்சொத்துக்களின்ஆரம்பக் கிரயம் பின்வருமாறு

| டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | 2014 | 2013 |
|---|---|---|
| மென்பொருள் | 6,542,073 | 6,267,073 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**8. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

| **கம்பனி** | **மோட்டார் வாகனம்** | **அலுவலக உபகரணம்** | **தளபாடமும் பொ** | **நானாவித ெ** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| 2014 ஜனவரி 1 ஆம் திகதியிலுள்ளவாறு | 34,470,255 | 34,459,929 | 7,115,498 | 23,338 | 76,069,020 |
| சேர்ப்பனவுகள் | - | 974,170 | 488,648 | - | 1,462,818 |
| அகற்றல்கள் | - | - | - | - | - |
| மாற்றல்கள் | - | - | - | - | - |
| 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | 34,470,255 | 35,434,098 | 7,604,146 | 23,338 | 77,531,838 |
| திரண்ட தேய்வு | | | | | |
| 2014 ஜனவரி 1 ஆம் திகதியிலுள்ளவாறு | 33,062,519 | 19,822,313 | 3,883,130 | 23,338 | 56,791,300 |
| தேய்வு | 3,445,025 | 4,195,344 | 895,096 | - | 8,535,465 |
| அகற்றல்கள் | - | - | - | - | - |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கம் | - | 511,780 | - | - | 511,780 |
| தேய்வு மதிப்பீட்டுச் சீராக்கம் | 14,558,589 | - | - | - | 14,558,589 |
| 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | 21,948,956 | 24,529,436 | 4,778,226 | 23,338 | 51,279,956 |
| **கொண்டு செல்லல் தொகை** | | | | | |
| 2013 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | 1,407,736 | 14,637,616 | 3,232,368 | - | 19,277,720 |
| 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | 12,521,299 | 10,904,662 | 2,825,920 | - | 26,251,881 |

**பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு இன்னமும் பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஆரம்பச் செலவு பின்வருமாறு

| | **2014** | **2013** |
|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** |
| அலுவலக உபகரணம் | 5,935,077 | 1,220,673 |
| தளபாடமும் பொருத்துக்களும் | 137,011 | 69,965 |
| நானாவித சொத்துக்கள் | 23,338 | 23,338 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | | குறிப்புகள் | 2014 | 2013 |
|---|---|---|---|---|
| **9.** | **நிதிச் சொத்துக்கள்** | | **ரூபா.** | **ரூபா.** |
| | கடன்களும் வருமதிகளும் | 9.1 | 3,588,917,799 | 2,577,747,070 |
| | விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்கள் | 9.2 | 5,516,656,080 | 4,266,491,049 |
| | | | 9,105,573,879 | 6,844,238,119 |

| | | 2014 | 2013 |
|---|---|---|---|
| **9.1** | **கடன்களும் வருமதிகளும்** | **ரூபா.** | **ரூபா.** |
| | கடன்களும் வருமதிகளும் | 3,588,917,799 | 2,577,747,070 |
| | **மொத்த நிதி ஆவணங்கள்** | 3,588,917,799 | 2,577,747,070 |
| | **கடன்களும் வருமதிகளும்** | | |
| | அரசாங்க ஆவணங்கள் – மீள்கொள்வனவு (Repo) முதலீடு | 2,516,496,974 | 1,505,332,919 |
| | தொகுதிக் கடன்கள் – விலைகூறப்படாதவை | 1,072,420,825 | 1,072,414,151 |
| | **கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் மொத்தக் கடன்களும் வருமதிகளு** | 3,588,917,799 | 2,577,747,070 |

| | | 2014 | 2013 |
|---|---|---|---|
| **9.2** | **விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச்** | **ரூபா.** | **ரூபா.** |
| | அரசாங்க ஆவணங்கள் – திறைசேரி முறிகள் | 3,073,152,738 | 2,389,498,551 |
| | அரசாங்க ஆவணங்கள் – திறைசேரி உண்டியல்கள் | 2,443,503,342 | 1,876,992,498 |
| | | 5,516,656,080 | 4,266,491,049 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | | 2014 | 2013 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **10.** | **தவணைக் கட்டண வருமதிகள்** | | |
| | தவணைக் கட்டணம் வருமதிகளாக உள்ளவை: | | |
| | நேரடி வாடிக்கையாளர்கள் | 725,145,901 | 464,924,181 |
| | ஏனையவர்கள் | 3,462,112 | 9,817,091 |
| | முகவர், தரகர்கள் மற்றும் ஏனைய இடைத் தரகர்கள் | 415,651,021 | 349,986,352 |
| | | 1,144,259,034 | 824,727,624 |
| **10.1** | **நேரடி வாடிக்கையாளர்களிடமிருந்து வருமதியாகவுள்ள தவணைக் கட்ட** | | |
| | பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் | 6,773,856 | - |
| | பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் சாராதவை | 2,278,260 | 1,955,673 |
| | உள்முக மீள்காப்புறுதி | 716,093,785 | 462,968,508 |
| | | 725,145,901 | 464,924,181 |
| **11.** | **மென் கடன்கள்** | 188,220,907 | 622,760,214 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| 12. ஏனைய நிதி சாராச் சொத்துக்கள் | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| முற்பணங்களும் முன்கொடுப்பனவுகளும் | 944,129 | 1,056,376 |
| WHT வருமதிகள் | 46,121,820 | 34,618,240 |
| மீளளிக்கக்கூடிய வைப்புக்கள் | 8,995,104 | 9,415,854 |
| அலுவலர் குழாத்து இடர் கடன்கள் | 15,417,086 | 19,074,595 |
| முற்கொடுப்பனவு செலவினங்கள் | - | 7,819 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 12,092,199 | 12,092,199 |
| வருமதியாகவுள்ள காசோலைத் திரும்பல் | 757,982 | 1,781,057 |
| இருப்புக்கள் | 23,060 | 23,060 |
| | 84,351,380 | 78,069,200 |

| 13. பிற்போடப்பட்ட தரகு | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| ஜனவரி 1 ஆம் திகதியிலுள்ளவாறு | 199,173,169 | 176,532,688 |
| ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட/ (விடுவிக்கப்பட்ட)ஏற்பாடு | 167,448,531 | 22,640,481 |
| டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு | 366,621,700 | 199,173,169 |

| 14. காசும் காசுக்குச் சமமான விடயங்களும் | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| சில்லறைக் காசு | 130,270 | 143,584 |
| வங்கியிலுள்ள காசு | 277,966,643 | 360,514,790 |
| கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள காசும் | 278,096,913 | 360,658,373 |
| வங்கி மேலதிகப்பற்று | (21,303,927) | (55,162,561) |
| **மொத்த காசும் காசுக்குச் சமமான விடயங்களுட்** | 256,792,986 | 305,495,812 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | | | 2014 | 2013 |
|---|---|---|---|---|
| **15.** | **ஏனைய பொறுப்புக்கள்** | குறிப்புகள் | ரூபா. | ரூபா. |
| | ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 15.1 | 118,675,128 | 37,727,990 |
| | ஏனைய நிதி சாராப் பொறுப்புக்கள் | 15.2 | 78,738,047 | (14,353,408) |
| | | | 197,413,174 | 23,374,582 |

| | | | |
|---|---|---|---|
| **15.1** | **ஏனைய நிதிப் பொறுப்புக்கள்** | | |
| | உரிமைக் கோரிக்கைக் காசோலைகள்/SLIPS திருப்பிய சென்மதிகள் | 3,261,680 | 4,254,343 |
| | சேகரிக்கபட்ட மோட்டார் வாகனத் தவணைக் கட்டண முற்பணம் | 45,260,626 | - |
| | தவணைக் கட்டண மீளளிப்பு சென்மதிகள் | 61,928,872 | 11,928,872 |
| | அட்டுறு செலவினங்கள் | 5,284,964 | 15,908,295 |
| | ஏனைய சென்மதிகள் | 2,938,985 | 5,636,480 |
| | | 118,675,128 | 37,727,990 |

| | | 2014 | 2013 |
|---|---|---|---|
| **15.2** | **ஏனைய நிதி சாராப் பொறுப்புக்கள்** | ரூபா. | ரூபா. |
| | அரசாங்க விதிப்பனவுகள் | 78,738,047 | (14,353,408) |
| | | 78,738,047 | (14,353,408) |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

**16. பிரிவுத் தகவல்கள்**

| 2014 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **தவணைக் கட்டணங்கள்** | **மோட்டார் வாகனம் ரூபா.** | **மோட்டார் வாகனம் சாராதவை ரூபா.** | **மீள்காப்புறுதி ரூபா.** | **SRCC ரூபா.** | **சுகாதாரத் திட்டம் அக்ரஹாரா/ பா.உ** | **பயிர்க் காப்புறுதி திட்டம்** | **மொத்தம் ரூபா.** |
| மொத்த உழைத்த தவணைக் கட்டணம் | 142,690,974 | 22,595,787 | 2,041,207,710 | 2,835,199,980 | 13,000,000 | 787,372,981 | 5,842,067,431 |
| அக்ரஹாரவிற்காகப் பெற்றுக்கொண்ட பங்களிப்பு | - | - | - | - | 1,494,899,976 | | 1,494,899,976 |
| சேகரிக்கபட்ட பயிர்க் காப்புறுதி விதிப்பனவு | - | - | - | - | | 1,184,647,255 | 1,184,647,255 |
| ஒப்பளிக்கபட்ட தவணைக் கட்டணம் | - | - | - | - | - | - | - |
| **தேறிய உழைத்த தவணைக் கட்டணம்** | **142,690,974** | **22,595,787** | **2,041,207,710** | **2,835,199,980** | **1,507,899,976** | **1,972,020,236** | **8,521,614,662** |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கில் தேறிய மாற்றம் | (8,438,303) | (5,432,223) | (349,645,526) | (142,470,265) | - | - | (505,986,318) |
| **ஈட்டிய தேறிய தவணைக் கட்டணம் (A)** | **134,252,671** | **17,163,564** | **1,691,562,183** | **2,692,729,715** | **1,507,899,976** | **1,972,020,236** | **8,015,628,345** |
| மீள்காப்புறுதித் தரகு வருமானம் | | | - | - | | | - |
| பிற்போட்ட RI தரகு வருமானத்தில் மாற்றம் | | | - | - | | | - |
| **தேறிய மீள்காப்புறுதி தரகு வருமானம் (B)** | - | - | - | - | - | | - |
| கட்டண வருமானம் (C) | 1,395,500 | 10,400 | - | - | - | - | 1,405,900 |
| **மொத்த பொறுப்பேற்றல் வருமானம் (A + B + C)** | **135,648,171** | **17,173,964** | **1,691,562,183** | **2,692,729,715** | **1,507,899,976** | - **1,972,020,236** | **8,017,034,245** |
| கொள்ளல் கிரயம் | - | - | (264,154,412) | (430,615,847) | - | - | (694,770,258) |
| பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்தில் மாற்றம் | | | | | | | - |
| **தேறிய கொள்ளல் கிரயம் (D)** | **-** | **-** | **(264,154,412)** | **(430,615,847)** | **-** | | **(694,770,258)** |

**17. பிரிவுத் தகவல்கள் (தொடர்...)**

| 2014 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **மோட்டார் வாகனம் ரூபா.** | **மோட்டார் வாகனம் சாராதவை ரூபா.** | **மீள்காப்புறுதி ரூபா.** | **SRCC ரூபா.** | **சுகாதாரத் திட்டம் அக்ரஹாரா/ பா.உ** | **பயிர்க் காப்புறுதி திட்டம்** | **மொத்தம் ரூபா.** |
| செலுத்தப்பட்ட மொத்த உரிமைக் கோரிக்கைகள் | (139,168,729) | (73,323,984) | (773,821,335) | (56,897,181) | (1,243,285,594) | (918,702,888) | (3,205,199,711) |
| மீள்காப்புறுதி அறவீடுகள் | - | - | - | - | - | - | - |
| **செலுத்தப்பட்ட தேறிய உரிமைக் கோரிக்கைகள்** | **(139,168,729)** | **(73,323,984)** | **(773,821,335)** | **(56,897,181)** | **(1,243,285,594)** | **(918,702,888)** | **(3,205,199,711)** |
| நிலுவையாகவுள்ள உரிமைக் கோரிக்கைக்கான ஒதுக்குகளில் மொத்த மாற்றம் | | | | | | - | - |
| நிலுவையாகவுள்ள உரிமைக் கோரிக்கை மாற்றத்தின் மீள்காப்புறுதி செய்பவரின் பங்கு | | | | | | - | - |
| ஏனைய தொழில்நுட்ப ஒதுக்குகளில் மொத்த மாற்றம் - IBNR | | | | | | - | - |
| ஏனைய தொழில்நுட்ப ஒதுக்கு மாற்றத்தின் மீள்காப்புறுதி செய்பவரின் பங்கு - IBNR | | | | | | - | - |
| **உள்ளாகிய தேறிய உரிமைக் கோரிக்கைகள் (E)** | **(139,168,729)** | **(73,323,984)** | **(773,821,335)** | **(56,897,181)** | **(1,243,285,594)** | **(918,702,888)** | **(3,205,199,709)** |
| **நிர்வாகச் செலவினங்கள் (F)** | (27,419,909) | (6,854,977) | (13,709,954) | (35,819,030) | (82,259,727) | (6,854,977) | (172,918,575) |
| **மொத்தப் பொறுப்பேற்றல் செலவினங்கள் (D + E + F)** | (166,588,638) | (80,178,961) | (1,051,685,702) | (523,332,057) | (1,325,545,321) | (925,557,865) | (4,072,888,542) |
| **பொறுப்பேற்றல் பெறுபேறுகள்** | **(30,940,467)** | **(63,004,997)** | **639,876,482** | **2,169,397,658** | **182,354,655** | **1,046,462,371** | **3,944,145,703** |
| முதலீட்டு வருமானம் | 35,724,408 | 12,901,317 | 79,785,701 | 491,195,609 | 739,326 | 18,163,521 | 638,509,882 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **4,783,941** | **(50,103,680)** | **719,662,183** | **2,660,593,266** | **183,093,981** | **1,064,625,892** | **4,582,655,585** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

18 காப்புறுதி மற்றும் நிதி ஆபத்து

(அ) காப்புறுதி ஆபத்து

உண்மையான உரிமைக் கோரிக்கைகள் மற்றும் நன்மைக் கொடுப்பனவுகள் அல்லது அதிலுள்ள கால அளவு என்பன எதிர்பார்க்கைகளிலிருந்து வேறுபடும் என்பதே காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் சபை முகங்கொடுக்கும் பிரதான ஆபத்தாகும். உரிமைக் கோரிக்கைகள் நிகழும் தடவைகள், உரிமைக் கோரிக்கைகளின் தீவிரத் தன்மை, செலுத்தப்படும் உண்மையான நன்மைகள் என்பன இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆதலினால் இப் பொறுப்புக்களைக் காப்பீடு செய்துகொள்வதற்கு போதுமான ஒதுக்குகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளன என்பதை உறுதி செய்வதே சபையின் நோக்கமாகும்.

காப்புறுதி ஒப்பந்தங்களின் பெருமளவு பட்டியல் ஒன்றின் வழியே பன்முகப்படுத்துவதன் மூலம் ஆபத்து வெளிப்பாடு குறைக்கப்படுகின்றது. காப்புறுதிப் பொறுப்பேற்றல் தந்திரோபாய வழிகாட்டல்களைக் கவனமாக தெரிவுசெய்து அமுல்படுத்துவதன் மூலம் ஆபத்துக்களின் மாறுபடுதன்மையும் மேம்படுத்தப்படும்.

சபையானது பின்வரும் பொதுக் காப்புறுதி ஒப்பந்த வகைகளை பிரதானமாக வழங்குகின்றது: மோட்டார் வாகனம், கடலபாயம், தீயபாயம், பொறியியல், நானாவிதம் என்பனவாகும். சுகாதாரப் பாதுகாப்பு ஒப்பந்தங்களானவை ஒப்பந்த ஆவணதாரிகளுக்கு மருத்துவச் செலவுக் காப்பீட்டினை வழங்குகின்றன. காப்புறுதி ஒப்பந்த ஆவணங்களின் கீழ் ஆபத்துக்கள் வழக்கமாக பன்னிரண்டு மாத காலப்பகுதியினை உள்ளடக்குகின்றன.

உள்முக மீள்காப்புறுதி உள்ளடங்கலான பொதுக் காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக, கூடுதல் முக்கியத்துவமான ஆபத்துக்களானவை காலநிலை மாற்றங்கள், இயற்கைப் பேரிடர்கள் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் ஆகியவற்றிலிருந்து எழுகின்றன. தீர்ப்பனவு செய்வதற்கு சில ஆண்டுகள் எடுக்கும் நீண்டகால உரிமைக் கோரிக்கைகளுக்காக பணவீக்க ஆபத்தும் உள்ளது. சுகாதாரப் பாதுகாப்பு ஒப்பந்தங்களுக்காக, வாழ்க்கைப் பாங்கு மாற்றங்கள், தொற்றுநோய்கள் மற்றும் மருத்துவ விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் ஆகியவற்றிலிருந்து கூடுதல் முக்கியத்துவமான ஆபத்துக்கள் எழுகின்றன.

சபையினால் காப்புறுதி செய்யப்படும் ஆபத்தின் அமைவிடம், காப்புறுதி செய்யப்படுவதும் தொழில் மூலமானதுமான ஆபத்து வகை ஆகியவை தொடர்பில் இவ் ஆபத்துக்கள் குறிப்பிடத்தக்களவில் வேறுபடுவதில்லை.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

காப்புறுதி ஒப்பந்தப் பிரிவுகளின் பெருமளவு பட்டியல் ஒன்றின் வழியே பன்முகப்படுத்துவதன் மூலம் மேற்போந்த ஆபத்து வெளிப்பாடு குறைக்கப்படுகின்றது. ஆபத்து வகை மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட நன்மை மட்டம் ஆகியவற்றுக்கேற்ப ஆபத்துக்களானவை பன்முகப்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள காப்புறுதிப் பொறுப்பேற்றல் தந்திரோபாய வழிகாட்டல்களைக் கவனமாக தெரிவுசெய்து அமுல்படுத்துவதன் மூலம் ஆபத்துக்களின் மாறுபடுதன்மை மேம்படுத்தப்படும். தொழில் துறைகளின் வழியே பன்முகப்படுத்துவதன் மூலம் இது பெருமளவு எய்தப்படுகின்றது. மேலும் சகல புதிய மற்றும் தொடர்ந்து செல்லும் உரிமைக் கோரிக்கைகளை மதிப்பிடுவதற்கான கடுமையான உரிமைக் கோரிக்கை மீளாய்வுக் கொள்கைகள், உரிமைக் கோரிக்கை கையாளல் நடைமுறைகளின் ஒழுங்கான விரிவான மீளாய்வு மற்றும் சாத்தியமான மோசடியான உரிமைக் கோரிக்கைகளின் தொடர் புலனாய்வு என்பன சபையின் ஆபத்து வெளிப்பாட்டினை குறைக்கும் பொருட்டு தாபிக்கப்பட்டுள்ள சகல கொள்கைகளும் நடைமுறைகளுமாகும். வியாபாரத்தினை எதிர்மறையாகப் பாதிக்கக்கூடிய எதிர்வுகூற முடியாத எதிர்கால அபிவிருத்திகளுக்கான அதன் வெளிப்பாட்டினைக் குறைக்கும் பொருட்டு செயலூக்கமிக்க விதத்தில் முகாமை செய்வதும் உடனடியாக உரிமைக் கோரிக்கைகளை முன்னெடுப்பதுமான கொள்கை ஒன்றினை சபையானது மேலும் வலுவுக்குக் கொண்டு வருகின்றது. காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களை மதிப்பீடு செய்யும் போது எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்தினைக் கவனத்திற் கொள்வதன் மூலம் பணவீக்க ஆபத்துக் குறைக்கப்படுகின்றது.

முகாமையினால் தீர்மானிக்கப்பட்டவாறு சபையினது ஆபத்து நாட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு பேரழிவுகளுக்கான வெளிப்பாட்டினை மட்டுப்படுத்துவதே இக் காப்புறுதிப் பொறுப்பேற்றல் மற்றும் மீள்காப்புறுதித் தந்திரோபாயங்களின் நோக்காக உள்ளது.

**உரிமைக் கோரிக்கைகளின் நிகழ் தடவைகளும் தீவிரத் தன்மையும்**

உரிமைக் கோரிக்கைகளின் நிகழ் தடவைகளும் தீவிரத் தன்மையும் சில காரணிகளினால் பாதிக்கப்பட முடியும். சபையானது பிரதானமாக ஆதனம், பொறியியல், மோட்டார் வாகனம், நானாவித விபத்து, கடலபாயம், மருத்துவம் மற்றும் தனிப்பட்ட விபத்து வகுப்புக்களை பொறுப்பேற்கின்றது. உரிமைக் கோரிக்கைகளானவை சாதாரணமாக குறுங்காலம் ஒன்றுக்குள் நெருக்கமாக உள்வாங்கப்பட்டு தீர்க்கப்படுமிடத்து இக் காப்புறுதி வகைகளானவை பொதுவாக குறுங்காலக் காப்புறுதி ஒப்பந்தங்களாக கருதப்படும். காப்புறுதி ஆபத்தினைக் குறைப்பதற்கு இது உதவுகின்றது.

**ஆதனம்**

ஆதனக் காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக, பிரதான ஆபத்துக்களாக தீயினால் உண்டாகும் சேதம் மற்றும் ஏனைய சார்ந்த ஆபத்துக்கள் அத்துடன் அவற்றிலிருந்து விளையும் இடையூறு என்பன உள்ளன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

ஒன்றில் மீளிடுகைப் பெறுமதியில் அல்லது காப்புறுதி செய்யப்பட்ட வட்டிக்கான பொறுத்தமான பெறுமதிகளுடனான ஈட்டுறுதி அடிப்படையில் இவ் ஒப்பந்தங்கள் பொறுப்பேற்கப்படுகின்றன. சேதமடைந்த ஆதனங்களை மீள்உருவாக்குவதற்கான அல்லது திருத்துவதற்கான செலவு, வியாபாரம் இடையூறுக்கு உள்ளாகும் பட்சத்தில் அதன் இழப்புக்கு முன்னதான நிலமைக்கான நடவடிக்கைகளை மீளமைப்பதற்கான காலம் மற்றும் காப்புறுதி அடிப்படை என்பன உரிமைக் கோரிக்கை மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளாகும்.

**பொறியியல்**

பொறியியல் காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக, காப்புறுதி செய்யப்பட்ட கருத்திட்ட வேலைகளுக்கான நட்டம் அல்லது சேதம் அத்துடன் அதன் விளைவான மூன்றாம் தரப்புப் பொறுப்புக்கள், காப்புறுதி செய்யப்பட்ட பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணம் ஆகியவற்றுக்கான நட்டம் அல்லது சேதம் அத்துடன் அதன் விளைவான வியாபாரத் தடங்கல் நட்டங்கள் ஆகியன பிரதான ஆபத்துக் கூறுகளாகும். நட்டம் அல்லது சேத அளவே உரிமைக் கோரிக்கை மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாகும்.

19 காப்புறுதி மற்றும் நிதி ஆபத்து (தொடர்ச்சி)

**மோட்டார் வாகனம்**

மோட்டார் வாகன காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக, இறப்பு மற்றும் உடல் ரீதியான காயம் மற்றும் மூன்றாம் தரப்பு ஆதனங்களுக்கான அதேபோல காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்களுக்கான சேதம் ஆகியவற்றிலிருந்து எழும் உரிமைக் கோரிக்கைகளே பிரதான ஆபத்துக் கூறுகளாகும். இறப்புகள் மற்றும் உடல் ரீதியான காயங்களுக்கான சாத்தியமான நீதிமன்றக் கட்டளைகள் மற்றும் ஆதனங்களுக்கான சேதத்தின் அளவு என்பன உரிமைக் கோரிக்கை மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளாகும்.

**நானாவித விபத்து**

நானாவித விபத்து காப்புறுதி வகுப்புக்களுக்காக பண இழப்பு, ஊழியர்களின் துரோகம், தனிப்பட்ட விபத்து, பணியாளர் நட்டஈடு, பிரயாணம், பொதுவான மூன்றாம் தரப்புப் பொறுப்பு மற்றும் தொழில்சார் ஈட்டுறுதி போன்றன பொறுப்பேற்கப்படும்.

நட்டம் அல்லது சேதத்தின் அளவு மற்றும் பொறுப்பு வகுப்புக்களுக்கான சாத்தியமான நீதிமன்றக் கட்டளைகள் என்பன உரிமைக் கோரிக்கை மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளாகும்.

**கடலபாயம்**

கடலபாயக் காப்புறுதியில், மொத்த அல்லது பகுதியளவு நட்ட உரிமைக் கோரிக்கைகளை விளைவிக்கும் பல்வேறுபட்ட அசம்பாவிதங்கள் காரணமாக காப்புறுதி செய்யப்பட்ட சரக்குக் கப்பல் மற்றும் அதன் வெளிப்புறத்துக்கான சேதம் அல்லது நட்டமே பிரதான ஆபத்துக்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

கூறுகளாகும். நட்டம் அல்லது சேதத்தின் அளவானது உரிமைக் கோரிக்கை மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாகும்.

**மருத்துவம் மற்றும் தனிப்பட்ட விபத்து**

மருத்துவக் காப்புறுதியில், நோய் மற்றும் விபத்துக்கள் அத்துடன் தொடர்புபட்ட சுகாதாரப் பாதுகாப்புச் செலவுகள் என்பன பிரதான ஆபத்துக் கூறுகளாகும். தனிப்பட்ட விபத்துக்காக, இறப்பு

**புவியியல் ரீதியான ஆபத்து குவிதல்**

காப்புறுதி ஒப்பந்தங்களிலிருந்து எழும் இக் காப்புறுதி ஆபத்தானது அடிப்படையில் இலங்கையில் குவிக்கப்படுகின்றது.

(ஆ) நிதி ஆபத்து

i. கடன் ஆபத்து
கடப்பாடு ஒன்றினை ஆற்றுவதன் மூலம் நிதி ஆவணம் ஒன்றுக்கான ஒரு தரப்பினர் மற்றய தரப்புக்கு நிதி இழப்பு ஒன்றினை விளைவிக்கும் ஆபத்தே கடன் ஆபத்தாகும்.

ii. நிதி ஆவணங்களின் கடன் ஆபத்தினை பின்வரும் செய்முறைகள்/ செயற்பாடுகள் குறைக்கின்றன.
   - நிதி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் கடன் ஆபத்துக் கொள்கை தங்கியுள்ளது. வெளிப்பாடுகளானவை அரசாங்க ஆவணங்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ii. திரவத்தன்மை ஆபத்து

காசினை அல்லது மற்றுமொரு நிதிச் சொத்துக்களை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படும் அதன் நிதிப் பொறுப்புக்களையும் அத்துடன் நிதி ஆவணங்களுடன் இணைந்த கடப்பாடுகளையும் பூர்த்திசெய்கையில் கம்பனியானது பிரச்சினைக்கு முகங்கொடுக்கும் ஆபத்தே திரவத்தன்மை ஆபத்தாகும். இதன் போது மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்களுக்கும் எதிர்பார்க்கப்பட்ட மீள்காப்புறுதி அறவீடுகளுக்கும் இடையிலான கால வேறுபாடுகளுடன் இணைந்த திரவத்தன்மை ஆபத்தும் காணப்படுகின்றது.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

திரவத்தன்மைத் தேவைப்பாடுகளானவை மாதாந்த அடிப்படை ஒன்றில் கண்காணிக்கப்படுவதுடன் ஏதேனும் வாக்குறுதிகள் எழும் போது அவற்றைப் பூர்த்திசெய்வதற்கு போதுமான திரவத்தன்மை நிதியங்கள் கிடைக்கக்கூடியதாகவுள்ளன என்பதை முகாமைத்துவம் உறுதிசெய்கின்றது.

திரவத்தன்மை ஆபத்துக்கான கம்பனியின் வெளிப்பாட்டினைக் குறைக்கும் பொருட்டு பின்வரும் கொள்கைகளும் நடைமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- திரவத்தன்மைத் தேவைப்பாடுகளானவை மாதாந்த அடிப்படை ஒன்றில் கண்காணிக்கப்படுவதுடன் ஏதேனும் வாக்குறுதிகள் எழும் போது அவற்றைப் பூர்த்திசெய்வதற்கு போதுமான திரவத்தன்மை நிதியங்கள் கிடைக்கக்கூடியதாகவுள்ளன என்பதை முகாமைத்துவம் உறுதிசெய்கின்றது.
- நிதியங்களின் அவசரமான கோரிக்கையினைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பாராத செலவின நிதியத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- நிதியங்களின் அவசரமான கோரிக்கையினைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பாராத செலவின நிதியத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு திரவத்தன்மை ஆபத்துக்கான கம்பனியின் வெளிப்பாடு பின்வரும் பொறுப்புக்களுக்கு எதிரானதாகும்.

i. சந்தை ஆபத்து

அந்நியச் செலாவணி மாற்று வீதங்கள் மற்று வட்டி வீதங்கள் என்பன சபையினது வருமானத்தை அல்லது அதன் நிதி ஆவணங்களின் பெறுமதியினை பாதிப்பது போன்ற சந்தை விலைகளை மாற்றும் ஆபத்தே சந்தை ஆபத்தாகும். வருவாயை உச்சப்படுத்தும் அதேவேளை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகளுக்குள் சந்தை ஆபத்து வெளிப்பாடுகளை முகாமை செய்து கட்டுப்படுத்திக் கொள்வதே சந்தை ஆபத்து முகாமையின் நோக்கமாகும்.

(அ) வட்டி வீத ஆபத்து

சந்தை வட்டி வீதங்களிலான மாற்றங்கள் காரணமாக நிதி ஆவணம் ஒன்றின் பெறுமதி அல்லது எதிர்காலக் காசுப் பாய்ச்சல் தளம்பல் அடையும் ஆபத்தே வட்டி வீத ஆபத்தாகும். தளம்பல் வீத ஆவணகங்களானவை காசுப் பாய்ச்சல் வட்டி ஆபத்தினை வெளிக்காட்டும் மாறாக நிலையான வட்டி வீத ஆவணகங்களானவை உண்மைப்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

பெறுமதி வட்டி ஆபத்தினை வெளிக்காட்டும். சபையானது நிலையான வட்டி வீதங்களுடனான அரசாங்க ஆவணங்களில் முதலீடு செய்துள்ளது. ஆதலால் சந்தை வட்டி வீதத்திலான மாற்றத்திலிருந்து குறிப்பிடத்தக்க வட்டி வீத ஆபத்து எவையும் இல்லை.

(ஆ) அந்நியச் செலாவணி ஆபத்து

அந்நியச் செலாவணி பரிமாற்ற வீதங்களிலான மாற்றங்கள் காரணமாக நிதி ஆவணம் ஒன்றின் பெறுமதியானது தளம்பல் அடையும் ஆபத்தே அந்நியச் செலாவணி ஆபத்தாகும். உள்முக மீள்காப்புறுதி வியாபாரத்திற்காக ஏனைய காப்புறுதி செய்பவர்களுடன் அந்நியச் செலாவணியிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான செலாவணி ஆபத்துக்கு சபையானது வெளிக்காட்டப்படுகின்றது.

அந்நியச் செலாவணி பரிமாற்ற வீத தளம்பல்கள் காரணமான குறிப்பிடத்தக்க நட்டங்களின் மிகக் குறைந்த ஆபத்தே காணப்படும் என முகாமை நம்பிக்கை கொள்வதுடன் அதன் விளைவாக சபையானது அதன் அந்நியச் செலாவணி வெளிக்காட்டலினை பாதுகாப்பதில்லை.

**எதிர்பாராத செலவினங்களும் ஈடுபாடுகளும்**

(அ) எதிர்பாராத செலவினங்கள்

ஆண்டு முடிவிலுள்ளவாறு, சபைக்கு எதிராக நிலுவையிலுள்ள வழக்குகள் எவையும் இருக்கவில்லை.

சபையின் அபிப்பிராயத்தில், சாதாரண வியாபார தொடர் நடவடிக்கையில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு எதிராக தற்போதுள்ள வழக்கானது அறிக்கையிடப்பட்ட நிதிப் பெறுபேறுகளில் அல்லது சபையின் எதிர்கால தொழிற்பாட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்காது.

(ஆ) மூலதன ஈடுபாடு

ஆண்டு முடிவிலுள்ளவாறு மூலதன ஈடுபாடு எவையுமில்லை.



# 13. கணக்காய்வாளர் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஆர்ஈ/சீ/என்ஐரீஎவ்/எவ்எ/2014 | මබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2016 மே 12

தலைவர்,

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

**தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்களின் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று நிதியத்தின் தலைவருக்கு 2016 சனவரி 04 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

3



2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிறுவனத்தினால் திரவத்தன்மை அடிப்படையில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக்கூற்றில் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 04 இன் பிரகாரம் காப்புறுதி உரித்துள்ள செலவினங்களை இனங்காணும் போது முன்னைய அனுபவங்கள் மற்றும் நடைமுறைகளின் பிரகாரம் இயலுமானவரை யதார்த்தத்தை வெளிப்படுத்துகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 24,096,208 தொகையான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேறிய பெறுமதி ரூபா 9,501,597 தொகையான 04 மோட்டார் வாகனங்களின் சந்தைப் பெறுமதி ரூபா 15,400,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தப் பெறுமதியைக் காண்பிக்கும் வகையில் கணக்கீடு

செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது பயன்தரு ஆயுட்காலம் மீள மதிப்பிடல் மாத்திரம் மீள மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) வாடகைச் செலவினம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியக் கணக்கிற்கான நிதியத்தின் பங்களிப்பு காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் வாடகைச் செலவினம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியச் செலவினம் முறையே ரூபா 1,500,000 இனாலும் ரூபா 546,183 இனாலும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் பணிக்கொடைக் கணிப்பீட்டு வழுவின் காரணமாக மீளாய்வாண்டின் நிதியேற்பாட்டில் ரூபா 189,953 மிகை ஏற்பாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதியத்தின் பொதுவான, மீள் காப்புறுதி மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய கிடைக்க வேண்டிய தவணை வருமானம் ரூபா 718,919,253 இற்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் ரூபா 68,675,128 தொகையான ஏனைய நிதிப் பொறுப்புக்களுக்குரிய விரிவான பட்டோலை மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் செயற்படுத்தப்படுகின்ற பயிர்காப்புறுதி 2014 பெரும் போகம் முதல் விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபைக்குக் கையளிக்கப்பட்டமையினால் அந்தச் சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 50,000,000 தொகையான மதிப்பிடப்பட்ட தவணைப் பணத்தில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 11,904,463 தொகை சபைக்குச் செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டங்கள், சிவில் பிணக்குகளுக்காக நிதியத்திற்கு காப்புறுதிக் கம்பனியால் செலுத்தப்படுகின்ற தவணைப்பணம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மீளக் கோருகின்ற சந்தர்ப்பங்களின் போது மீளச் செலுத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்த ரூபா 11,928,811 தொகையினை தீர்த்து வைப்பதற்குத் தேவையான பல்வேறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் இன்னும் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது காணப்பட்ட ரூபா 757,982 தொகையான மதிப்பிழந்த காசோலைக்காக செலுத்தவேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மூன்று வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற அக்ரஹார பிரிவிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 859,655 தொகை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காதிருந்த பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை முறைமைப்படுத்தும் அதிகாரச் சட்டம் | |
| (i) 7(1) ஆம் பிரிவு | சகல காப்புறுதியாளர்களிடமிருந்தும் வருடாந்த தேறிய தவணை வருமானத்தின் அடிப்படையில் காலத்திற்கு காலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளின் ஊடாக அமைச்சரால் சபையின் இணக்கப்பாட்டுடன் தீர்மானிக்கப்படுகின்ற அளவுகளில் செஸ்வரியொன்று நிதியத்தினால் இலங்கைக் காப்புறுதிச் சபைக்குச் செலுத்த வேண்டிய போதிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 56,829,739 தொகை செலுத்த வேண்டிக் காணப்பட்டதுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக எத்தொகையும் ஒதுக்கப்படவோ அல்லது செலுத்தப்படவோ இல்லை. |

| | |
|---|---|
| (ii) 16(1) ஆம் பிரிவு | தீர்மானிக்கப்பட்ட கிடைக்ககூடிய ஏதாவது நிதியின் அளவு சகல காப்புறுதியாளர்களினாலும் வருடாந்த கட்டணமாக இலங்கை காப்புறுதி சபைக்கு செலுத்த வேண்டிய போதிலும் சபையின் அறிக்கையின் படி 2011 முதல் 2014 வரையான காலப்பகுதிக்குரியதாக நிதியத்தினால் ரூபா 10,349,888 தொகை சபைக்குச் செலுத்தவேண்டி இருந்தது. |
| (ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் அத்தியாயம் | மனிதவள முகாமைத்துவத்துக்குரிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை உள்ளடக்கி நிர்வாகக் கைநூல் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் திறைசேரி செயலாளரின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தில் அமுல்படுத்தப்படுகின்ற செயல் நடைமுறைக் கோவைக்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 4,582,655,586 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,239,427,182 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 343,228,404 அதிகரிப்பு காணப்பட்டது. தேறிய நலன்களும் உரிமைக் கொடுப்பனவுகளும் மற்றும் கைப்பற்றல் செலவினங்கள் முறையே ரூபா 1,823,900,049 இனாலும் ரூபா 312,593,232 இனாலும் அதிகரித்த போதிலும், மொத்தத் தவணை வருமானம் பயிர் காப்புறுதி வருமானம் மற்றும் அக்ரஹார இற்கான பங்களிப்புக்கள் முறையே ரூபா 1,674,034,223 இனாலும், ரூபா 743,810,655 இனாலும், ரூபா 88,193,134 இனாலும் அதிகரித்தமை நிதி விளைவுகளில் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின்படி சமூகத்தில் மிகவும் அதிகளவில் அபாயங்களுக்கு உட்படுகின்ற தரப்பினருக்காக காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்தல் நிதியம் உருவாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கமாக இருந்ததுடன் அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நிதியம் கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பிஎவ்/437 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் சகல அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்கள் தமது தேவையின் படி மோட்டார் வாகன காப்புறுதியை தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றில் மாத்திரம் பெறவேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டின் அரசாங்க துறையில் 9158 மோட்டார் வாகனங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது அது 6206 வரை அதாவது 32 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் காரணமாக காப்புறுதி வருமானமும் ரூபா 39 மில்லியனால் குறைவடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது 22 தனியார் வாகனங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது ஒரு வாகனமேனும் காப்புறுதி செய்யப்படாமையினால் நிதியத்தால் வாகனக் காப்புறுதி தொடர்பாக எவ்வித செயல்முன்னேற்றத்தையும் பெற முடியாதிருந்தது.

(இ) 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 1824/23 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் படி வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனியிலிருந்து அறவிடப்படுகின்ற பயிர்ச் செய்கை வரி (Crop Levy) வருமான சேகரித்தல் நிதியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியின் பாவனை தொடர்பாக இது வரையும் நிதியத்திற்கு ஆலோசனை கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் போதியளவான நிதி ஒன்று கணக்கில் காணப்படாமையினால் செலுத்த முடியாதிருந்த பயிர் காப்புறுதி இழப்பீட்டுக் கோரிக்கைகள் இந்த வரித் தொகையிலிருந்து செலுத்தவதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருந்தது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின்

போது பயிர் வரி அறவிடலால் நிதியத்திற்குக் கிடைத்த வருமானம் முறையே ரூபா 440.8 மில்லியன் மற்றும் ரூபா 1,184.6 மில்லியன் ஆக இருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

மோட்டார் வாகனம், மோட்டார் வாகனமல்லாத ஏனைய பல்வேறு காப்புறுதிகளின் கீழ் காப்புறுதியை அமுல்படுத்துதல்/ மீள் காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதியம் 2014 திசெம்பர் 31 வரையும் வழிகாட்டிக் கோவை ஒன்றை தயாரிக்காமையினால் ஏனைய காப்புறுதி நிறுவனங்கள் செயற்படுகின்ற முறையின் பிரகாரம் அந்தக் காப்புறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதனால் இலங்கையில் மீள் காப்புறுதியாக செயற்படுகின்ற இந்த நிதியத்தினால் தமது வியாபார நடவடிக்கைகள் ஆரம்பித்து குறிப்பிட்ட காலம் கடந்திருந்த போதிலும் காப்புறுதி நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.

4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

2005 இன் பாதீட்டு முன்மொழிவின் மூலம் அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் உத்தியோகத்தர்களுக்கு சமமான மற்றும் கூடிய நலன்களை உரித்தாக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கு உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் அறவிடப்படுகின்ற அக்ரஹார பங்களிப்புப் பணம் குறிப்பிட்ட பிரகாரம் நிதியத்திற்கு வழங்கப்பட்டதா எனவும் நலன்களைச் செலுத்துதல் தொடர்பாக சரியான தன்மையினை உறுதிப்படுத்திச் கொள்வதற்காகவும் சகல அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான தரவு முறைமை ஒன்றை அல்லது முறையான திட்டமொன்றை பேணுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அக்ரஹார நலன்களைச் செலுத்தவதற்காக ஒரு உத்தியோகத்தருக்காக அரசாங்கம் மாதாந்தம் ரூபா 69 பங்களிப்புப் பணம் நிதியத்திற்குச் செலுத்தப்படுகின்றமை 2005 மே 18 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(ii) இல் காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் நிதியத்தால் அங்கத்தவர் எண்ணிக்கை குறிப்பாக இனங்காணப்படாமையால் அரசாங்கத்தின் பங்களிப்பு திறைசேரியினால் நிதியத்திற்கு வழங்கும் போது ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் இணங்கப்பட்ட தொகை மாத்திரம் வழங்கப்பட்டமையின் காரணமாக 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய அரசாங்கத்தின்

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

பங்களிப்பு உரிய பிரகாரம் பெறப்பட்டமையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

4.4 இனங்காணப்பட்ட நட்டம்

-----------------------------------------------

நிதியத்தால் சாத்திய வள ஆய்வின்றி 2011 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் ஊழியர்களுக்காக அக்ரஹார முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் வைப்புப்பணம் செலுத்தாது வைத்தியசாலையில் அனுமதிக்கும் வசதியை வழங்கும் நோக்கில் இலத்திரனியல் அட்டை (E-card) முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஈ) இன் படி தயாரிக்கப்பட வேண்டிய சகல தொடர்புடைய செலவினங்கைளயும் உள்ளடக்கிய மொத்தக் கிரய மதிப்பீடொன்று இந்த செயற்திட்டத்திற்காக நிதியத்தினால் தயாரிக்கப்பட்டிராததுடன் கொள்வனவுக் குழுவின் நியமனமும் உரிய வழிகாட்டியின் படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த செயற்திட்டத்திற்காக மூன்று வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கிடைத்திருந்த போதிலும், இரண்டாவது ஆகக் குறைந்த விலையான ரூபா 21,820,000 தொகை சமர்ப்பித்த தனியார் நிறுவனமொன்றிற்கு உரிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் முதலாவது ஆகக்குறைந்த விலை நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும் சிபாரிசுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 10,999,000 ஆகும்.

(இ) நிதியத்தினால் 650,000 இலத்திரனியல் அட்டைகள் மற்றும் அந்த இலத்திரனியல் அட்டைகளை வாசிக்கும் 20 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 4,364,000 தொகையும் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் மூன்று சந்தர்ப்பங்களின் போது 250,000 அட்டைகளுக்காக பகுதிக் கொடுப்பனவாக ரூபா 6,025,000 கூட்டுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின் படி நிதியத்திற்குக் கிடைத்த அட்டைகளின் அளவு 221,630 மாத்திரமாக இருந்தமையால் 28,370 அட்டைகளுக்காக ரூபா 855,210 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்தினால் அக்ரஹார பயனாளிகள் தொடர்பாக பூரணமான தகவல் முறைமையொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் 2015 செப்தெம்பர் 14 ஆந் திகதி வரையில் 477,000 அங்கத்தவர்களின் தரவுகள் கணனிமயப்படுத்தப்பட்டதாகவும் இது வரையில் 212,969 அட்டைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது வரையில் வழங்குனர் அட்டைகள் அச்சிடும் நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தமையால் பயனாளிகளுக்கு அட்டைகளை விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) இந்த அட்டைகளை வாசிக்கும் இயந்திரங்கள் 9 பிரதான வைத்தியசாலைகளில் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது வரை முகாமைத்துவத்தின் மாற்றங்கள் காரணமாக அதனை நிறைவேற்ற முடியாதிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் 20 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 06 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு பத்திரிகை விளம்பரங்களில் பிரசுரிப்பதற்காக ரூபா 515,255 செலவினம் செய்யப்பட்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக 09 விண்ணப்பங்களும் உதவி முகாமையாளர் (நிதி மற்றும் கூட்டிணைப்பு சேவைகள்) பதவிக்காக 12 விண்ணப்பங்களும் கிடைத்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் உதவி முகாமையாளர் (காப்புறுதி) பதவிக்காக 2014 ஆம் அண்டின் போது ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் அந்தப் பதவி மீண்டும் வெற்றிடமாக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 ஒக்தோபர் 22 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 29 சதவீதம் முதல் 1176 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 தீர்வுகாணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

---

கொழும்பு கோட்டைக்கு அண்மித்ததாக 1996 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பயங்கரவாத குண்டு வெடிப்புக்களில் பாதிப்பிற்குள்ளாகிய வணிக நிறுவனங்களை மீளக்கட்டியெழுப்புவதற்காக நிதியத்தின் கீழ் வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம், சிவில் பிணக்குகள் மற்றும் பயங்கரவாத நிதியத்திலிருந்து 2 சதவீத இலகு வட்டி வீதத்தின் கீழ் ரூபா 1,500 மில்லியன் வழங்குவதற்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 07 நிறுவனங்களுக்கு 19 சந்தர்ப்பங்களில் ரூபா 1,789.48 மில்லியன் வழங்கப்பட்டமையின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 289.48 மில்லியன் கடன் தொகையாக வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தக் கடன் தொகையில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய தொகை ரூபா 188.2 மில்லியனாக இருந்ததுடன் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைக்குரிய ரூபா 11,669,029 தொகையை உள்ளடக்கிய 5 சந்தர்ப்பங்களின் போது அந்த கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன் தொகைக்குரிய ரூபா 79,261,218 தொகையான வட்டியை பதிவழிப்பதற்காக அமைச்சரவைக்கு அனுப்பப்படாமல் உரிய கம்பனியின் பணிப்பாளர் சபை மற்றும் நிதி அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ii) இலகு நிபந்தனைகளின் கீழ் மற்றைய தனியார் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் செலுத்துவதற்குள்ள ரூபா 111.53 மில்லியன் தொகையான ஆரம்பப் பணம் அந்தத் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 10.81 மில்லியன் தொகையான வட்டித் தொகைகளில் 50 சதவீதமும், 2013 ஆகஸ்ட் 31 அல்லது அதற்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்துவதாயின் எஞ்சிய நிலுவை வட்டித் தொகையை பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) செலவினக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) பணிக்கொடைக்கான ஏற்பாடு

(ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய வைப்புக்கள்

ஒப்பம்:- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி



# 14. ஒரே பார்வையில் ஒன்பது வருடங்கள்

# ஒன்பதாண்டுப் பொழிப்பு – நிதிச் செயற்றிறன்

*டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்தஆண்டுக்கானது,* *(சகல பெறுமானமும் இலங்கை ரூபாவில்)*

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | | | | | |
| தேறிய தவணைக் கட்டணம வருமானம் | 8,015,628,345 | 5,452,318,662 | 3,886,183,341 | 3,606,365,031 | 3,926,469,856 | 4,019,486,220 | 3,427,950,662 | 2,654,902,681 | 318,902,642 |
| **நன்மைகள், நட்டங்கள், செலவினங்கள்** | | | | | | | | | |
| காப்புறுதி உரிமைக்கோரிக்கைகளும் நன்மைகளும் | (3,899,969,969) | (1,763,476,689) | (2,281,470,751) | (1,879,486,696) | (2,292,072,983) | (2,075,936,806) | (1,736,355,732) | (1,423,044,038) | (242,465,993) |
| | 4,115,658,376 | 3,688,841,974 | 1,604,712,590 | 1,726,878,335 | 1,634,396,873 | 1,943,549,415 | 1,691,594,930 | 1,231,858,643 | 76,436,649 |
| **ஏனைய வருமானம்** | | | | | | | | | |
| முதலீட்டு வருமானம் | 624,075,269 | 691,492,020 | 615,813,544 | 723,412,241 | 798,117,037 | 1,364,459,074 | 1,205,463,441 | 528,264,787 | |
| மென் கடன் மீதான வட்டி | 11,937,931 | 5,915,955 | 7,278,316 | 10,163,846 | 16,982,331 | 15,125,027 | 19,424,829 | 38,713,576 | |
| ஏனைய வருமானம் | 3,902,584 | 4,165,001 | 18,886,182 | 743,614 | 1,006,353 | 471,787 | 917,841 | | |
| | 639,915,784 | 701,572,977 | 641,978,043 | 734,319,701 | 816,105,721 | 1,380,055,889 | 1,225,806,111 | 1,798,837,006 | 76,436,649 |
| **செலவினம்** | | | | | | | | | |
| அலுவலர் குழாத்துடன் தொடர்புபட்ட செலவினங்கள் | 84,790,542 | 76,487,490 | 72,006,709 | 52,769,174 | 42,326,032 | 33,124,615 | 21,470,147 | 11,500,953 | 1,333,806 |
| நிர்வாகச் செலவினங்கள் | 86,907,163 | 64,621,143 | 74,402,484 | 72,147,229 | 45,136,006 | 49,246,381 | 28,264,346 | 14,142,950 | 1,508,940 |
| நிதி மற்றும் ஏனைய செலவினங்கள் | 1,220,870 | 8,459,075 | 17,258,273 | 21,581,925 | 32,425,697 | 38,401,103 | 5,380,035 | 3,385,205 | 138,170 |
| **மொத்தச்செலவினம்** | 172,918,575 | 149,567,708 | 163,667,466 | 146,498,329 | 119,887,735 | 120,772,099 | 55,114,528 | 29,029,109 | 2,980,916 |
| **வரி** | | | | 108,349,446 | | | | | |
| **செலவிலும் கூடிய வருமானம்** | 4,582,655,585 | 4,240,847,242 | 2,083,023,166 | 2,206,350,261 | 2,330,614,859 | 3,202,833,203 | 2,862,286,514 | 1,769,807,897 | 73,455,733 |

# ஒன்பதாண்டுப் பொழிப்பு - நிதி நிலைமை

**டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு** ( சகல பெறுமானமும் இலங்கை ரூபாவில்)

| **சொத்துக்கள்** | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் | 26,251,881 | 19,317,968 | 24,739,202 | 29,606,877 | 36,096,011 | 43,603,504 | 44,659,781 | 25,240,465 | 1,461,388 |
| நிதி முதலீடுகள் | 9,105,573,879 | 6,667,518,021 | 5,375,914,672 | 4,444,546,262 | 5,574,107,464 | 8,550,206,721 | 7,749,178,616 | 5,449,343,240 | |
| | 9,131,825,761 | 6,686,855,988 | 5,400,653,874 | 4,474,153,140 | 5,610,203,475 | 8,593,810,225 | 7,793,838,397 | 5,474,583,705 | 1,461,388 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | | | |
| வருமதிகள் | 1,416,831,322 | 1,686,049,990 | 1,664,647,836 | 1,927,814,565 | 1,945,815,895 | 2,079,570,419 | 1,988,501,988 | 2,221,955,826 | 511,844,970 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 278,096,913 | 305,495,813 | 103,641,397 | 3,542,969,945 | 3,594,104,553 | 110,173,003 | 239,795,258 | 560,259,122 | 13,357,202 |
| | 1,694,928,235 | 1,991,545,803 | 1,768,289,233 | 5,470,784,510 | 5,539,920,448 | 2,189,743,421 | 2,228,297,246 | 2,782,214,948 | 525,202,172 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 10,826,753,995 | 8,678,381,792 | 7,168,943,107 | 9,944,937,649 | 11,150,123,923 | 10,783,553,646 | 10,022,135,643 | 8,256,798,953 | 526,663,560 |
| **உரிமை முதலும் பொறுப்பு முதலும்** | | | | | | | | | |
| திரண்ட நிதியம் | 7,723,034,946 | 6,950,664,274 | 5,912,918,517 | 8,497,449,707 | 9,695,467,155 | 9,364,852,783 | 8,412,019,580 | 6,583,508,929 | 94,102,009 |
| | 7,723,034,946 | 6,950,664,274 | 5,912,918,517 | 8,497,449,707 | 9,695,467,155 | 9,364,852,783 | 8,412,019,580 | 6,583,508,929 | 94,102,009 |
| **தொழில்நுட்ப ஒதுக்கு** | | | | | | | | | |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணம் | 2,128,642,612 | 1,622,656,295 | 1,059,398,308 | 963,443,837 | 821,564,804 | 1,046,825,276 | 1,063,317,772 | 877,695,727 | |
| பிற்போடப்பட்ட தரகு | (366,621,700) | (199,173,169) | (176,532,688) | (161,486,715) | (139,745,300) | (200,139,536) | (206,999,340) | (161,317,228) | |
| | 1,762,020,912 | 1,423,483,136 | 882,865,620 | 801,957,122 | 681,819,505 | 846,685,740 | 856,318,432 | 716,378,499 | |
| **பொறுப்பு** | | | | | | | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | | | | | | |
| அரசாங்க மானியம் | - | 66,960 | 66,960 | 142,150 | 284,330 | 719,190 | 719,190 | 719,190 | 719,190 |
| சென்மதி இலாபத் தரகு | - | 12,287,375 | 12,287,375 | 12,287,375 | 12,287,375 | 63,762,150 | 113,635,474 | 83,722,067 | |
| | | 12,354,336 | 12,354,336 | 12,429,525 | 12,571,705 | 64,481,340 | 114,354,664 | 84,441,257 | 719,190 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | | | | | |
| சென்மதி உரிமைக் கோரிக்கை | 1,111,616,732 | 273,060,335 | 286,078,049 | 392,410,772 | 518,000,207 | 329,449,921 | 333,321,632 | 602,777,397 | |
| ஏனைய சென்மதிகள் | 230,081,405 | 18,819,722 | 74,726,585 | 240,690,522 | 242,265,350 | 178,033,863 | 306,121,335 | 269,692,571 | 431,842,361 |
| | 1,341,698,137 | 291,880,056 | 360,804,635 | 633,101,294 | 760,265,557 | 507,533,784 | 639,442,967 | 872,469,968 | 431,842,361 |
| **மொத்த உரிமை முதலும் பொறுப்புக்களும்** | 10,826,753,995 | 8,678,381,792 | 7,168,943,108 | 9,944,937,649 | 11,150,123,923 | 10,783,553,647 | 10,022,135,643 | 8,256,798,653 | 526,663,560 |



# 15. கூட்டுரிமைத் தகவல்கள்

- ***நிறுவனத்தின் பெயர்:***

***தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை***

- ***சட்ட உருவாக்கம்***

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட சபை

- **அலுவலக முகவரி**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

இல. 97, மருதானை வீதி,

கொழும்பு 10

- **கணக்காய்வாளர்:**

கணக்காய்வாளர் நாயகம்

- **வங்கியாளர்:**

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி